கடல் உணவின் களஞ்சியம்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட

Kasturi Limited

IMPORT & EXPORT

290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.

Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827

Mobile: 0958 246580



France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 4 09 - 15 ஏப்ரல் 1998 முழக்கம்: 169



மேற்கு லண்டன் மாநகரில்

துவாரகா

Cash & Carry

இல்லை என்பது இங்கில்லை

N°: 199, The BROADWAY, Southall, Middx.

T.P: 0181 / 813 9126


## குடாநாட்டு இராணுவப் பிடியை அகற்றுவோம்

### விடுதலைப் புலிகளின் யாழ் தளபதி

'விடுதலைப் புலிகள் இப்பொழுது வடமராட்சி கிழக்கிலும், புங்குடுதீவிலும் நிர்வாகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறான நிர்வாகக் கட்டமைப்பு ஏனைய பகுதிகளுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு இராணுவத்தின் பிடி முற்றாக அகற்றப்படும்'.

இவ்வாறு வடமராட்சி நாகர் கோயில் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் தளத்திற்கு இன்று விஜயம் செய்த செய்தியாளருக்கு விடுதலைப் புலிகளின் யாழ். தளபதி வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் தெரிவானவர்கள் தமிழ் மக்களுக்கோ அல்லது யாழ்ப்பாணத்திற்கோ ஒன்றையும் செய்துவிடப்போவதில்லை. எமக்கு தன்னாட்சி உள்ள அரசு அமையும்பொழுதே இப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும். யாழ். மக்கள் இன்று சிறீலங்கா இராணுவ இயந்திரத்தின்பிடியில் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். இந்த நிலைமைக்கு தீர்வுகாணும் முகமாக நாம் குடாநாட்டில் எமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி இராணுவத்தின் பிடியை அகற்றுவோம். எனவே யாழ் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். சிறீலங்கா இராணுவ நிலைகளுக்கு அருகில் வசிப்பதை அவர்கள் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எம்மீது அழுத்தம் பிரயோகிப்பதாக நினைத்து சிறீலங்கா அரசு பல தடைகளை தற்பொழுது குடாநாட்டில் நடைமுறைப் படுத்தியுள்ளது. ஆனால் இத் தடைகள் எமக்கு பாதிப்பு எதனையும் ஏற்படுத்தப் போவதில்லை. மாறாக: நாங்கள் எமது தாக்குதல்கள் மூலம் சிறீலங்காப் படையினரிடமிருந்தே அவற்றைப் பெற்றுக் கொள்வோம்.

சிறீலங்காப் படைகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள மருத்துவத் தடை பற்றிக் கூறுகையில், எம்மிடம் தற்பொழுது முழு நிலையான மருத்துவக் குழுக்கள் உள்ளன. இவர்கள் எந்த நிலையிலும் பணிபுரிய பயிற்றப்பட்டவர்கள். எனவே இத்தடைகள் எமக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. இவற்றால் மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் எனக் குறிப்பிட்ட தளபதி, வடமராட்சி கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக தனது செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார்.




## தென்மராட்சி ஆறு காவலரண்களும் ஒரு மினி முகாமும் நிர்மூலம்

தென்மராட்சிப் பகுதியில் மிகவும் பாதுகாப்பானதென கருதப்பட்ட சிறீலங்கா இராணுவ வலையமொன்று விடுதலைப் புலிகளின் கொமாண்டோ தாக்குதல் அணியினரால் கடந்த 5-ம் திகதி அதிகாலை அழிக்கப்பட்டுள்ளது.

ஆறு காவலரண்களையும் ஒரு மினி முகாமினையும் உள்ளடக்கியதான இவ் இராணுவ வலையம் அழிக்கப்படுவதற்கு முன்னர் அங்கிருந்த ஆயுத தளவாடங்களும் விடுதலைப் புலிகளால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

அதிகாலை 3.15 மணியளவில் ஆனைவிழுந்தான் - பச்சிலைப் பள்ளி பகுதியில் அமைந்திருந்த ஆறு இராணுவ காவலரண்கள் மீது ஏககால தாக்குதலைத் தொடுத்த விடுதலைப் புலிகள் அவற்றினை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் கச்சாய் வெளியிலுள்ள மினி முகாமினை நோக்கி முன்னேறி, அதன் மீது பலத்த தாக்குதலைத் தொடுத்து அதனையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். சுமார் அரைமணிநேரமாக அதனை தமது பிடியில் வைத்திருந்து அங்கிருந்த ஆயுத தளவாடங்களை அகற்றி பின்னர் முகாமினை தீயிட்டு அழித்துள்ளனர்.

இத் தாக்குதல்களில் மொத்தமாக ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்துமுள்ளனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள


(☞ 2ம் பக்கம்)


## யாழ். ஆயர் - பாலசிங்கம் வன்னியில் சந்திப்பு

யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் உள்ளிட்டதான அரசியல் பிரிவு பிரமுகர்களை வன்னியில் சந்தித்து பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

சிறீலங்கா அரசினால் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்வது தண்டனைக்குரிய ஒரு குற்றமாக அறிவிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற ஆயரின் சந்திப்பு கொழும்பில் பெரும் பரபரப்பினையும் தோற்றுவித்துள்ளது.

ஆயருடனான இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு பிரமுகர்களான திரு தமிழ்ச்செல்வன், திரு.விது


(☞ 2ம் பக்கம்)


## தலுவத்தை இருமுறை வவுனியா விஜயம்

ஏப்ரல் 13ம் திகதியுடன் தனது 11வது மாதத்தை நிறைவு செய்யும் ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கையின் எதிர்கால நகர்வினைப் பற்றி களநிலை தளபதிகளுடன் கலந்தாலோசிக்கவென சிறீலங்காவின் இராணுவத் தளபதி ரோகான் தலுவத்தை கடந்தவாரம் இரு தடவைகள் வவுனியா நடவடிக்கைத் தலைமையகத்திற்குச் சென்று திரும்பியுள்ளார்.

நடவடிக்கைத் தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மேஜர் ஜெனரல் சிறீலால் வீரசூரியாவும் கலந்து கொண்டுள்ளார்.

ஜெயசிக்குறுய் நடவடிக்கையை வேகமாக முன்னெடுக்க வேண்டும் என முன்வைக்கப்பட்ட கருத்துக்களை இக் கூட்டத்தில் நிராகரித்த சிறீலால் வீரசூரியா, இராணுவ புலனாய்வுத் தகவல்களின்படி மாங்குளப் பகுதியில் பெருமளவு விடுதலைப் புலிகள் நிலைகொண்டுள்ளதாக குறிப்பிடப்படுவதால் அவசரமாக மேற்கொள்


(☞ 2ம் பக்கம்)


## ஆயுதக் கப்பல் வருகை? கொழும்புத் துறைமுகத்தில் பாதுகாப்பு

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு துறைமுக வளாகப்பகுதி கடந்த வாரம் முதல் மேலும் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இதற்கு கடற்புலிகள் துறைமுகத்தினுள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவார்கள் எனத் தெரிவித்துள்ள போதும் கொழும்பு நோக்கிவரும் ஆயுத விநியோக கப்பல் ஒன்றிற்கான பாதுகாப்பே என பெயர்குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பின் கடற்கரைப் பிரதேசங்களான முகத்துவாரம், காக்கைதீவு, தெகிவளை, வத்தளைப் பகுதிகள் இராணுவத்தின் திடீர் தேடுதல்களுக்கு இலக்காகி ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## மூன்றுமுறிப்பில் கொமாண்டோக்கள் மீது அதிரடி

(05.03.98)

சிறீலங்கா அதிரடிப்படை பிரிவு அணி மீது மூன்றுமுறிப்பு பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதல் ஒன்றினை நடாத்தி


(☞ 2ம் பக்கம்)



லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை

மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்

RATHY JEWELLERS

தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில் சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL

Tel: 0181-903 3063

Fax: 0181-903 9711

Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.

Sunday 12.00 Noon - 6.30 P.M.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

*நிர்வாகி:*
ப. வேலுப்பிள்ளை

*நிறுவக ஆசிரியர்:*
அமரர் க. கஜேந்திரன்

*ஆசிரியர்:*
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804


## லயன் எயார் பயிற்சி விமானம் வீழ்ந்தது

*(06.04.98)*

கொழும்பு இரத்மலானை கடற்கரையில் இன்று காலை பயிற்சியில் ஈடுபட்டிருந்த 'லயன் எயார்' பயிற்சி விமானம் ஒன்று வீழ்ந்துள்ளது. விமானம் விழ்ந்த போதிலும் அதில் பயணம் செய்த விமானியும், தொழில் நுட்பவியலாளரும் காயமடையாது தப்பினர் என சிறீலங்கா விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி விமானம் இருவர் மட்டுமே பயணம் செய்யும் விதத்தில் பயிற்சிகளுக்காகவே தயாரிக்கப்பட்டதாகும். இன்று காலை விமானப். பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை, திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கான விமான சேவையில் 'லயன் எயார்' நிறுவனமே ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

### யாழ். ஆயர்...

ரன், திரு.சுதா ஆகியோர் பங்கெடுத்துக்கொண்டனர்.

யாழ். மக்களுக்கும் வன்னி மக்களுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள இடைவெளி, மூன்றாந்தரப்பு உதவியுடன் விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் ஈடுபடும் சாத்தியக்கூறு ஆகிய விடயங்கள் பற்றி ஆயர் இச் சந்தர்ப்பத்தில் எடுத்துரைத்த அதேவேளை, சிறீலங்கா அரசு நினைப்பதுபோல விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியிலோ அன்றி அரசியல் ரீதியிலோ பலவீனப்படுத்த முடியாது என்ற கருத்தினை புலிகளின் அரசியற் பிரிவினர் எடுத்துக் கூறியதுடன், மூன்றாந் தரப்பு ஒன்றின் உதவியுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க சிறீலங்கா அரசு போடும் முட்டுக்கட்டைகளையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னதாக யாழ். ஆயர் 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையினால் வன்னியில் மக்கள் படும் அவலங்களையும் பார்வையிட்டுள்ளார்.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

### மூன்றுமுறிப்பில்...

படைத்தரப்பிற்கு உயிர்ச் சேதத்தினை ஏற்படுத்தியதுடன் 40 மி.மீ. கிரனைட் லோஞ்சர் ஒன்றையும் நான்கு கிளைமோர் கண்ணிகளையும் கைப்பற்றியுள்ளனர். இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் இரண்டாம் லெப்டினனான செந்தமிழன் வீரச்சாவடைந்ததாக புலிகளின் குரல் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று மாலை மாங்குளத்தின் சுற்றுப்புறப் பகுதியில் வைத்து இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் ஒன்றினை நடாத்தியுள்ளனர். படைத்தரப்பின் சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

### தலுவத்தை...

ளப்படும் எந்த இராணுவ முன்னெடுப்புக்களும் பெரும் அழிவில் முடியுமென தெரிவித்துள்ளதுடன், நிலைமைக்கு ஏற்றவாறு பொதுவாகவே செல்லமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

## சார்ள்ஸ் அபயசேகரா காலமானார்

சிறீலங்காவில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக பல வருடங்களாகக் குரல் கொடுத்த சார்ள்ஸ் அபேயசேகரா அவர்கள் கடந்த 3-ம் திகதி காலமாகியுள்ளார்.

1989/90-ம் ஆண்டு ஜே.வி.பி. இயக்கத்தில் போராட்டம் நடைபெற்ற வேளையில் தென்பகுதி மக்களுக்காக குரல் கொடுத்த அபயசேகரா, மனித உரிமை இயக்கங்கள் MIRJE, INFORM, MDDR ஆகியவற்றின் ஸ்தாபகருமாவார்.

இவர் 1995-ம் ஆண்டில் விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா அரசு பேச்சுக்கள் நடாத்திய போது அரச தரப்புக் குழுவில் ஒரு அங்கத்தவராக இருந்தவர்.

இவரது மரணம் தொடர்பாக 'தமிழர் தகவல் நடுவம்' அஞ்சலிச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

## கரையொதுங்கிய மீனவர் சடலம்

*(06.03.98)*

முல்லை கடற் பரப்பில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற மீனவர் படகுகள் மீது நேற்று சிறீலங்கா கடற்படையினர் தாக்குதலை நடாத்தியதில் காணாமற் போன மூன்று மீனவர்களில் ஒருவரது சடலம் இன்று காலை கரையொதுங்கியுள்ளது.

இதேவேளை இன்று இம் மீனவர்களைத் தேடி சென்ற ஏனைய மீனவர்கள் கடலில் எரிந்த நிலையில் காணப்பட்ட அவர்களது படகினை மீட்டு வந்துள்ளனர். இப் படகினுள்ளே சிதறிய தசைத்துண்டுகளும், எலும்புகளும் கிடக்கக் காணப்பட்டுள்ளன.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

### தென்மராட்சி...

இராணுவ முகாம்களுக்கு ஓடித் தப்பியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இம் மினிமுகாம் இருந்த வேளையில் அதனை மீட்பதற்கென அருகிலுள்ள முகாமிலுள்ள இராணுவத்தினர் அப்பகுதிக்கு வந்தபோதிலும் விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதல் காரணமாக தமது இலக்கினை கைவிட்டுச் சென்றுவிட்டனர்.

இந்த அதிரடித் தாக்குதலில் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

## உக்கிரேனிலிருந்து நான்கு MI-24 உலங்குவானூர்திகள்

சிறீலங்கா விமானப்படையின் தாக்குதல் கலங்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை ஈடு செய்யும் நோக்குடன் சிறீலங்கா அரசு மேலும் நான்கு MI 24 ரக உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்ய முடிவெடுத்துள்ளது.

இதற்காக அண்மையில் உக்கிரேன் நாட்டுக்கு சென்ற குழு இவற்றிற்கான ஒப்பந்தங்களை முடித்துவிட்டு கொழும்பு திரும்பியுள்ளது. இதன்படி முதற்கட்டமாக இரண்டு உலங்குவானூர்திகள் விரைவில் வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வகை உலங்குவானூர்திகள் இரண்டு அண்மையில் விடுதலைப் புலிகளினால் சுட்டுவீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


**வாணன் வாகன சேவை**

உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

Tel: 01 42 52 06 80 /
01 48 05 21 63 /
06 09 26 88 35



**பரதநாட்டிய அரங்கேற்றம்**



கலாலயம் கலைக் கல்லூரியின் அதிபர்
பரதசூடாமணி ஸ்ரீமதி
கௌசல்யா ஆனந்தராஜாவின் சிஷ்யையும்
எமது செல்வப் புதல்வியுமான
செல்வி ஜெஸ்லிஸ்ரா ஜெயானந்தன்
அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்
12.04.98 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு
நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள்
வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பித்து,
செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

இடம்: 'Theatre Hebertot'
78bis, bld Batignolles
75017 Paris. (M°: Rome)

*திரு.திருமதி ஜெயானந்தன்.*



புதிய வரவு — உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

**ERRANCES TRAVELS**

**Tel: 01 42 09 70 00**

Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc, 75010 Paris.

M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,400 Frs. |
| Madras | - | 3,600 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# யாழ். செய்திகள்

## மிதிவெடிகளினால் தினமும் அங்கங்களை இழக்கும் பொதுமக்கள்

மிதிவெடிகளினால் தமது அவயவங்களை இழப்பவர்களது எண்ணிக்கை குடாநாட்டில் அதிகரித்து வருகின்றது. மாதாந்தம் குறைந்தது இருபது பேர் மிதிவெடிகளினால் பாதிக்கப்பட்டு வருவதாக வைத்திய சாலை புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

கடந்த செவ்வாய் அன்று குப்பிளான், ஏழாலை பகுதியில் விறகு எடுக்கச் சென்ற இளைஞன் ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது இடது காலை முழங்காலுடன் இழந்துள்ளார். இச் சம்பவத்தில் ஏழாலை தெற்கைச் சேர்ந்த டானியல் காந்தரூபன் (20) என்ற இளைஞனே காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த புதன் அன்றும், வசாவிளான் பகுதியில் உள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்ற தம்பிராசா பாலசுப்பிரமணியம் (43) என்பவரும் மிதிவெடியில் சிக்கி படுகாயம் அடைந்துள்ளார். இதே வேளை குடாநாட்டில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்ற ஐ.நா. சபைக்கு (U.N.D.P) நிபந்தனையுடன் கூடிய அனுமதியே சிறீலங்கா இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளதாக வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் எம். ஓபடகே தெரிவித்துள்ளதாக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## பரீட்சை எழுதச் சென்ற பரீட்சாத்திகள் அதிர்ச்சி!

சிறீலங்கா உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சை ஒன்றில் பரீட்சை எழுதச்சென்ற பரீட்சாத்திகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட இரண்டாம் வருட உயர் தேசிய வணிகவியல் டிப்ளோமா கல்வி நெறிக்கான பரீட்சைக்குச் சென்றவர்களுக்கே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட்டதாகவும், ஆனால் பரீட்சைக்குச் சென்றபோது, கணக்கியல், பொருளியல் வினாத் தாள்கள் ஆங்கில மொழியில் இருந்ததனாலேயே இவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதன்பின் இவர்கள் பரீட்சை எழுதாமல் பெரும் குழப்பத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர்.

## அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்திக்க ஓபடகே மறுப்பு

யாழ். குடாநாட்டில் பொது மக்கள் அனுபவித்துவரும் கஷ்டங்கள், பிரச்சினைகள் பற்றி ஆராய எனக் கூறி யாழ். வந்த வட மாகாணத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள எம். ஓபடகே அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்திக்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபர் ஊடாக அவரை சந்தித்து, மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல முயற்சி செய்தபோதும், அவர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்திக்க முடியாது என மறுத்துவிட்டதாக தெரியவருகிறது. இதேவேளை, யாழ். குடாவில் உள்ள வெளிநாட்டு தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியதாகவும் கூறப்படுகிறது.

## இயங்கமுடியாத நிலையில் நூற்றுக்கணக்கான பாடசாலைகள்

யாழ். குடாவின் சிறீலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்த பின்னர் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் இயங்கமுடியாமல் கைவிடப்பட்டுள்ளன.

பாடசாலைகளை இராணுவ முகாமாக மாற்றியமையாலும், இராணுவ பாதுகாப்பு வலயங்களுக்குள் பாடசாலைகள் அமைந்திருப்பதனாலேயுமே இப் பாடசாலைகளை நடாத்த முடியாமல் இருக்கின்றன. இவ்வாறு இராணுவத்தினரின் அதி உயர் பாதுகாப்பு காரணங்களுக்காக தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, வசாவிளான் இந்துக் கல்லூரி என்பன மூடப்பட்டுள்ளனவற்றில் அடங்குகின்றன.

இதேவேளை புங்குடுதீவில் இயங்கிவந்த 15 பாடசாலைகளில் 1990 ஆண்டிற்கு பின்னர் நான்கு பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன. மேலும் இப் பாடசாலைகளில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. அதனால் பாடங்கள் ஒழுங்காக நடாத்த முடியாமையால் மாணவர்களின் வருகையும் நாளாந்தம் வீழ்ச்சியடைந்து செல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## விளம்பர சுவரொட்டிகளை கிழித்தெறிந்த படையினர்

யாழ். குடாநாட்டில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படையினர் தேடுதல்களையும் விசாரணைகளையும் அதிகரித்து வருகின்றனர். மக்கள் கூடும் இடங்களிலும், இராணுவ தடை முகாங்களுக்கு அருகிலும் அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளினால் அதிகமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவதனாலேயே இத் தேடுதல்களும் விசாரணைகளும் அதிகரித்துள்ளன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் வீதியொன்றில் பலவர்ண மைகளினால் எழுதி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் இராணுவத்தினரால் வேகமாகக் கிழித்தெறியப்பட்டன. அதன் பின்னரே கிழித்தெறியப்பட்டவை விளம்பர சுவரொட்டிகள் என்றும், மொழி தெரியாததால் இராணுவத்தினர் புலிகளினுடையது என நினைத்து கிழித்தெறிந்துள்ளனர் என்றும் தெரிய வந்தது.

## 'சிறையில் எனக்குப் பாதுகாப்பில்லை அதனாலேயே தப்பிச் சென்றேன்' கிருஷாந்தி கொலை வழக்கின் எதிரி

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி சிறீலங்கா இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கின் எதிரிகள் இருவர் தப்பியோடியமை தெரிந்தது.

கடந்த மாதம் 18ம் திகதி வழக்கு விசாரணைக்கு என நீதிமன்றம் கொண்டுவரப்பட்ட போது தப்பியோடிய இருவரில் ஒருவர் சிறீலங்கா பொலிசாரிடம் சரணடைந்துள்ளதாக தெரிய வருகிறது.

இப்படுகொலை சம்பவத்தின் உண்மை வெளிவரும்பட்சத்தில் வெலிக்கடை சிறைச் சாலையில் தனது உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்பதாலேயே தாம் தப்பியோடியதாகவும், தனக்கு நீதிமன்றம் பாதுகாப்பு தரும் பட்சத்தில் சரணடைய தயார் எனவும் நீதிமன்றத்திற்கு கடிதம் அனுப்பியிருந்தனை அடுத்தே நீதிமன்றம் இவர் உயிருக்கு பூரண பாதுகாப்பு வழங்கும் என பதில் கடிதம் அனுப்பியிருந்தது. இதனை அடுத்தே இவர் கடந்த புதன் அன்று பொலிசில் சரணடைந்துள்ளார்.

## வலிகாமம் படையினரால் சுற்றிவளைப்பு மாதகலில் மீண்டும் மீன்பிடித் தடை

முகமூடி அணிந்த நான்கு தலையாட்டிகள் சகிதம் சிறீலங்கா இராணுவத்தினர் வலிகாமப் பகுதியில் பெரும் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டுள்ளனர். மானிப்பாய், ஆனைக்கோட்டை, கூளாவடி, நவாலி ஆகிய இடங்களை கடந்த 2-ம் திகதி அதிகாலை சுற்றி வளைத்த படையினர், பொதுமக்களை மானிப்பாய் பாடசாலைகளுக்குக் கொண்டு சென்று அங்கு அவர்கள் மீது கடுமையான விசாரணைகள் மேற்கொண்டனர்.

பிற்பகல் இரண்டுமணிவரை இவ் விசாரணைகள் நடைபெற்றுள்ளன. இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுடைய சரியான தொகை இதுவரை தெரிய வராத போதிலும் தலையாட்டிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட ஒருசிலர் கொண்டு செல்லப்பட்டதாக விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மாதகல் கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கு சிறீலங்காப் படையினர் மீண்டும் தடைவிதித்துள்ளனர்.

கடந்த ஜனவரிமாத இறுதியில் தளர்த்தப்பட்ட இத் தடை உத்தரவினை மீண்டும் இராணுவம் நடைமுறைப்படுத்தியுள்ளதால் 150 இற்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்தை இழந்துள்ளனர்.

## பனங்கூடலுக்குள் இறந்துகிடந்த குழந்தை

புன்னாலைக்கட்டுவன் தெற்கில், பனங்கூடல் ஒன்றுக்குள் கடந்த 30ம் திகதி அன்று இறந்த நிலையில் ஆண் குழந்தை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. பிறந்து சில நாட்களே இருக்கக்கூடிய இக் குழந்தை 'பொலித்தீன்' பையொன்றில் கட்டி பனங்கூடல் ஒன்றினுள் வீசியெறியப்பட்டிருந்தது.

இந்தக் குழந்தை கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு 'ஆட்டோ' ஒன்று வந்து சென்றதை சிலர் கண்டதாகவும், அவ் 'ஆட்டோ'வில் வந்த பெண் ஒருவரே தனது குழந்தையை வீசிச் சென்றிருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இலண்டனில்
நகைத் தெரிவுகளுக்கு
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887

வெளிவந்துவிட்டது
பாலம்
மாசி 1998

வீடுகள் வாடகைக்கு
**பாரிஸ் 8-ல்** M°: Rome அல்லது Europe க்குமிகவும் அருகாமையில் நல்ல நிலையில் உள்ள (15 M²) இட வசதி கொண்ட Studio வீடு வீட்டுத் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. வாடகை **2250 Frs C.C** மட்டும் அத்துடன் Ascenseurs + Gardien உண்டு.
Colombes (92) இல் S.N.C.F இற்கு மிகவும் அருகாமையில் 2 Pieces வீடு வாடகைக்கு உண்டு. வாடகை **3255 Frs C.C**
சகல தொடர்புகளுக்கும்: **சிவா**
Tel: 01 46 71 66 91 / Mobil: 06 09 91 12 66

# மாகாணசபைத் தேர்தல் களங்களும் ‘ஊமைக்கோட்டான்’ அரசியலும்

கடந்தவாரம் கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலுள்ள சந்து, பொந்துகளில் எல்லாம் ஓங்கி ஒலித்த பேரினவாதக் குரலாக ‘ஒயா தெமிலத’ (நீ தமிழனா) அமைந்திருந்தது. சிறீலங்காப் படைகளின் சகல பிரிவுகளும் கொழும்புத் தமிழர்களை பயங்கரவாதிகளாக நோக்கி கைது செய்து தமது வலைக் கூடுகளுக்குள் அடைத்து வரும் இந்த ‘ஆள் பிடிப்பு’ தொடர்ந்து நடந்துவருகின்ற போதிலும், கடந்த வாரம் சிறீலங்கா இராணுவ பிரிவுகளில் அடித்த இப் ‘பயங்கரவாதக் காச்சலில்’ சுமார் 6700 தமிழர்கள் சிக்கிவிட்டனர்.

சிக்கியவர்களுக்காக குரல் கொடுக்க எந்த ‘பிரகிருதிகளும்’ உடனடியாக முன்வரவில்லை. ஜனநாயக நீரோட்டத்தில் தாம் இணைந்துவிட்டதாக ‘பேத்தல்’ கதைகளை அடிக்கடி கூறிவரும் தமிழ் குழுக்கள் இக் கைதுகள் குறித்து அடக்கி வாசித்து தாம் ஒரு அரசியல் ‘ஊமைக் கோட்டான்கள்’ என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர். ஆனால், கூட்டணியினரோ சிறீலங்காவின் சட்டமா அதிபர் சரத்சில்வாவின் ‘உறுதி மொழியான’ தமிழர்களை கைது செய்வது இனிமேல் ‘தேவையற்ற’ முறையில் நடைபெறாது என்ற சொற்தொடரை இன்னமும் நம்பி அறிக்கை ஒன்றினை வழமைபோல் விடுத்துள்ளனர். இதில் வேடிக்கையான விடயம் என்ன என்றால் தமிழ் மக்களுடைய அபிலாஷைகளுக்காக அரசியல் நடவடிக்கையை முன்னெடுத்த தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் நடந்த கடந்த வாரம் தான் அவர் வழியில் அரசியல் நடத்துவதாக அடிக்கடி அழுத்திக் கூறிக்கொள்ளும் கூட்டணியினர் இன்னமும் சிறீலங்கா அரசின் வெற்றுவாக்குறுதிகளை தூக்கிப்பிடித்துக் . கொண்டு அரசியலோச்சிக்கொண்டிருக்கிறார்கள்.

சாதாரண ஒரு தமிழ் பாமரனின் சுய சிந்தனையில் எழும் ‘இன கௌரவம்’கூட இவ் அரசியல் கனவான்களின் தலைகளில் இன்னமும் ஏறவில்லை என்பதை உணரக்கூடிய அதே வேளை தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்ற தளத்தில் நின்று இவர்களின் அரசியலை உற்றுநோக்கினால் அதில் கவலைப்படுவதற்கு ஏதும் இல்லை என்பதையும் மறுக்க முடியாதுதான்.

கொழும்பு தமிழ் அரசியல்வாதிகள் நிலை இப்படியானால் சிறீலங்கா அரசியல்வாதிகளோ மாகாணசபைத் தேர்தல் என்ற இலக்கினைவைத்து தமது தடையோட்டப் பந்தய ஆரம்பக் கோட்டிற்கு வந்துவிட்டார்கள். இந்த தடையோட்டத்தில் எவன் காலைவாரலாம் என்ற அடிப்படையில் இரு பேரினவாதக் கட்சிகளும் கூட்டம் சேர்ப்பதில் ஈடுபட்டுள்ளன. இம்முறை நடக்கும் தேர்தல் திருவிழாவின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி வசமுள்ள மாகாணசபைகளை பிடுங்க வேண்டும் என்ற கணிப்புடன் பொதுஜன முன்னணியும்; ஜெயசிக்குறுய் தோல்வி, பொது ஜன ஐக்கிய முன்னணி மேலுள்ள மக்கள் எதிர்ப்பு அலை ஆகியவற்றை பயன்படுத்தி பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிடியிலுள்ள இடங்களை பிடுங்க வேண்டும் என்று ஐ.தே.கட்சியும் காய்களை நகர்த்த முயல்கின்றன.

இக்காய் நகர்த்தலில் துருப்புக் காய்களாக இடம்பெறப் போபவர்களில் இருவர் முக்கியமானவர்கள். சந்திரிகாவின் அக்கா சுனேத்திரா பொதுஜன ஐக்கிய முன்னணியின் தரப்பிலும், சந்திரிகாவின் முன்னாள் கூட்டு தோழியான சிறீமணி அத்துலத்முதலி ஐக்கிய தேசியக் கட்சி தரப்பிலும் இடம்பெறப் போகிறார்கள் என்பதான கதைகள் தற்போது கொழும்பில் அடிபடதொடங்கி விட்டன.



தனது அக்காள் கட்சிக்குள் நுழைவது தொடர்பான விடயங்களை இறுதிநேரம்வரை வெளிவராமல் பாதுகாக்கும்படி சந்திரிகா தனது கட்சி தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளதுடன், தனது தாயாரின் ‘பிரதம’ இடத்திற்கு பொருத்தமான காயை தெரிவு செய்வதில் அக்கறை காட்ட தொடங்கி.

இது தொடர்பாக பேச்சுக்களை நடத்த தாயாரின் ‘றொஸ்மிட் பிளேஸ்’ இல்லத்திற்கு சந்திரிகா அடிக்கடி போய்வருகின்றார். இவ்வாறாக நடைபெற்ற ஒரு விஜயத்தில் தனது தாயார் தலைமையில் கண்டியில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் மிகக் குறைந்தளவு மக்களே கலந்து கொண்டதை முன்னுதாரணமாகக் காட்டி பிரதமர் பதவிக்கு நல்ல கவர்ச்சிகரமான ஒருவர் தேவை என்பதை தாயாரிடம் கூறியுள்ளார்.

தற்போதைய பிரதமர் கதிரைக்கான போட்டியாளர்களாக ரத்வத்தை, லஷ்மன் கிரியெல்ல, டி.எம். ஜெயரத்தினா ஆகியோர் ஆயத்தமாக உள்ளதாக பேசிக் கொள்கிறார்கள். முன்னர் இருந்த போட்டியாளரான கதிர்காமர்பற்றி தற்போது யாரும் பேசக்காணோம்.

பொதுஜன முன்னணியின் கூத்துக்கள் இப்படி இருக்க ஐ.தே. கட்சிக்குள் புகைந்து கொண்டிருக்கும் விஜபால மெண்டிசின் விவகாரம் தொடர்ந்தும் பெரும் கயிறிழுப்பாகவே உள்ளது. மெண்டிஸ் விவகாரத்தில் ரணில் எடுக்கும் முடிவே இறுதியானதென கட்சிக்குள் குரல்கள் கொஞ்சம் ஓங்கும் அதேவேளை சகல ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனது தரப்பு விளக்கக்கடிதம் ஒன்றினை மெண்டிஸ் அனுப்பியுள்ளார். இதன்படி மெண்டிஸ் விரைவில் லண்டனுக்கு சென்று அங்கிருந்து தனது ராஜினாமாவை சமர்ப்பிப்பார் என தெரியவருகிறது. ரணிலும் ஏப்ரல் 11ல் சீனாவிற்கு செல்ல உள்ளதால், அங்கிருந்து அவர் திரும்பிய பின்பே மெண்டிஸ் விவகாரம் சூடுபிடிக்கும். சீனா செல்ல முன்னர் ரணில் பிரேமதாசாவின் மகனான சஜித்திடம் விளக்கம் கோரும் நிகழ்வு அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அநுரா - ரொணி மோதலில் அநுராவிற்கு ஆதரவாக சஜித் அறிக்கை விட்டதே இவ் விளக்கம் கோருதலுக்குக் காரணம்.

இப்பொழுது கொழும்பு அரசியலில் முன்னாள் கொழும்பு மேயர் கணேசலிங்கம் ‘தலைப்பாகை’ ஒன்றிற்கு அலைந்துதிரிவதும் ஒரு உபரிக்காட்சியாக மாறிவிட்டது. தற்போதைய மேயரான கரு ஜெயசூரியா (ஐ.தே.க)-விற்கு எதிரான பிரச்சாரக் களத்தில் நிற்கும் கணேசலிங்கம் தனக்கு கோஷ்டி சேர்ப்பதில் முனைப்புடன் இருந்தாலும் அது வெற்றிபெறுமா?. என்பது தான் கேள்விக்குறியாக உள்ளது.

இந்த உள்ளூர் அரசியல் ‘கீச்சுமாச்சு தம்பலங்களுக்கிடையில் புத்தாண்டு விசேட காட்சியாக அமெரிக்காவின், ஐ.நா தூதுவர் பில்றிட்சாட்சன் அவர்களினதும், பிரித்தானிய ராஜாங்க அமைச்சர் டேட்ரிக்பக்சேட் அவர்களினதும் கொழும்பு விஜயம் அமையப்போகிறது. ஏப்ரல் 18-ல் கொழும்புவர திட்டமிட்டுள்ள றிட்சாட்சனின் விஜயம் அமெரிக்க உயர்நிலை பிரமுகர் ஒருவரது சிறீலங்கா வருகை என்ற முக்கியத்துவத்துடன் இந்திய துணைக்கண்டத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களுடனும் ஒப்பிடும்போது ஒரு ‘காத்திரமான’ விஜயம் என்பது மறுப்பதற்கில்லை. அதேவேளை பிரித்தானிய தரப்பு வருகை விடயத்தை விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடாத்தத் திட்டம் என்ற ஊகங்களுக்கு கொழும்புப் பத்திரிகைகள் இடம்கொடுத்துள்ளன. கொழும்புப் பத்திரிகைகளின் இப் புத்தாண்டு ஊகங்கள் சரியா, பிழையா என்பது ஒருசில தினங்களில் புரிந்துவிடுமல்லவா.

— பேம்பி

## விலையான எயார் லங்கா

கொழும்பில் கடந்தவாரம் அரசியல்வாதிகளின் கண்களுக்குள் குத்திய இன்னொரு விடயாக எயார் லங்கா விமானத்தின் தனியார் மயப்படுத்தும் திட்டம் சிக்கிவிட்டது.

ஏயார்லங்கா விமானசேவையின் 40 வீதமான பங்குகள் தற்பொழுது அரபுலகின் ஏமிரேட் விமான சேவைக்கு விற்கப்பட்டதானது தேசிய சொத்து ஒன்றை அன்னிய நாட்டுக்கு தாரைவார்க்கும் செயலென எதிர்கட்சி அரசியல்வாதிகள் ஒருபிடி பிடித்த வேளை, அரசதரப்பினரோ தற்போதைய பொருளாதாரக் கொள்கையின்படி எயார் லங்காவின் பங்குகளை வெளிநாட்டிற்கு விற்பது பொருளாதார லாபங்களை அடைய வழிவகுக்கும் எனக் கூறியுள்ளனர். இவ்வளவு நாளும் எயார்லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் இருந்த ஏழுபேரும் எயார் லங்காவினாலேயே நியமிக்கப்பட்டு வந்தனர். இனி வரும்காலங்களில் நால்வர் மட்டுமே எயார்லங்கா நிறுவத்தினால் நியமிக்கப்படுவர்.

## புத்தாண்டுப் பரிசுகள்

தற்பொழுதுள்ள கொழும்பு நிலமைகளைப் பார்க்கும் போது புத்தாண்டு காலப்பகுதி பெரும் முடக்கநிலை ஒன்றுக்கு தள்ளப்படும் எனத் தெரியவருகிறது.

புகையிரத ஊழியர்கள், தாதிமார், அஞ்சல் ஊழியர்கள், வங்கி ஊழியர்கள் ஆகியோரின் தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்க முனைந்துள்ளது நிச்சயமாக அரசுக்கு இனிக்கும் புத்தாண்டு செய்தியாக இருக்கப் போவதில்லை.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்
கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் சத்துணவு நிதிக்காக
ஞானம் - சக்தி - குமார்ஸ் - வூட்லன்ஸ் ஆதரவில்
ஈழமுரசு நடாத்தும்
இசைமுரசு 98
இசை நிகழ்ச்சி
ஈழநிலா இசையில் சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி
30 இற்கும் மேற்பட்ட புதிய பாடகர்களின் அறிமுகம்
காலம்: 17.05.1998 ஞாயிறு மாலை 5.00 மணி
இசைமுரசு 98
AMORC
199 bis, Rue St. Martin,
75003 Paris
(M°: Rambuteau /
Etienne Marcel)

# திருமலை தோப்பூர் பொலிஸ் நிலையம் புலிகளிடம் வீழ்ந்தது!

திருமலை மாவட்டத்தின் தோப்பூர் பகுதியிலுள்ள சிறீலங்கா பொலிஸ் காவல் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகளின் அதிரடிப் பிரிவினர் கடந்த 2-ம் திகதி தாக்குதலை நடாத்தி அதனை தமது கரங்களில் வீழ வைத்தனர்.

அதிகாலை 12.30 மணியளவில் இப் பொலிஸ் நிலையத்தின் மீது இரு முனைகளிலிருந்து தாக்குதலை தொடுத்த புலிகள், சுமார் 20 நிமிடத்தின் பின்னர் நிலையத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஆயுத தளவாடங்களைக் கைப்பற்றி பொலிஸ் நிலையவளவில் தரித்திருந்த பேருந்து வண்டியொன்றில் ஏற்றி அப்புறப்படுத்திய பின்னர் கட்டடங்கள் குண்டு வைத்துத் தகர்த்தனர்.

இத் தாக்குதலின் போது பயப்பீதி காரணமாக பொலிசார் சிதறி ஓடிய போதிலும் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் இருவர் தமது கால்களை இழந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் 60 மி.மீ மோட்டார்கள் இரண்டும் அடங்குகின்றன. இத் தாக்குதலைப் பற்றி செய்தி வெளியிட்ட பாதுகாப்பமைச்சு, பொலிஸ் நிலையத்தில் கடமையிலிருந்த பொலிசாரிலும் பார்க்க விடுதலைப் புலிகள் அதிகளவில் வந்து தாக்குதலை நடாத்தியதால் பொலிசார் பின்வாங்கவேண்டி வந்ததாக குறிப்பிட்டுள்ளது.

# வாழைச் சேனையில் படையினர் - புலிகள் மோதல் 4 படையினர் படுகாயம்

வாழைச்சேனையில் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் நான்கு படையினர் படுகாயமடைந்தனர். இவர்களில் இருவரின் நிலைமை மிகவும் ஆபத்தாக உள்ளதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி செய்திகள் வெளிவந்துள்ளன.

கடந்த செவ்வாய் அன்று இரவு 8.30 மணியளவில் வாழைச்சேனை வாவியைக் கடந்து செல்லவரும் விடுதலைப் புலிகளை தாக்குவதற்கென பதுங்கியிருந்த இராணுவத்தினருடனே இம் மோதல் இடம்பெற்றது. சுமார் ஒரு மணிநேரமாக நடைபெற்ற நான்கு படையினர் காயமடைந்தனர். இதேவேளை இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மோதலை அடுத்து, மறுநாள் வாழைச்சேனை பகுதி சிறீலங்கா படையினரின் சுற்றிவளைப்பு தேடுதலுக்கு உள்ளானது. பலர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## கிழக்கில் காணாமற்போனோரின் தொகை 13000!

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஏழு வருடங்களில் சிறீலங்கா படையினரால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பதின்மூவாயிரம் தமிழர்கள் காணாமற் போயுள்ளார்களென தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறீலங்கா பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராஜசிங்கம் கொழும்பில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

1990-ம் ஆண்டு முதல் மேற்கொண்ட இந்த இராணுவ நடவடிக்கைகளில் காணாமற்போன பதின்மூவாயிரம் பேர் தவிர, 8,500 கைம்பெண்களும் பராமரிப்பற்ற ஆறாயிரம் பேரும் உருவாகியுள்ளார்களென்பதையும் சுட்டிக்காட்டிய ஜோசப் பரராஜசிங்கம், கிழக்கின் இன்றைய அவல நிலைகளை விரிவாக எடுத்துரைத்ததுடன், சுயாட்சி அரசு ஒன்று தமிழர் தாயகத்தில் ஏற்படுவதே இதற்கு தீர்வாக முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# 'ராசிக்' குழு முகாம் மீது ஆர்.பி.ஜி தாக்குதல்

மட்டக்களப்பு 'லேக்' வீதியில் அமைந்திருக்கும் ராசிக் குழுவின் முகாம் முன்னரங்க காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் ஆர்.பி.ஜி மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டனர் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறீலங்கா இராணுவத்துடன் இயங்கும் இவ் ராசிக்குழு, கொலைகள், ஆட்கடத்தல், கொள்ளை போன்ற சம்பவங்களில் இராணுவத்தினருடன் இணைந்து செயல்பட்டு வருகின்றமை தெரிந்ததே. கடந்த புதன் அன்று அதிகாலை 1.30 மணியளவில் வைத்தியசாலைக்கு அருகில் பழைய இறால் பண்ணையின் வாவியோர சந்தையில் சிறீலங்கா இராணுவ முகாமிற்கு நூறு மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள முன்னரங்க காவலரண்களே தாக்குதலுக்கு இலக்காகின. இத் தாக்குதலின்போது இரண்டு ஆர்.பி.ஜி குண்டுகள் ராசிக் குழுவின் பிரதான முகாமிற்குள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதன்போது கொல்லப்பட்ட, காயமடைந்தவர்கள் தகவல் அறியப்படவில்லை.

தாக்குதலை முடித்துவிட்டு புலிகள் திரும்பிச் சென்றபின் முகாமில் இருந்தபடியே ராசிக் குழுவினர் அரைமணிநேரமாக தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான இம்முகாமிற்கு அருகில் புளொட் அலுவலகம், சிறீலங்கா புலனாய்வு பிரிவு முகாம், விமானப்படை பிரதான முகாம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனியின் நூலகத்தில் தூசி தட்டிக் கிடக்கும் பழந்தமிழ் நூல்கள்

தமிழ் இலக்கணம் பெருங்கடல் நன்னூல் சிறந்த காம்பஸ் கருவி

*– ஜேர்மனிய தமிழ் அறிஞர் புகழாரம்!*

ஜேர்மனியில் பழந்தமிழ் ஆவணங்கள் செல்லரித்துக் கிடக்கின்றன!

*பேராசிரியர் மோகனவேலு தகவல்!*

ஜேர்மன் நாட்டின் மார்ட்டின் லூதர் பல்கலைக் கழகத்தின் தமிழர்களைப் பற்றிய ஜேர்மனியர்களின் குறிப்புகள், நூல்கள், கோப்புகள் செல்லரித்துக் கிடக்கின்றன என்று சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.எஸ். மோகனவேலு கூறியுள்ளார்.

சென்னையில் உள்ள ஜேர்மன் தூதரகமும் மாக்ஸ்முல்லர் பவனமும் இணைந்து ஜேர்மனியர்களின் தமிழ்த்தொண்டு பற்றிய 3 நாள் கருத்தரங்கை நடத்தின.

கருத்தரங்கில் கலந்து கொண்டு பேராசிரியர் மோகனவேலு பேசியதாவது: தமிழர்கள் காட்டுமிராண்டிகள், பண்புட்ட மொழியற்றவர்கள் என்ற கருத்தின் அடிப்படையில் தான் ஜேர்மனியர்கள் 300 ஆண்டுகளுக்கு முன் தமிழகம் வந்தனர். ஆனால் இங்கு வந்தபின்தான் தமிழ் மொழியின் சிறப்பை உணர்ந்தனர். பின்னாளில் தமிழ்மொழி இலக்கணத்தை ஆராய்ந்து கற்றுத் தேர்ந்தனர்.

1715ம் ஆண்டு ஆகஸ்ட் 26-ம் திகதி அப்போதைய ஜேர்மன் மன்னர் 'டேனிஷ்' முன்பு, ஜேர்மனி மொழியில் உரையாற்றிய முதல் இந்திய மாணவன் மலையப்பன் என்கிற தமிழ் மாணவன்.

ஜேர்மனியில் இருந்து தமிழகம் வந்த முதல் பாதிரியார் சீகன்பால்கு. 1716ம் ஆண்டு அவர் ஜேர்மனியில் தமிழ் இலக்கணப் புத்தகத்தை பதிப்பித்தார். 1712ல் தமிழ் - லத்தீன் உயர் ஜேர்மன் உச்சரிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த அகராதியை அவர் வெளியிட்டார். தமிழ் மொழியை ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் கற்பிக்க வேண்டும் என்று ஜே.இ.கிரெண்டலர் பாதிரியார் 1715ம் ஆண்டு ஜனவரி 15-ம் நாள் ஜேர்மனிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் எழுத்துக்களில் உள்ள உயிர், மெய் எழுத்துக்களின் இணைப்புத் தன்மையை தனது இலக்கண நூலில் விரிவாக அவர் எழுதியுள்ளார். இந்நூல் 1739ல் வெளிவந்தது.

கே.டி.இ. ரேனியஸ் என்ற பாதிரியார் திருநெல்வேலியில் பேசும் தமிழே சுத்தத் தமிழ் என்ற கருத்துக் கொண்டிருந்தார்.சென்னையில் பேசும் தமிழ், தெலுங்கு கலப்புள்ளதாக குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் 1836 இல் வெளியிட்ட தமிழ் இலக்கணப் புத்தகம் உயர்வான பல அம்சங்களைக் கொண்டிருந்தது. தமிழ் இலக்கணங்களுக்கு மூலமாக விளங்கும் நன்னூலிலிருந்து ஜேர்மனியரான ரேனியஸ் இலக்கணச் சூத்திரங்களை மேற்கோள் காட்டியுள்ளார்.

சீர்காழியில் நல்லதம்பி என்ற வித்வானிடம் தினமும் 7 மணி நேரம் தமிழ் கற்றார் கார்ல்கிரெளல்.

'தமிழ் இலக்கணம் ஒரு பெருங்கடல். நன்னூல் சிறந்த காம்பஸ் (வழிகாட்டும்) கருவி' என்றார் கார்ல்கிரெளல்.

திருக்குறளை முதன் முதலாக ஐரோப்பிய மொழிகளில் ஒன்றான ஜேர்மனியில் மொழி பெயர்த்தவர் கார்ல்கிரெளல். ஜேர்மனிய அறிஞர் மாக்ஸ்முல்லரின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ் இலக்கணப் புத்தகத்தைப் பதிப்பித்தார் கார்ல்கிரெளல். இதில் 10 கோடி வரை தமிழில் எளிமையாக எண்களை எழுதும் முறை, நாட்டுப் புறப் பழமொழிகள், புலவர்களின் இலக்கணப்புலமை ஆகியவற்றை விரிவாக விளக்கியுள்ளார்.

'திருக்குறளை ஜேர்மன் மொழி பெயர்ப்பு நூலாக வெளியிட வேண்டும்' என்பதே தனது இறுதி ஆசை என்றார் கார்ல்கிரெளல்.

பைந்தமிழ், தெள்ளுதமிழ், செந்தமிழ் பற்றிய ஆய்வுகளை நிகழ்த்தியவர் 'பைதான்' என்ற பாதிரியார். தமிழ் வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களை எப்படி ஐரோப்பியர்கள் உச்சரிக்க வேண்டும் என்பதை வரைபடம் மூலம் ஜேர்மன் மொழியில் விளக்கி 1943 இல் நூல் ஒன்றை வெளியிட்டார் பாதிரியார் பைதான்.

கடந்த 300 ஆண்டுகளாக ஜேர்மனியர்கள் தமிழர்களைப் பற்றி, தமிழ் நாட்டைப்பற்றி எழுதி அனுப்பிய 2 இலட்சம் குறிப்பேடு (டயரிகள்) பதிவு ஏடுகள் கடிதங்கள் உள்ளிட்டவை ஜேர்மனியில் உள்ள மார்ட்டின் லூதர் பல்கலைக் கழகத்தில் செல்லரித்துக் கிடக்கின்றன.அவற்றை பாதுகாத்து ஆராய்ந்தால் பழந்தமிழர் மொழி, மருத்துவம், கலாசாரங்கள் குறித்த தகவல்கள் வெளிவர வாய்ப்பு உண்டு., இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ் மொழிக் கல்வி பற்றி ஜேர்மனியில் இரு பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. 25 முதுகலை மாணவர்கள் தமிழில் பாடம் கற்கின்றனர். ஜேர்மனியில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் அடங்கிய நூலகம் உள்ளது என்று கூறினார், செம்மஞ்சேரி ஆசியவியல் நிறுவனரான பேராசிரியர் தாமஸ் மால்டன். ஜேர்மன் தூதர் கிளாஸ் ஸ்கரோடர் நன்றி கூறினார். கருத்தரங்கில் கலந்து கொண்டு டாக்டர் டேனியல் ஜெயராஜ், டாக்டர் ரெங்கராஜன் விஜயலெட்சுமி மற்றும் பலர் பேசினர்.


ஈழத்தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனம் - பிரான்ஸ் ஆதரவில்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ் ஐந்தாவது வருடமாக நடாத்தும்

உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(11 பேர் கொண்டது)

12.04.98 ஞாயிறு

காலை 9.00 மணி

STADE BERTRAND DAUVIN

12, Rue René Binet,

75018 Paris.

(M°: Porte de Clignancourt)



வெரித்தாஸ் வானொலி இயக்குனர்

வணபிதா. ஜெகத் கஸ்பார் அவர்களுடனான ஒன்றுகூடல்

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலி தமிழ்ச் சேவையின் இயக்குனர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் வணபிதா ஜெகத் கஸ்பார் ஏப்ரல் 12ம் திகதி தொடக்கம் 16ம் திகதிவரை சுவிஸ்வாழ் தமிழீழ மக்களை சந்திப்பதற்காக விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். வெரித்தாஸ் வரனொலி ஈழத்தமிழ் மக்களுக்கு ஓர் கலங்கரைவிளக்கமாக இருப்பதுடன், உண்மையில் பக்கசார்பற்ற ஓர் வானொலியாக தென்கிழக்கு ஆசியாவிலே பரந்துபட்டு வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு தாய்மண்ணின் நிகழ்வுகளை வெளிக்கொணரும் ஒரு கருவியாகவும் செயல்பட்டு வருகின்றது. வெரித்தாஸ் வானொலியின் தயாரிப்பாளர்களில் ஜெகத் கஸ்பாரும், அன்ரோவும் முக்கியமானவர்கள். சிறீலங்கா இராணுவத்தால் வன்னி மீது தொடுக்கப்பட்டுள்ள நியாயமற்ற யுத்தத்தினால் வெளி உலகுடனான தொடர்புகளை இழந்து நிற்கும் தமிழ் உறவுகளோடு உறவாட வெரித்தாஸ் வானொலி முன்வந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது. வன்னிக்காடுகளில் ஒவ்வொரு போராளியும் முக்கியமாக காலையிலும், மாலையிலும் வெரித்தாஸ் சேவையைக்கேட்கத் தவறுவதில்லை. தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி உண்மையின் எண்ணங்கள், நேயரின் கடிதங்கள் போன்ற சிறப்பான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகின்ற வெரித்தாஸ் வானொலி ஒவ்வொரு தமிழ் மக்களையும் அன்பு நெஞ்சம் என்று அழைப்பது உண்மையிலேயே நெஞ்சை நெகிழவைக்கிறது. இத்தகைய சிறப்பு மிக்க ஒரு வானொலியின் இயக்குனரான வாணபிதா ஜெகத் கஸ்பாரின் சுவிஸ் விஜயம் தமிழீழ தேசபக்த மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். எனவே இவ் ஒன்றுகூடலில் அனைத்து தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஒன்றுகூடல் கால அட்டவணை

| இடம் | நடைபெறும் இடம் | காலம் | தொடர்பு |
|---|---|---|---|
| Lausanne | Foyer Union Ste, Pre du Marche 15, 1004 Lausanne | 12.04.98 பி.ப 4 மணி | 021 / 646 79 97 |
| Chur | im Evangelischen Kirchemeindehous Brandis, Brandisstrasse | 14.04.98 மாலை 8.00 மணி | 081 / 284 0014 |
| Thurgau | Hotel Bahnhof, Bahnhof Str. 45, 8580 Amriswil | 15.04.98 மாலை 5.00 மணி | 079 / 436 09 16 |
| Bern | Evang-ref. Kirchgemeindehouse Schosshalde, friedli Str. 22 | 16.04.98 மாலை 7.30 மணி | 079/ 407 78 75 |

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - சுவிஸ் பணியகம்.

# தேசிய செய்தித் தொகுப்பு

## யாழ். மக்களுக்கு இராணுவம் எச்சரிக்கை அரச அதிபருக்கும் மிரட்டல்

யாழ்.குடா மக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுப்பது நாளாந்தம் அதிகரித்து வருவதால் அது தொடர்பான எச்சரிக்கையொன்றினை சிறீலங்கா இராணுவத்தின் பலாலி தளம் விடுத்துள்ளது.

குறிப்பாக அரச அதிகாரிகள், வர்த்தகர்கள் ஆகியோர் விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தல்படி செயற்பட்டு வருவதும், சிறீலங்கா படையினர் தொடர்பான விபரங்களை விடுதலைப் புலிகளுக்கு இவர்கள் தெரிவித்து வருவதும் தம்மால் அறியக் கூடியதாக உள்ளதென குறிப்பிட்டுள்ள இவ் இராணுவ எச்சரிக்கை அறிக்கையில் இது போல் இனியும் நடைபெற்றால் படையினர் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள் என மிரட்டலும் விடுக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரிகளும், வர்த்தகர்களும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் சாக்கில் புங்குடுதீவிலுள்ள புலிகளின் தளத்திற்குச் சென்று பொறுப்பாளர் தூயவனைச் சந்தித்து வருவது தம்மால் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. படையினரின் இந்த மிரட்டல் அறிக்கையினைத் தொடர்ந்து யாழ். குடாவில் பணிபுரியும் அரச ஊழியர்களும், வர்த்தகர்களும் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இதேவேளை யாழ். அரச அதிபர் எஸ். சண்முகநாதனிடமும் யாழ்.நகர இராணுவத் தளபதி புலிகளுடன் அரச ஊழியர்கள் கொண்டிருக்கும் தொடர்பு குறித்து மிரட்டியுள்ளதுடன், அவ்வாறு நடந்தால் 17 வருடங்கள் சிறைத்தண்டனை அனுப்விக்க வேண்டுமெனவும் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

## மூதூர் பகுதிக்கான பயண சேவைகள் துண்டிப்பு

மூதூர், எருகல, ஈச்சலம்பத்தை போன்ற இடங்களுக்கான பயணிகள் பேருந்து சேவையினையும் படையினர் இடைநிறுத்தியுள்ளனர். படையினரின் இந்த நடவடிக்கையினால் பொது மக்கள் சுமார் 10 கி.மீ தூரம் கால்நடையாகச் செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பேருந்து சேவை நிறுத்தப்பட்டதற்கான காரணம் எதுவும் படைத்தரப்பிலிருந்து தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை சிறீலங்கா இராணுவ அச்சுறுத்தல் காரணமாக மூதூர் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து பள்ளிக்குடியிருப்பு, சிறினிவாசபுரம் பகுதிகளில் தற்காலிகமாகத் தங்கியுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சிறீலங்கா இராணுவ அதிகாரிகள் அனுமதி மறுத்துள்ளனர். இம் மக்களுக்கு இதுவரை எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை என மூதூர் பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் 174 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மூதூர் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்த போதும் இராணுவ அதிகாரிகள் அனுமதிக்காததால் நிவாரணம் வழங்கப்படவில்லை. இம்மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தாலே நிவாரணம் வழங்கப்படுமென இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் நுழையப் பயந்த இம் மக்கள் மர நிழலிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். இம் மக்களை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் சென்று சந்தித்துள்ளனர்.

## தென்மராட்சி பகுதிக்கும் பொருளாதாரத் தடை

வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கென விதிக்கப்பட்ட இராணுவத் தடையினைத் தொடர்ந்து தென்மராட்சி பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகள் மீது சிறீலங்காப் படையினர் பல்வேறு கெடுபிடியினை பிரயோகித்து வருகின்றனர். குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்கள் எடுத்துச் செல்வதற்கு படையினர் பல கட்டுப்பாடுகளையும் புதிய நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தி அவற்றினை மிகவும் கடுமையாக அமுல்படுத்தியும் வருகின்றனர். இப்புதிய நடைமுறையின்படி கொடிகாமம் வறணி போன்ற இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் செல்லும் மக்கள் எவ்விதமான உணவுப் பொருட்களாக இருந்தாலும் 2 கிலோவுக்கு மேல் எடுத்துச் செல்ல இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர். இதனால் இப்பகுதி மக்கள் தமது அன்றாட தேவைகளுக்கான அத்தியாவசியப் பொருட்களைக்கூட எடுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பளைப் பிரதேசத்தில் நிந்தாவில், அரசகேணி, முகாமாலை போன்ற இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்குள் எவரும் பிரவேசிக்கவோ அல்லது அங்கிருந்து வெளியேறுவதற்கோ இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர். இந்தத் தடை கடந்த முதலாம்திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

* முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பணிமனை நடாத்திய விளையாட்டுப்போட்டித் தொடரில் ஆண்களுக்கான மிதிவண்டிச் சவாரி, மற்றும் மரதன் போட்டிகள் கடந்த 2-ம் திகதி நடைபெற்றன.
* ஏழாலை பகுதியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் டானியல் காந்தரூபன் என்பவர் தனது வலதுகாலை இழந்துள்ளார். இச் சம்பவம் கடந்த 31-ம் திகதி நடைபெற்றுள்ளது.
* யாழ். நாவற்குழிப் பகுதியில் கடந்த 29-ம் திகதி சிறீலங்கா படையினருடனான எதிர்பாராத ஒரு மோதலில் நான்கு போராளிகள் வீரச்சாவு அடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.
* தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியின் ஆதரவுடன் செயற்படும் 'புதிய புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை' இன் முதலாவது அகவை நிறைவு இதழ் வெளியீடு கிளிநொச்சி ஆனைவிழுந்தான் இந்துக் கல்லூரியில் கடந்த 5-ம் திகதி நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
* இராணுவத்தின் ஈவிரக்கமற்ற கல்நெஞ்சு தன்மையினால் நோயால் மடிந்த தனது பச்சிளம் மகளின் சடலத்தை அநுராதபுர வைத்தியசாலையில் அநாதரவாக விட்டுவர வேண்டிய நிலைக்கு கமலாதேவி என்ற இளந்தாய் நிர்ப்பந்திக்கப்பட்டார். சடலத்தை பொறுப்பேற்க அனுராதபுரம் செல்வதற்கான அனுமதியை வவுனியா படையினர் மீண்டும் வழங்காததால் சிசுவின் சடலம் அநுராதபுர வைத்தியசாலை பொறுப்பிலே அடக்கம் செய்யப்பட்டது.
* வவுனியாவிலிருந்து கடந்த 29-ம் திகதி கொழும்பு நோக்கிச் சென்ற தொடருந்து வண்டியில் பயணித்த 300 தமிழர்கள் சிறீலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு கொழும்பு காவல் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.
* கடந்த 31-ம் திகதி இரவு ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் வசிக்கும் நான்கு பாடசாலை மாணவர்களை சிறீலங்காப் படையினர் கைது செய்து குளப்பிட்டி முகாமில் தடுத்துவைத்துள்ளனர்.
* வாழைச்சேனைப் பகுதியில் கடந்த 31-ம் திகதி இரவு விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலொன்றில் ஒரு சிறீலங்கா சிப்பாய் கொல்லப்பட்டும் மூவர் படுகாயப்படுத்தப்பட்டுமுள்ளனர்.

## புலிகளின் இடைவிடாத தாக்குதல்: வடமராட்சி கிழக்கில் இருந்து இராணுவம் விலகியது !

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தினை முற்றாக கைப்பற்றும் நோக்கோடு கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்கா இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதல் காரணமாக தோல்வியடைந்ததையடுத்து வடமராட்சி கிழக்குப் பகுதியில் நிலைகொண்டிருந்த துருப்பினர் முற்றாக விலகிச் சென்றுள்ளதாக குடாநாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

பலத்த எறிகணை வீச்சுக்கள், உலங்கு வானூர்தித் தாக்குதல்கள் சகிதம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அம்பன், குடத்தனை, மண்முனை, பகுதிகளில் விடுதலைப்புலிகள் தொடுத்த எதிர்த் தாக்குதல் காரணமாக படையினருக்கு கணிசமான இழப்புகள் ஏற்பட்டதையடுத்தே இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டு படையணிகள் பின்வாங்கி உள்ளன.

இவ் இராணுவத் தாக்குதலில் பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டதாகவும், அவர்களது சடலங்கள் மணல்காடு, வல்லிபுரம் வீதியில் உள்ள இராணுவ காவலரண் ஒன்றுக்கு அருகில் கிடந்ததாகவும் யாழ். செய்திகள் தெரிவித்தபோதிலும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேநேரம் பின்வாங்கி வந்த படையணிகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்திய போது நான்கு சிப்பாய்கள் காயமடைந்ததாக பலாலி படைத்தளம் அறிவித்துள்ளது.

## விமானக் குண்டுவீச்சினை கண்டித்து விசுவமடு மக்கள் பேரணி

சிறீலங்கா விமானப் படையினரின் குடிமக்கள் குடியிருப்புகள் மீதான இரக்கமற்ற தாக்குதல்களைக் கண்டித்து விசுவமடுப் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து பெரும் பேரணிகளை கடந்த 2-ம் திகதி நடாத்தியுள்ளனர்.

காலை 10 மணிக்கு தர்மபுரம் வைத்தியசாலையிலிருந்து ஒரு பேரணியும், விசவமடு சுண்டிக்குளத்தில் இருந்து ஒரு பேரணியும் ஆரம்பமாகி தர்மபுரம் முருகானந்தா வித்தியாலயத்தை ஒன்றாக வந்தடைந்தன. இப் பேரணியில் பெரும் திரளான மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். இப் பேரணியின்போது குண்டு வீச்சினால் ஏற்படும் அழிவுகளை வெளிப்படுத்தும் பதாகைகளையும், சந்திரிகா ரத்வத்தையின் கொடும்பாவிகளும் ஊர்வலத்தில் கொண்டுவரப்பட்டன. பேரணி மைதானத்தை அடைந்ததும் அங்கு கூடியிருந்த மக்களால் சந்திரிகா, ரத்வத்தை ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

இப்பேரணியின் போது 'குண்டுகளை வீசி குடியிருப்புகளை அழிக்காதே' மக்களின் குடியிருப்பை விமானிகளின் பயிற்சித்தளம் ஆக்காதே' சர்வதேசமே சிறீலங்கா அரசின் கண்மூடித்தனமான குண்டு வீச்சை தடுத்துநிறுத்து போன்ற சுலோகங்களை மக்கள் எழுப்பினர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்போது கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் மத்தியூஸ் அவர்களும், விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த எழிலன் அவர்களும் சந்திரிகா அரசு அப்பாவித் தமிழர் மீது நடாத்தும் குண்டு வீச்சுத் தாக்குதல் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியது என கண்டனம் தெரிவித்ததுடன், குறிப்பாக சர்வதேசம் கண்டிக்க வேண்டும் என்ற கருத்துடன் உரையாற்றினர்.

## யாழ். குடாவில் கிளைமோர் தாக்குதல்கள் 6 படையினர் பலி - 8 பேர் காயம்

யாழ். குடாவில் கொக்குவில், விளான் ஆகிய பகுதிகளில் கடந்தவாரம் விடுதலைப் புலிகள் நடாத்திய 'கிளைமோர்' தாக்குதல்களில் மொத்தமாக ஆறு படையினர் பலியாகி மேலும் எண்மர் படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர்

முதலாவது தாக்குதல் கடந்த 31-ம் திகதி மாலை 6.30 மணியளவில் ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் நடாத்தப் பட்டது.

ரோந்து சென்ற இராணுவப் படையணியொன்று இத் தாக்குதலில் சிக்கியபோது நான்கு படையினர் பலியாகியதுடன், மேலும் நால்வர் காயப் படுத்தப்பட்டனர்.

இரண்டாவது தாக்குதல் கடந்த முதலாந்திகதி காலையில் விளான் சந்திப் பகுதியில் நடாத்தப்பட்டது. இதன் போது இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன், நால்வர் காயமடைந்துள்ளனர்.

இவ்விரு தாக்குதல்களின் போதும் புலிகள் தரப்பில் இழப்புக்களேதும் ஏற்படாதமை குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்காவின் யுத்த வியாபாரத்தில் நல்லவர்களின் அநியாய இழப்பு!

**எனது பேனா எனும் தலைப்பில் சிங்களப் பத்திரிகையாளர் 'சமன் வகஆராய்ச்சி' எழுதும் ஆக்கங்களில் ஒன்றின் தமிழாக்கம்.**

எனது மனதை உருக வைக்கும் சில சம்பவங்களும், ஆத்திரமூட்டும் சில சம்பவங்களும் கடந்த சிலவாரங்களில் சிறீலங்காவில் அரங்கேறியுள்ளன. நாட்டின் ஒரு பகுதியில் வேறுபட்ட இலட்சியங்களுக்காக உயிரைத் துறந்த சிலரைப்பற்றியும், அந்த இலட்சிய வேட்கையினை தமக்காக பாவித்து இலாபமடையும் சிலரைப் பற்றியும் இப்பந்தியில் நான் எழுதவேண்டியவனாயுள்ளேன்.

இங்கு நான் முதலில் சொல்வது எனது மருமகனைப் பற்றிய கதை. அன்று மக்கள் விடுதலை முன்னணியில் இணைந்து அரச நடவடிக்கைகளை முற்றாக எதிர்த்து, பிராந்திய ரீதியில் காரியமாற்றியவன் அவன். திடீரென தகப்பன் காலமாக சகோதர, சகோதரிகள் என ஏழு பேரின் பராமரிப்புப் பாரம் அவன் மீது சுமத்தப்பட்டது. அன்றைய நிலையில் அவனுக்காக திறந்திருந்த ஒரேவழி இராணுவத்துறையே. அதில் அவன் இணைந்தது தனது நாடு, இனம் போன்றவற்றிற்காக போராட அல்ல. தனது இளைய சகோதர, சகோதரிகளின் வயிற்றை நிரப்பவும், அவர்களுக்கான

**தந்தையாரின் இடத்தை, அவர் சுமந்த பாரத்தைச் சுமக்கவே தான் இதற்குள் புக வேண்டி வந்ததே அல்லாது 'இவர்களின்' இந்த யுத்தத்திற்கு மனமுவந்து சேவையாற்றவில்லை என்பதை அவன் கூறுவதுண்டு.**

எதிர்காலமொன்றை ஏற்படுத்திக் கொடுக்கவுமே என என்னைச் சந்தித்தபோதெல்லாம் அவன் கூறுவது வழக்கம். அவன் வாழ்க்கை என்பதிலும், பட்டப் படிப்புக்கள் என்பதிலும், அறிவு நூல்களைக் கற்பதிலும் மிகவும் எதிர்பார்ப்புடனிருந்த ஒரு மனிதன். மூன்று வருடங்கள் இராணுவத்தில் கடமையாற்றி தன்னை எதிர்பார்த்திருந்த சகோதரர்கள் நிரந்தரமாக வாழ ஒரு கல் வீட்டைக் கட்டிக் கொடுத்தான். தனது அயராத உழைப்பினால் மூத்த சகோதரி உயர்தரப் பரீட்சையில் திறமையாக சித்தியடைந்திருந்ததை கேட்டு சந்தோசமடைந்திருந்தான். அவன் இராணுவத்தில் கடமையாற்றினாலும் மிகவும் வித்தியாசமான கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தான். இந்த யுத்தத்தினால் வயிறு வளர்ப்பவர்கள் அரசியல்வாதிகளும், அவர்களது அடிவருடிகளுமே எனக் கூறும் அவன் அப்பாவிகளாகிய தாமே உயிரைக் காவுகொடுக்க வேண்டியுள்ளது எனவும் வருத்தப்பட்டான். தந்தையாரின் இடத்தை, அவர் சுமந்த பாரத்தைச் சுமக்கவே தான் இதற்குள் புக

**உல்லாச வாழ்க்கை வாழ்வதற்கு வசதிகள் ஏராளமாக இருந்தும் ஒரு கெரில்லாப் போராளியாக வாழ்வது கஷ்டமாக இல்லையா என எனது தோழர் குணாவிடம் கேட்டபோது. உண்மையான சிரிப்பை உதிரவிட்ட குணா, 'எனது எதிர்காலத்தை விட எனது சமூகத்தின் எதிர்காலமே பெறுமதிமிக்கவையாக உள்ளது' என சாதாரணமாகக் கூறினார்.**

வேண்டி வந்ததே அல்லாது 'இவர்களின்' இந்த யுத்தத்திற்கு மனமுவந்து சேவையாற்றவில்லை என்பதை அவன் கூறுவதுண்டு.

யுத்தத்தை எதிர்த்து யுத்த முனையில் நின்றவேளை தமிழ் போராளி ஒருவரின் துப்பாக்கியின் மூலம் அவன் அண்மையில் இறந்துபோனான். எனது மனமடைந்த வேதனை சொல்லிமாளாது.

இங்கு நான் இரண்டாவதாக கூறுவது எனது இதயத்தில் நிறைந்திருந்த மற்றொருவரின் மரணம் பற்றியதே. எனது மருமகனின் வயதையொத்தவனே அவனும். அவன் எனக்கு அறிமுகமாகியது, அன்று நான் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிராந்தியத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோதே. எமது சுற்றுப்பயணத்தின்போது எமக்கான ஒழுங்குகளை மேற்கொண்டது ரொபின்சன் எனும் 23 வயது இளைஞனே. பொலநறுவைப் பகுதியில் இராணுவத்துடனான மோதல் ஒன்றின்போது ஒரு பாதத்தை இழந்திருந்த அவன் முழு மூச்சுடன் எமக்கு முழு உதவியையும் செய்து தந்தான். அவ்வேளை ரொபின்சனைத் தவிர நான் வேறொருவரையும் சந்தித்தேன். அவரது சமூக சிந்தனையையும், உயர்ந்த கொள்கைகளையும் முதலாவது சந்திப்பிலேயே நான் கண்டுகொண்டேன். எனது கணிப்பை அவரிடம் கூறிய போது அதை மனதார ஏற்றுக் கொண்டார். அந்த இளைஞன் தான் வாகரைப் பிரதேசத்தின் விடுதலைப் புலிகளின் அரசியற்பிரிவின் பொறுப்பாளராவார். 22 வயது மதிக்கத்தக்க அவர் குணா எனும் பெயரிலேயே அழைக்கப்பட்டார். மிகவும் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த அவர் எட்டாவது வகுப்புடன் பாடசாலையை நிறுத்தி விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டிருந்தார். பாடசாலைக் கல்வியில் அவர் குறைந்திருந்தாலும் அவரது சமூகக் கல்வியும், சிந்தனையும் மிக உயர்ந்தே காணப்பட்டது. யுத்தம் பற்றி என்னுடன் பேசும் போது மிக அவதானத்துடன் வார்த்தைகளை வெளியிட்டார். சாதாரண சிங்கள மக்கள், தமிழ் மக்களின் இன்றைய நிலை பற்றி என்று உணர்ந்து கொள்கிறார்களோ அன்று யுத்தம் முடிவுக்கு வரலாம் எனத்தான் நினைப்பதாய் அவர் கூறினார்.

22 வயதே ஆகியிருந்த நிலையில் புத்தி கூர்மையும், சிந்தனைத் திறனும் கொண்ட குணாவுக்கு உல்லாச வாழ்க்கை வாழ்வதற்கு வசதிகள் ஏராளமாக இருந்தும் ஒரு கெரில்லாப் போராளியாக வாழ்வது கஷ்டமாக இல்லையா என எனது தோழர் குணாவிடம் கேட்டபோது. உண்மையான சிரிப்பை உதிரவிட்ட குணா, 'எனது எதிர்காலத்தை விட எனது சமூகத்தின் எதிர்காலமே பெறுமதிமிக்கவையாக உள்ளது' என சாதாரணமாகக் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல்துறையில் இணைந்திருந்த எனக்கு அவரது கூற்றின் யதார்த்தம் மிக நன்றாகவே புரிந்தது. இது நான் அவர்மேல் கொண்டிருந்த ஒருவித கௌரவத்தைவிட அவர்மேல் எனக்கு மிகுந்த அன்பைத் தோற்றுவித்தது. இரண்டு நாட்களின் பின் வாகரையைவிட்டு நாம் கிளம்பியபோது 'மீண்டும் வாருங்கள் நான் உயிருடன் இருந்தால் இதைவிட கௌரவமாக உங்களை வரவேற்பேன்' எனக்கூறி ஞாபகமாக ஏதாவது தரும்படி வேண்டினார்.

மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் நான் பெறுமதியில் குறைந்த எனது பேனாவை அவரது கைகளில் கொடுத்து அடுத்த முறை பெறுமதிமிக்க பரிசு ஒன்றுடன் வருவேன் எனக் கூறி விடைபெற்றேன்.

இரண்டு வாரங்களுக்கு முன் வாழைச்சேனைப் பகுதியில் துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்தபோது மறைந்திருந்த இராணுவத்தினர் சுட்டதில் குணா இறந்துபோனதாகக் கடிதமொன்றின் மூலம் அறிந்து மிக வேதனையடைந்தேன்.

இப்போது கூறப்போவது வேறுவிதமான சம்பவமொன்று. அண்மையில் ஒரு நிகழ்வில் ஒரு வர்த்தக நண்பர் ஒருவரும், ஒரு உயர் இராணுவ அதிகாரியும் என்னுடன் பேசிக்கொண்டிருந்த போது, வர்த்தக நண்பர் நான் கேட்டறியாத, நினைக்கக் கூட முடியாத இந்தச் சம்பவத்தைக் கூறினார். அவரும் அவரது வெளிநாட்டு நண்பர் ஒருவரும் கொழும்பின் உயர்மட்ட சூதாட்ட விடுதி ஒன்றுக்கு சென்றபோது, வாகனம் நிறுத்தும் பகுதியில் ஒரு இராணுவ வாகனமும் நிற்பதையும் அதனுள் சாரதி தூங்கிக்கொண்டிருப்பதையும் அவதானித்துள்ளனர். இரண்டு நண்பர்களும் அன்று அதிகாலை நான்குமணி வரை சூதாட்ட விடுதியில் சூதாடியபோதும் கோடீஸ்வரரான வெளிநாட்டு நண்பர் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய்கள் வரையே இழந்துள்ளார். ஆனாலும், அருகில் சூதாடிக்கொண்டிருந்த இராணுவ அதிகாரியோ அதுவரை ஏழு இலட்சம் ரூபாய்கள் வரையில் தோற்றுப் போயிருந்தார். தான் வடபகுதியில் கடமையாற்றுவதாயும், லீவில் வந்துள்ளதாயும் அவர்

**ஆனாலும், அருகில் சூதாடிக்கொண்டிருந்த இராணுவ அதிகாரியோ அதுவரை ஏழு இலட்சம் ரூபாய்கள் வரையில் தோற்றுப் போயிருந்தார். தான் வடபகுதியில் கடமையாற்றுவதாயும், லீவில் வந்துள்ளதாயும் அவர் வெளிநாட்டு வர்த்தகரிடம் கூறியுள்ளார்.**

வெளிநாட்டு வர்த்தகரிடம் கூறியுள்ளார்.

ஒரு இரவில் மாத்திரம் இவ்வளவு பெருந்தொகையை இவரால் இழக்கு முடியுமென்றால் இவரது மாத வருமானம் எப்படியிருக்கும் என்பதை என்னிடம் விசாரித்த எனது நண்பர் யுத்தத்தின் மறுபக்கம் இப்படித்தான் உள்ளது என்பதையும் கூறினார்.

இவர் இப்படிக் கூறியதும் என்னுடன் இருந்த இராணுவ அதிகாரி தானும் ஒரு சம்பவத்தைக் கூறினார். கடந்த வாரத்தில் கடற்படைக்காக சில ரோந்துப் படகுகள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக துறைமுகத்தில் அவை நிறுத்தப்பட்டுள்ளன எனவும் கூறிய அவர், அப்படகுகளில் பொருத்தப்பட்டிருப்பது 37 கலிபர் துப்பாக்கிகள் என்றார். ஏற்கனவே பல மில்லியன் 30 கலிபர் துப்பாக்கி ரவைகள் இறக்குமதி செய்யப்பட்டு வீணாகத் தேங்கிக் கிடக்க, 37 கலிபர் துப்பாக்கிகளை ஏன் இந்தப் படகுகளில் பொருத்தி கொள்முதல் செய்தார்கள் என வினாவினார். பின் அவரே இந்தப் படகுகளின் கொள்வனவு மூலம் பெருந்தொகைப் பணம் கொமிசனாக குறிப்பிட்ட சிலருக்கு வழங்கப்பட்டன என்றும் கூறினார். பல மில்லியன் ரூபாய்கள் விலைகொடுத்து வாங்கப்பட்ட இப் படகுகளிலிருந்து 37 கலிபர் துப்பாக்கிகளை அகற்றி 30 கலிபர் துப்பாக்கிகளைப் பொருத்தும் வேலைகள் தற்போது நடைபெறுவதாக கூறிய அவ் அதிகாரி அதற்கும் ஒரு சிலர் கொமிஷன் பெற்றுள்ளனர் என்றார்.

இங்கு கூறப்பட்ட சம்பவங்களை வைத்துப்பார்த்தால் இரு வேறுபட்ட இலட்சியங்களுக்காக இரண்டு நல்லவர்கள் தங்களது உயிர்களைத் தியாகம் செய்துள்ளவேளை தேசத்தின் மறுபுறம் யுத்தத்தை வியாபாரமாக்கி அதன் மூலம் தானும் தனது கூட்டமும் செல்வம் சேர்த்துக் கொண்டிருக்கும் ஒரு நிலையைக் காண்கிறோம். தனது குடும்பத்துக்காய் எனது மருமகன் உயிரைத் தியாகம் செய்தது போக சமூகத்துக்காய் உயிரைத் துறந்து குணா மாவீரர் ஆனார், ஆனால் இங்கு யுத்த வியாபாரிகளான இவர்களுக்கு என்னதான் எஞ்சப்போகிறதோ!!

- தமிழில் மாந்தன்


## நீங்களும் தொழிலதிபர் ஆகலாமே?

இவ்வாண்டின் நடுப்பகுதியில் எமது நிறுவனம் தமது சேவையினை இந்திய வர்த்தகச் சந்தையினை நோக்கி நகர்த்தவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

1959-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது நிறுவனம், தற்போது சர்வதேச ரீதியில் 70 நாடுகளிலும் பிரதேசங்களிலும் தனது சேவையினை விஸ்தரித்துள்ளது. கடந்த வருடம் மட்டும் 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை வியாபார புரள்வாக ஈட்டியுள்ளது.

இப்போதுநாம் இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வியாபார இயக்குநர்களைத் தேடுகிறோம். உங்களுக்கு எமது முயற்சியில் ஆர்வமிருப்பின் அல்லது குறைந்த மூலதனத்துடன் புதிய தொழில் முயற்சி ஒன்றை நீங்கள் தொடங்க திட்டமிட்டாலோ உதவக் காத்திருக்கிறோம்.

தொடர்புகளுக்கு: **T.K.C. International**

24 Allée du Clos Fleury, Résidence les Séquoias, 45000 Orleans, France.
Tel: (33) 02-38629083 / Fax: (33) 02-38770485

# தி.மு.க. அரசு கலைக்கப்படவேண்டும் ஜெயலலிதா மீளவும் கோரிக்கை

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நிலை மோசமாக உள்ளது கருணாநிதி அரசு நீடிப்பது தேச நலனுக்கு எதிரானது. அது கலைக்கப்பட வேண்டிய அரசு என அ.தி.மு.க கருதுகின்றது. என்று செல்வி ஜெயலலிதா வலியுறுத்தி கூறியுள்ளார்.

பிரதமர் வாஜ்பாயை சந்திக்க டெல்லி சென்ற ஜெயலலிதா அவரைச் சந்தித்த பின் நிருபர்களிடம் பேசினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

மத்திய அமைச்சரவையில் அ.தி.மு.க வினருக்கு அளிக்கப்பட்ட துறைகள் குறித்து திருப்தி அடைந்துள்ளோம். அமைச்சரவை விரிவுபடுத்தப்படும்போது அ.தி.மு.க. வுக்கு ஒரு அமைச்சும் பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஒரு அமைச்சும் தருவதாக பிரதமர் உறுதியளித்துள்ளார். எனக்கு எதிரான வழக்குகளில் இருந்து விடுதலை பெற்றுத்தர வேண்டுமென்று மத்திய அரசிடம் எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. இந்த வழக்குகள் அனைத்தும் மாநில அரசால் பழிவாங்கும் நோக்கத்துடன் போடப்பட்டவை. இதில் மத்திய அரசு தலையிட முடியாது. மத்திய சட்டத்துறை அமைச்சர் தம்பித்துரை எனக்கு உதவி செய்ய விரும்பினால் கூட அவரால் எதுவும் செய்ய முடியாது. மத்திய அரசில் அ.தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளும் இடம்பெற்றுள்ளன. எனவே இந்த அரசை நாங்கள் கவிழ்க்க மாட்டோம். அதற்கான தேவையும் இல்லை. காங்கிரஸ் கட்சியில் மாத்திரமின்றி அனைத்து அரசியல் கட்சிகளிலும் எனக்கு நண்பர்கள் உள்ளனர். ஆனால் காங்கிரஸ் கட்சியுடன் நான் பேரம் நடத்துவதாகக் கூறுவது உண்மையில்லை. அதற்கான அவசியமுமில்லை என்றார் அவர்.

## தி.மு.க. அரசு கலைக்கப்படமாட்டாது மக்களவையில் பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

இந்திய மக்களவையில் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது. அதில் காங்கிரஸ் தலைவர் பிரணாய் முகர்ஜி தி.மு.க. அரசை பதவி நீக்கம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளதா என்ற கேள்வியை எழுப்பினார். அக்கேள்விக்கு பதிலளித்த பிரதமர் வாஜ்பாய் அத்தகைய உத்தேசம் இல்லை என்றார்.

அரசியல் சட்டத்தின் 356-வது விதியை பா.ஜ.அரசு முறைகேடாக பயன்படுத்தாது என்றும் திட்டவட்டமாக கூறினார். ஹிமாசலப் பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்தக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையை மத்திய அரசு நிராகரித்துவிட்டதை பிரதமர் சுட்டிக்காட்டினார். அன்னிய ஆக்கிரமிப்பு உள்நாட்டுக் கலகம் போன்ற அசாதாரண சமயங்களில்தான் மாநில அரசுகளின் விடயத்தில் மத்திய அரசு தலயிடும் என்றார் அவர். அத்தகைய சமயங்களில் கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள்தான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கவேண்டும் என்பதுதான் பா.ஜ அரசின் கொள்கை என்றார் அவர்.

## இந்தியச் செய்திகள்

## தெலுங்கு தேசம் கட்சியின் நிலைப்பாடு பொதுச் செயலாளர் விளக்கம்

ஐக்கிய முன்னணியில் பிரதான அங்கம் வகித்திருந்த தெலுங்கு தேசம் கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பின்னால் ஐக்கிய முன்னணியில் இருந்து விலகிச் சென்றிருந்தது. அதன் இவ் அரசியல் போக்கு பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்ததல்லவா. இந்நிலையில் அக் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ். எம். லால்ஜான் பாஷா பத்திரிகையாளர்களுக்கு தன் கட்சியின் நிலைப்பாடு பற்றி விளக்கமளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

காங்கிரசுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட கட்சி தெலுங்கு தேசம். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதை தடுக்க பாரதிய ஜனதாவின் கூட்டணி அரசுக்கு தெலுங்கு தேசம் ஆதரவு தரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வாஜ்பாய் அரசியல் தெலுங்கு தேசம் சேராது. ஆனால் பாஜவின் கூட்டணி அரசு மத்தியில் நிலைத்திருக்க வேண்டும் என்பதில் கட்சி உறுதியாக உள்ளது. பாரதீய, ஜனதாவோ காங்கிரசோ தனியாக நாட்டை ஆள மக்கள் தீர்ப்பு அளிக்கவில்லை. மத்திய ஆட்சியில் இன்று மாநிலக் கட்சிகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உருவெடுத்துள்ளது.

# தி.மு.க. மீது குற்றஞ்சாட்டப்படவில்லை ஜெயின் கமிசனின் இறுதி அறிக்கை கூறுகிறது

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக ஜெயின் கமிஷனின் விசாரணை அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த அறிக்கையை மத்திய அரசு வெளியிடவில்லை. ஆனால் இந்தியாவின் பிரபல ஆங்கில நாளேடு ஒன்று இதை இரகசியமாக பெற்றுக்கொண்டுள்ளதுடன், அதன் தமிழ் பதிப்பில் அதை வெளியிடவும் முயற்சி செய்துள்ளது. ஆனால் மத்திய அரசு அந்த அறிக்கையை வெளியிடாத நிலையில் அதை மக்களுக்கு பகிரங்கப்படுத்தக்கூடாது என்று கூறி அந்த முயற்சியை அதிகாரிகள் தடுத்துவிட்டனர்.

இந்த விடயம் - தமிழ்நாடு சட்டப்பேரவையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சுப்பராயனால் எழுப்பப்பட்டது. இந்த அறிக்கையில் தி.மு.க. அரசு மீது குற்றம்சாட்டப்படவில்லை என்றும் காங்கிரஸ் கட்சி அவசரப்பட்டு இடைக்கால அறிக்கையை பூதாகரமாக்கி ஐக்கிய முன்னணிக்கு கொடுத்து வந்த ஆதரவை நிறுத்தி புதிய தேர்தல் நடக்க வழி செய்துவிட்டது என்றும் சுப்பராயன் சட்டசபையில் தெரிவித்துள்ளார். இதுபற்றி தி.மு.க. தலைவர் கருணாநிதி கருத்துத் தெரிவிக்கையில் பொது வாழ்க்கையில் என்மீது கற்கள் வீசப்பட்ட போதும், மலர்கள் தூவப்பட்டபோதும், இரண்டையும் ஒன்றாகக் கருதித்தான் பயணத்தை நடத்திக்கொண்டிருக்கிறேன் என்றார்.

## தமிழக குண்டு வெடிப்பு சம்பவங்களில் சந்திரிகா அரசுக்கு தொடர்பு இலங்கை முஸ்லீம் தீவிரவாதிகள் கைது! தமிழக போலிசார் அதிர்ச்சி!!

(தென் செய்தி - சென்னை)

தமிழ்நாட்டில் நடந்துள்ள குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகளையொட்டி முஸ்லீம் தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டு வருகின்றார்கள். அவர்களிடமிருந்து ஏராளமான வெடிகுண்டுகளும் மற்றும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழகமெங்கும் பொலிசார் நடத்திய தீவிர தேடுதல் வேட்டையின் விளைவாக இலங்கை முஸ்லீம் இளைஞர்கள் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது பற்றிய செய்தி நாளிதழ் ஒன்றில் வெளிவந்துள்ளது. தமிழ்நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்தும் சதித்திட்டத்தில் சிங்கள அரசுக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்பதை உறுதி செய்யும் வகையில் இலங்கையைச் சேர்ந்த முஸ்லீம் இளைஞர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் மதக்கலவரங்கள் மூண்டெழுமானால் தமிழர் என்ற உணர்வு மங்கிப் போகும் அவ்வாறு மங்கினால் ஈழத் தமிழர்களுக்கு தமிழகத்தில் உள்ள ஆதரவு படிப்படியாகக் குறைந்துவிடும் என்று திட்டமிட்டே சிங்கள அரசு செயல்பட்டுள்ளது. தமிழ்நாட்டு வெடிகுண்டு வெடிப்பு நிகழ்ச்சிகளின் பின்னணியில் சிங்கள அரசுக்குள்ள பங்குபற்றி விசாரித்துவரும் தமிழக போலிசார் வசம் அதிர்ச்சி தரும் தகவல்கள் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## குலசேகர பாண்டியன் காலத்து அரிய காசு திருநெல்வேலியில் கண்டுபிடிப்பு!

(தென் செய்தி - சென்னை)

குலசேகரபாண்டிய மன்னன் காலத்து அரிய காசு திருநெல்வேலியில் கிடைத்தது. பிற்கால பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் (கி.பி 1162-1177) திருநெல்வேலியை தலை நகரமாகக்கொண்டு ஆட்சி புரிந்தவன்.

இம் மன்னர்கால அரிய காசு நான்கு கிராம் எடையுள்ளது. இக்காசின் முன் பக்கத்தில் மனிதன் நிற்கும் உருவமும் பின் பக்கத்தில் மனிதன் அமர்ந்த உருவமும் வலது பக்கத்தில் ஸ்ரீ குலசேகர என்றும் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த காசைப் பார்க்கும் போது பிற்கால இராசராஜ சோழன் காசைப் போன்றே அச்சடிக்கப்பட்டுள்ளது.

குலசேகர பாண்டியன் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தபோது இந்தக் காசை வெளியிட்டிருக்கலாம். தமிழகத்தில் கிடைத்த பிற்கால பாண்டியர் காசுகளில் இதுவரை தமிழ் எழுத்துக்களுடன் கிடைத்தன. ஆனால் இப்பொழுது கிடைத்த பாண்டியர் காசில் கிரந்த எழுத்துகளுடன் மன்னர் பெயரோடு கிடைத்திருப்பது தமிழக நாணயவியல் வரலாற்றில் அரிய கண்டுபிடிப்பாகும்.

## பிரேமானந்தா சாமியாருக்கு முதல் வகுப்புச் சிறை?

கொலை, பாலியல் வல்லுறவு போன்ற குற்றங்களுக்காக தண்டனை பெற்று திருச்சிச் சிறையில் இருக்கும் பிரேமானந்தா சாமியார் சார்பில் வக்கீல் விஜயராகவன், ராஜேந்திரன் ஆகியோர் புதுக்கோட்டை செசன்சு கோர்ட்டில், பிரேமானந்தாவுக்கு விசாரணைக் காலத்தில் சிறையில் முதல் வகுப்பு வசதி அளிக்கப்பட்டதைப்போல் தற்போது சிறையிலும் முதல் வகுப்பு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் எனக் கேட்டு மனு தாக்கல் செய்திருந்தனர்.

மனுதாரர் பிரேமானந்தாவுக்குக் கொலை வழக்கு உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனை அளிக்கப்பட்டு இருப்பதாலும், அவர் ஒரு நிறுவனத் தலைவர் என்ற முறையிலும் அந்த நிறுவனத்தில் இவரிடம் பாதுகாப்பில் இருந்த பெண்களை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியதற்காக தண்டனை அனுபவித்து வருவதால் மனுதாரர் முதல் வகுப்பு அந்தஸ்துக் கோரும் உரிமையுடையவர் அல்ல என்று கூறி மனுவை தள்ளுபடி செய்வதாக, நீதிபதி மோகனசுந்தரம் தீர்ப்புக் கூறியுள்ளார்.

## பா.ஜ.வின் கூட்டணி ஆட்சி நிலைக்குமா? கருத்துக் கணிப்பு நிலைக்காது என்கிறது

தகவல் தொடர்பு சாதன ஆய்வு மையம் (சி.எம். எஸ்) மார்ச் 21 - 22ம் திகதிகளில் தேர்தல் தொடர்பான ஒரு கருத்துக்கணிப்பை மேற்கொண்டது. உத்தரப்பிரதேசம் மகாராஷ்டிரம் ஆந்திர பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலுள்ள ஆறு மக்களவைத் தொகுதிகளில் 660 வாக்காளரிடம் இருந்து இக்கருத்துக்கள் பெறப்பட்டன. அவற்றின் கணிப்பின்படி 30 சதவீதத்தினர் மத்தியிலுள்ள ஆட்சி நிலையாக அமையாது எனக் கவலை தெரிவித்தனர். 19 வீதத்தின் அரசு இன்னும் இரண்டு ஆண்டுகள் தொடரும் என்றனர்.

# எயிட்ஸ் நோய்க்கு சித்தமருத்துவம் கோழி எச்சத்தில் இருந்து மின்சாரம்

## தமிழ்நாடு சட்டப் பேரவையில் அமைச்சர் அறிவிப்பு

தமிழ்நாடு சட்டப்பேரவையின் கூட்டத்தொடரின் போது அவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள் சிலவற்றிற்கு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் ஆற்காடு வீரசாமி பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

எயிட்ஸ் நோயை சித்த மருத்துவத்தின் மூலம் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருந்தாலும் விஞ்ஞான ரீதியாக அதனை நிரூபிக்க வேண்டியுள்ளது. அப்படி விஞ்ஞான ரீதியாக நிரூபிக்க சித்த மருத்துவத் துறைக்கு ரூபா 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. எயிட்ஸ் நோய் உள்ள 400 பேருக்கு தாம்பரம் சானிட்டோரியம் மருத்துவ மனையில் சித்த மருத்துவத்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர்களில் 200க்கும் மேற்பட்டவர்கள் குணமடைந்துள்ளனர். சித்த மருத்துவத்தில் நல்ல மாத்திரைகள் உள்ளன என்றார் அவர்.

மேலும் அவர் கூறுகையில் தெரிவித்ததாவது:

கோழியின் எச்சத்தை எரித்தல், நொதித்தல் போன்றவற்றின் மூலம் எரிபொருளாக்கி மின் உற்பத்தி செய்யலாம். நொதித்தல் முறையின் மூலம் உருவாக்கும் எரிபொருள், உரம் ஆகியவற்றின் தரம் சிறப்பாக இருக்கும். அரசும் தனியார் நிறுவனமும் இணைந்து சேலத்தில் உள்ள கோழிப்பண்ணையில் இதற்காக மாதிரிக்கலன் அமைக்க தமிழ் நாடு எரிசக்தி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. இப்படி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு ஆண்டுக்கு 5 அல்லது 10 மெகா வாட் அளவுக்குத்தான் இருக்கு. ஆயினும் சிறுதுளி பெருவெள்ளம் என்கிற அடிப்படையில் அரசு இம் முயற்சியினை மேற்கொண்டு வருகின்றது என்றார் அவர்.

# சோனியா அழைப்பு மூப்பனார் தவிப்பு

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் இந்திய அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படுத்தி வருகின்றன. அரசியலுக்கு வர மறுத்த மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவியான இத்தாலியப் பெண் சோனியா காந்தி அதிரடி நடவடிக்கையாக காங்கிரசின் தலைமைப் பதவியை கைப்பற்றினார் என்பது பலரும் அறிந்ததே..

அவர் அண்மையில் பத்திரிகையாளரிடம் பேசிய போது தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனாரும் அவரைச் சேர்ந்தவர்களும் திரும்பி வருவதனை காங்கிரஸ் வரவேற்கும் எனத் தெரிவித்தார். அத்துடன் மூப்பனாரும் அவரைச் சேர்ந்தவர்களும் காங்கிரசின் அங்கமாக பல காலம் இருந்தவர்கள் அவர்கள் அனைவரும் எங்கள் நண்பர்களே என மேலும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் மூப்பனார் தெரிவித்ததாவது: சோனியா மற்றும் அவரது குடும்பத்தினர் மீது மதிப்பு வைத்திருக்கின்றேன். ஆனால் காங்கிரசுக்கும் திரும்புவது என்பது வேறு விடயம். தஞ்சையில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தலைவர் பதவியிலிருந்து விலகும் கடிதத்தை கொடுக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

# கோயில்களில் தமிழில் அர்ச்சனை கோயில் சொத்துக்களை மீட்கும் பணி

## தமிழ்நாடு அரசின் நடவடிக்கை

கன்னியாகுமரியில் தொடங்கி தமிழகம் முழுவதும் உள்ள முக்கிய கோயில்களுக்குச் சென்று தமிழ் வழிபாட்டை வலியுறுத்திவிட்டு தமிழ்நடை ஊர்திப் பயணக்குழு சென்னைக்கு திரும்பி உள்ளது. இத் தமிழ் நடை ஊர்தி பயணக்குழுவிற்கு அமைச்சர் தமிழ்க்குடிமகன் தலைமையில் பல்வேறு தமிழ் அமைப்புகள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. விழாவில் தமிழ் ஆட்சிமொழி மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகள் பேசியதாவது:

தமிழ் அர்ச்சனையை எளிமைப்படுத்துவது தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட அர்ச்சனைக் குழுக் கூட்டம் வரும் வாரத்தில் சென்னையில் நடைபெறும். தமிழ் அர்ச்சனையை எளிமைப் படுத்துவது குறித்து இறுதி முடிவு இக்கூட்டத்தில் எடுக்கப்படும். வரலாற்றுச் சான்றுகளின் மூலமே கோயில்களின் தலபுராணங்களை அறிந்து கொள்ள முடியும். ஆதலால் அகழ்வாராச்சி தமிழ்நாட்டிற்கு வந்து சென்ற வெளிநாட்டு பயணிகளின் பயணக் குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படும் மேற்கோள்கள் எனப் பல்வேறு சான்றுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்துவருகின்றோம். தமிழகத்தில் உள்ள கோயில்களில் இருந்து சுமார் 30,000 ஆயிரம் கல்வெட்டுகளை ஆய்வு செய்துள்ளோம் என்றார் அமைச்சர். தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள கோயில்களுக்கு வெவ்வேறு இடங்களில் சொத்துக்கள் உள்ளன. இராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலுக்கு சொந்தமான சுமார் 621 ஏக்கர் நிலம் சென்னையில் உள்ளது. இதனால் சொத்துக்களை பராமரிப்பதில் பெரும் சிரமம் ஏற்படுகின்றது. நிலங்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகின்றது. இவ்வகையில் தமிழ்நாடு முழுவதும் 125 கோடி மதிப்புள்ள கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. சென்னையில் ஆக்கிரமிப்பு செய்துள்ள சொத்துக்களை மீட்கும் பணி அடுத்த ஓரிரு நாள்களில் தொடங்கும் என்றார் அவர். அவ்விழாவில் தமிழ் நடை ஊர்தி பயணக்குழுத் தலைவர் வா.மு சேதுராமன் பேசுகையில் தமிழகத்தின் பெரும்பாலான கோயில்களில் தமிழ் அர்ச்சனை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. எனத் தெரிவித்தார்.

# தனித்து டெல்லி சென்ற ராமதாஸ்



அ.திமுக கூட்டணியின் இடம்பெற்ற பாட்டாளி மக்கள் கட்சிக்கு தேர்தலில் மூன்று இடங்கள் கிடைத்தது தெரிந்ததே. அதன் பின்னால் டெல்லி சென்ற போதெல்லாம் டாக்டர் ராமதாஸ் கூட்டணியின் தலைவர் ஜெயலலிதாவுடன் கூடவே சென்றிருந்தார். ஆனால் இம்முறை ராமதாஸ் தனியாகவே டெல்லி சென்றுள்ளார். டெல்லி சென்ற அவர் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதற்காக பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார். அத்துடன் மத்திய அமைச்சரவை விரிவுபடுத்தப்படும்போது பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த, மேலும் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அவரது கட்சியைச் சேர்ந்த தலித் எழில்மலை மத்திய அமைச்சரவையில் சுகாதார நலத்துறை இணை அமைச்சராக ஏற்கனவே இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ☺ வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ உலகிலேயே முதல் உதாரணமாக கம்யூனிச கட்சியை ஜனநாயக வழியில் ஆட்சிக் கட்டில் உட்கார வைத்துக் காட்டிய அற்புத மனிதர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு! 'கம்யூனிச பெருந்தலைவர் என்ற சாதாரண வார்த்தைகளுக்கெல்லாம் அடங்காமல் உழைக்கும் வர்க்கம் ஒரு தாங்குகோலாக நின்ற அற்புத மனிதர்!
இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத சாதனையாக இன்றும் கேரளத்தில் ஒரு நாளைக்கு சாதாரண தினக்கூலி 150 ரூபாய் என்பது சட்டமாகி நிற்பது அவரால்தான். அதனால் முதிர்ந்த வயதில் அவர் மறைந்தாலும் கண்ணீர் அஞ்சலி செலுத்தாத தொழிலாளி இல்லை.

*- தனது 89 வயதில் காலமான இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுக்கான ஜூனியர் விகடன் அஞ்சலியில்.*

❀ ❀ ❀

☺ எங்கே பார்த்தாலும் நம்பிக்கையின்மைதான். அரசியலுக்கு வரும் செயல்வீரர்கள் முதலில் எதிர்கொள்வது நம்பிக்கையின்மை. இதெல்லாம் விரும்பிய அளவு வெற்றிகிடைக்காததால் தோல்விகளால் இன்னும் எத்தனையோ காரணங்களால் ஏற்படுகின்றது. ஏன் இப்படி நடக்கின்றது என்று நான் ஆராய முயற்சி செய்திருக்கிறேன்.

*- முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்ம ராவ் தனது நாவல் வடிவத்தில் வந்திருக்கும் சுயசரிதையான 'த இன்சைடர்' வெளியிடப்படுவதற்கு முதல் நாள் இந்தியா டுடே பேட்டியில்.*

❀ ❀ ❀

☺ 'அமீபியாசீஸ்' என்ற குடல் நோய் எப்படி வருகின்றது?
'அசிங்கமாகச் சொல்வதென்றால் இன்னொருவரின் கழிவைச் சாப்பிடுவதால் வருகின்றது. இதையே நாகரிகமாகச் சொல்வதென்றால் கழிவில் உட்காரும் ஈ வாயில் வந்து உட்காருவதனால் இந்த நோய் வருகின்றது' என்று கடுமையாகச் சொன்னார் டாக்டர்.
இவ்வளவு கடுமையாகச் சொல்லலாமா டாக்டர்?
'பப்ளிக்கா லெட்ரின் போறது நம்ம கலாச்சாரமா போயிடுச்சு. சாப்பிடுவதற்கு முன் நன்றாகச் 'சோப்' போட்டு கை கழுவும் பழக்கமும் இல்லாமல் போச்சு. ஜனங்கள் நினைத்தால் இந்த நோயை ஒழித்துவிட முடியும். ஆனா யாரும் செய்யிறதில்லையே.'

*- விஜய் தொலைக் காட்சி ஒளிபரப்பிய 'டாக்டரின் பதில்' எனும் நேர்காணலில் பிரபல டாக்டர் ரங்கபாஷ்யம் கூறியதாக தேவி இதழில்*

❀ ❀ ❀

☺ அரசியல் என்றாலே ஒரு காலத்தில் சோனியாவுக்கு வேப்பங்காயாக கசந்தது, ஆனால் இன்று அவர் ஆட்டுவிப்பது போலத்தான் காங்கிரஸ் ஆடுகின்றது. அடுத்து அவர் மகள் பிரியங்காவையும் களத்தில் இறக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிரியங்கா நிச்சயம் பிரதமராகிவிடுவார். தனது பாட்டி இந்திராவையும் மிஞ்சும் வகையில் அவர் செயல்பாடுகள் அமையுமென ஜோதிடர்கள் இப்போதே கணித்துக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

*- ராணி வாராந்தரியில்*

❀ ❀ ❀


☺ தி.மு.க. அரசைக் கவிழ்த்து கலைஞர் அரசை பழிவாங்குவது அதற்கு மறுத்தால் பா.ஜ.க அரசை பழிவாங்குவது - இதுதான் ஜெயலலிதா அடைந்த வெற்றியால் நாட்டு மக்கள் காணப்போகும் பலன்.

*- 'இந்தியா டுடே' ஆசிரியருக்கு வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தில்*

❀ ❀ ❀

☺ காங்கிரசுடன் இணைவது பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்படவே இல்லை.

*- தஞ்சையில் நடைபெற்ற த.மா.கா செயற்குழு கூட்டம் முடிந்ததின் பின் பத்திரிகை நிருபர்களிடம் மூப்பனார்.*




நன்றி: நக்கீரன்




# ஐ.நா. தடையை மீறி லிபிய விமானம் மக்கா பயணம்

(திரிப்போலி - மார்ச் 31)

லிபியா மீது ஐக்கிய நாடுகள் சபை விதித்த சர்வதேச விமானப் பயணத் தடைக் கட்டுப்பாடுகளை மீறி லிபிய விமான சேவையைச் சேர்ந்த விமானம் ஒன்று 105 ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு சவுதி அரேபியாவுக்குச் சென்றுள்ளது.

1992-ம் ஐ.நா. சபையால் கொண்டுவரப்பட்ட விமான போக்குவரத்துத் தடைச் சட்டம் இன்னும் நடைமுறையில் உள்ள நிலையில் திரிப்போலியில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் சவுதி அரேபியாவில் ஜித்தா விமான நிலையத்தில் ஹஜ் யாத்திரிகர்களை தரையிக்கிவிட்டு மீண்டும் பத்திரமாக லிபியாவுக்குத் திரும்பியுள்ளது.

ஜித்தாவில் இறக்கப்பட்ட லிபிய யாத்திரிகர்களை மக்காவுக்கு அனுப்பிவைப்பதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை சவுதி அரேபிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

# அமெரிக்க உதவிகளை ஏற்றுக்கொள்ள கியூபா அரசாங்கம் மறுப்பு

(ஹவானா - மார்ச் 31)

கியூபா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை முற்றாக நீக்காதவரை - அமெரிக்காவின் மனிதாபிமான உதவிகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று கியூப அரசாங்கம் அறிவித்துள்ளது.

கியூபாவின் மீதான தடைகளை தளர்த்தப்போவதாக அமெரிக்கா அறிவித்து ஒருவார காலத்துக்குள் கியூபா இந்த முடிவைத் தெரிவித்திருப்பது அது தொடர்ந்து அமெரிக்கா தொடர்பான கொள்கையில் உறுதியாக இருப்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது என்று மேற்குலக இராஜதந்திரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த கியூபாவின் வெளிநாட்டு அமைச்சர் றெபேர்டோ றொபைனா அமெரிக்காவின் முடிவு சாதகமான துதான், ஆனாலும் உண்மையான மனிதாபிமானத்தைப் பேணவேண்டுமென்று வாஷிங்டன் கருதினால் அது 36 வருடகாலமாக கியூபா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கவேண்டும். பொருளாதாரத் தடைகள் தொடர்ந்து அமுலில் இருக்கும் பட்சத்தில் மனிதாபிமான உதவிகளை ஏற்றுக்கொள்ள முடியாது, அவ்வாறு ஏற்றுக்கொள்வது எமது மக்களையும் எமது நாட்டின் விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த போராளிகளையும் அவமதிக்கும் செயலாக அமையும் என்றும் கூறியுள்ளார்.

# உலகெங்குமுள்ள இஸ்ரேலிய நிலைகள் தாக்கப்படும் ஹமாஸ் எச்சரிக்கை

உலகெங்கிலுமுள்ள இஸ்ரேலிய நிலைகள் தமது தாக்குதலுக்கு உள்ளாகும் என்று 'ஹமாஸ்' இயக்கத்தின் இராணுவப் பிரிவு எச்சரித்துள்ளது.

உறுதியான வன்முறை மிக்க ஒரு பூகம்பத்தை யூதர்கள் எதிர்நோக்கப் போகின்றார்கள் என்று எச்சரித்து ஹமாஸ் இயக்கம் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த இயக்கத்தின் குண்டு தயாரிக்கும் நிபுணரும், முக்கிய பிரமுகரும் இஸ்ரேலினால் மிகவும் தேடப்பட்டு வந்தவருமான மொஹியத்தின் ஷரீப்(32) இஸ்ரேலிய உளவுப் படையால் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் முகமாகவே ஹமாஸ் இயக்கம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

1995-ம் ஆண்டு தொடக்கம் இஸ்ரேலில் நடந்துவந்த குண்டு வெடிப்புகளின் சூத்திரதாரி என்று கருதப்பட்ட மொஹியத்தீன் ஷரீப் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டபின் காருக்குள் போடப்பட்டு 'றிமோட் கொன்றோல்' மூலம் அந்தக் கார் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என்ற புதிய தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

# சீனா விரைவில் அமெரிக்காவை மிஞ்சிய வல்லரசாக மாறும் - அவுஸ்திரேலியப் பிரதமர்

(மெல்போர்ன் - மார்ச் 31)

கூடிய விரைவில் அமெரிக்காவை மிஞ்சி மிகப்பெரிய உலக வல்லரசாக சீனா மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் நிறைய உள்ளன என்று அவுஸ்திரேலியப் பிரதமர் மல்கம் பிரேசர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 21-ம் நூற்றாண்டில் கல்வி என்ற தொனிப்பொருளில் உரையாற்றிய அவர் 'சீனாவின் பொருளாதார வளர்ச்சி அமெரிக்காவை மிஞ்சிவிடும். உலகில் இரண்டு வல்லரசுகள் இருந்தபோது ஓரளவுக்குப் பிரயோசனமான காரியங்களில் ஈடுபட்டன.

ஆனால் இப்போது உலகில் ஒரேஒரு வல்லரசுதான் உள்ளது. கம்யூனிசத்தை வெற்றிகண்ட வல்லரசாக அது திகழ்கிறது. அந்த வல்லரசான அமெரிக்கா தனது நலன்களை ஊக்குவிக்கக்கூடிய பெறுமானங்களை வளர்த்துக்கொள்ளவதிலேயே அக்கறை செலுத்துகிறது. ஆனால் இன்று அமெரிக்காவின் பொருளாதாரத்தை வென்று உலக வல்லரசாக மாறும் அளவுக்கு சீனா வளர்ந்து வருவதை நாம் காண்கிறோம். ஆனால் எந்தவொரு பெரிய சக்தியும் தனக்குச் சமமாக இன்னொரு சக்தி வளர்வதைக் கண்டு மகிழ்ச்சியடையப் போவதில்லை.

எனவே சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பிரச்சினைகள் வருவது நிச்சயம் என்று கூறியுள்ளார்.

# ஹமாஸ் இராணுவப் பிரிவுத் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் மோதல்

(ஜெருசெலம் - ஏப்ரல் 2)

கடந்த 30.03.98 திங்கட்கிழமை கொலை செய்யப்பட்ட ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப் பிரிவுத் தலைவர் Mohiebdine Sharif இன் இறுதி ஊர்வலம் சிஸ் ஜோர்டானில் நடைபெற்றபோது இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும், பாலஸ்தீனர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

5000-க்கு மேற்பட்ட பாலஸ்தீனிய மக்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலம் - Ramallah என்ற இடத்தில் இஸ்ரேலிய இராணுவத்தினர் போட்டிருந்த வீதித்தடைகளை உடைத்துக் கொண்டுபோக முற்பட்டபோது, இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும், ஊர்வலக்காரர்களுக்கும் இடையில் கலவரம் ஏற்பட்டது.

இஸ்ரேலிய இராணுவத்தினர் ஊர்வலத்தில் வந்தவர்களை நோக்கிச் சுட்டதில் 10க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் காயமடைந்துள்ளனர். பாலஸ்தீனியர்களும் இஸ்ரேலிய இராணுவத்தினரை நோக்கி கற்களை வீசித் தாக்கியதில் 2 இஸ்ரேலிய இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப் பிரிவுத் தலைவர் இஸ்ரேலிய எல்லைப் பகுதியில் அவரது வாகனத்துக்குள் வைத்து கொலை செய்யப்பட்ட நிலையில் எரிந்து கிடக்கக் காணப்பட்டார். அநேகமாக அவரது வாகனத்தில் பொருத்தப்பட்ட தானியங்கிக்குண்டு வெடித்தன் மூலம் அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இவரது கொலைக்கு இஸ்ரேலிய உளவு படையான மொசாட்டே காரணமென்று ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

# மீண்டும் கம்யூனிச ஆட்சிக்குள் வரும் முன்னாள் சோவியத் குடியரசு நாடுகள்


(மொஸ்கோ - ஏப்ரல் 4)

1991-ம் ஆண்டு கம்யூனிச சோவியத் யூனியன் உடைந்து சிதறியவுடன் அதிலிருந்து பிரிந்து சென்று தனியரசுகளாக பிரகடனப்படுத்திக்கொண்ட பல நாடுகளில் மீண்டும் கம்யூனிஸ்டுக்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்றார்கள்.

ஜோர்ஜியா, அஜர்பைஜான், பைலோரஷ்யா ஆகிய நாடுகளை தொடர்ந்து உக்கிரேனிலும், கம்யூனிஸ்ட்டுக்கள் முன்னணிக்கு வந்திருக்கின்றார்கள். உக்கிரேனில் கடந்தவாரம் நடைபெற்ற தேர்தலில் தனியொரு கட்சி என்ற வகையில் கம்யூனிஸ்ட் கட்சி 187 இடங்களைப் பெற்றுள்ளது. 450 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் ஏனைய வலதுசாரிக் கட்சிகளுக்கு தனிக்கட்சிகள் என்ற வகையில் நூறுக்குக் குறைவான இடங்களே கிடைத்தன. கம்யூனிஸ்டுகளுக்கு 40% மான மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள்.

இதேபோல் இன்னொரு முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான மோல்டாவியில் நடந்த தேர்தலிலும் கம்யூனிஸ்டுக்களே வெற்றி பெற்றுள்ளார்கள்.

1994 வரை ஒரு உறுப்பினர் கூட பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட முடியாமலிருந்த இங்கு, இம்முறை கம்யூனிஸ்டுகள் அமோக வெற்றிபெற்று அங்கு ஆட்சி நடாத்தும் வலதுசாரி ஜனாதிபதிக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது.



அண்மையில் இந்த நாடுகளில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புக்கள் 1997-ம் ஆண்டு இந்த நாட்டு மக்களிடமிருந்து 'ஜனநாயகம்' பற்றிய கனவு கலைந்துவிட்டதை வெளிப்படுத்தியுள்ளன.

பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலைவாசி ஏற்றம் கறுப்புச் சந்தை வேலையின்மை அதிகாரத்தில் உள்ளோரின் ஊழல் மோசடி நடவடிக்கைகள் என்பன இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருந்த முதலாளித்துவ ஜனநாயக மாயையைக் கலைத்துவிட்டன.

பெரும்பாலான மக்கள் சோவியத் யூனியன் உடைந்து போவதற்குக் காரணமாக இருந்த மிக்கையில் கோர்பச்சேவின் பொருளாதார மறுசீரமைப்புக் கொள்கைகளே, தமது இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணம் என்று நம்புகின்றனர். ஜெல்சினின் ஆட்சியில் இருக்கும் ரஷ்யா உட்பட பெரும்பாலான சோவியத் ஒன்றிய நாடுகளில் உள்ள மக்களின் தற்போதைய கனவாக ஸ்டாலின் காலத்து சோவியத் ஆட்சியே இருந்து வருகின்றது.

இன்றைய பொருளாதார நெருக்கடிகளும், அரசியல் மோசடிகளும், நேர்மையீனங்களும், சீரழிவுகளும், ஸ்டாலினுடைய ஆட்சிக் காலத் தவறுகளை மன்னித்து அந்த ஆட்சியே சிறந்தது என்ற முடிவுக்கு மக்களை வரத்தூண்டியுள்ளது.

# கிளின்டனுக்கு எதிரான பாலியல் வழக்கு தள்ளுபடி

(வாஷிங்டன் - ஏப் 2)

அமெரிக்க அதிபர் பில் கிளின்டனுக்கு எதிராக பவுலா ஜோன்ஸ் என்ற பெண் தொடர்ந்த, பாலியல் வழக்கு நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பில் கிளின்டன் - ஆர்கன்சா மாநிலத்தில் கவர்னராக இருந்த போது பவுலா ஜோன்ஸ் அவரது செயலாளராகப் பணியாற்றினார். அந்தக் காலகட்டத்தில் பில் கிளின்டன் தன் மீது பாலியல் ரீதியில் தவறான முறையில் நடந்து கொள்வதற்கு முயன்றார் என்றும் பாலியல் வல்லுறவில் தன்னை ஈடுபடுத்துவதற்கு முயன்றார் என்றும் பவுலா ஜோன்ஸ் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார்.

ஜனாதிபதி கிளின்டனுக்கு அரசியல் ரீதியாக நெருக்கடியைக் கொடுத்திருந்த இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பவுலாவின் குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரம் இல்லை என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளார்.

இந்தத் தீர்ப்பு நம்ப முடியாததாக இருக்கிறது என்று தெரிவித்துள்ள பவுலா இதற்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# ஹிட்லரின் யூத இனப்படுகொலைக்கு உடந்தை மொறிஸ் பப்பானுக்கு 10 வருட சிறை


*(பாரிஸ் - ஏப்ரல் 2)*

1942-க்கும் 1944-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரான்சில் இருந்த 1500 யூதர்களை நாடு கடத்தியதன் மூலம் நாசிகளால் அவர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாயிருந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் விச்சி (Vichy) அரசாங்கத்தில் உயர் பொலிஸ் அதிகாரியாக இருந்த மொறிஸ் பப்பானுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் இன்று (வியாழன்) காலை அவருக்கு 10 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட யூதர்களின் 3-வது தலைமுறையினரால் தொடுக்கப்பட்ட இவ் வழக்கு 3 நீதிபதிகள், 9 ஜூரிமார்கள் முன்னிலையில் கடந்த 6 மாத காலமாக நடைபெற்றுவந்தது.

மொறிஸ் பப்பானுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞர்கள் பப்பான் ஒரு அரச அதிகாரி என்றும் அரசு உத்தரவிட்ட கடமையையே செய்தார் என்றும் வாதிட்டனர்.

எதிர்த்தரப்பினர், நாசிகளுடன் இணைந்து ஆட்சி நடாத்திய விச்சி அரசின் சின்னமாக



இருப்பவர் பப்பான் என்று அப்பாவி யூதர்களை நாடு கடத்திய செயலுக்காக அவருக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டனர்.

மொறிஸ் பப்பான் மீது அமர்த்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பான 764 கேள்விகளுக்கு தமது தீர்ப்பில் பதில் கூறியுள்ள நீதிபதிகள் அவருக்கு 10 வருட சிறைத்தண்டனையை விதித்துள்ளனர்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய இருக்கும் மொறிஸ் பப்பானுக்கு இப்போது வயது 87 ஆகும். இரண்டாம் உலக யுத்தக் குற்றவாளிகள் தொடர்பாக பிரான்சில் நடந்த வழக்கில் மொறிஸ் பப்பான் 4-வது நபராவார். ஏற்கனவே விச்சி அரசாங்கத்தில் பொலிஸ் திணைக்களத்தின் செயலாளர் நாயகமாக இருந்த ரெனே புஸ்கே (René Bousquet) என்பவருக்கு எதிராக 193 யூதக் குழந்தைகளை நாடு கடத்தியது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடரப்பட்டது. 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் இவர் கொலைசெய்யப்பட்டார்.

இன்னொரு யூதக்குற்றவாளியான ஜோன் லுகே (Jean Leguay)-க்கு 1979-ம் ஆண்டு தண்டனை வழங்கப்பட்டது. அவர் 1989-ம் ஆண்டு தனது 79-வது வயதில் காலமாகிவிட்டார்.

3-வது நபர் விச்சி அரசாங்கத்தில் படைத்துறைப் பொறுப்பாளராக இருந்த போல் தூவியே (Paul Touvier) என்பவருக்கு 1994 ஏப்ரல் மாதம் தண்டனை வழங்கப்பட்டது. 1996 ஜூலை மாதம் தனது 81-வது வயதில் அவர் இறந்துவிட்டார்.

# கறுப்பின மக்களின் விடுதலைக்கு உழைத்த மார்ட்டின் லூதர் கிங்கின் 30-வது ஆண்டு நினைவு



காலா காலமாக அமெரிக்க வெள்ளை இனத்தவர்களால் அடிமைப்படுத்தப்பட்டும் இழிவுபடுத்தப்பட்டும் வந்த கறுப்பின மக்களின் விடுதலைக்கு கனவு கண்ட மார்ட்டின் லூதர் கிங்கின் 30-வது ஆண்டு நினைவு நாள் கடந்த 04.04.1998 அன்று உலகெங்கும் நினைவுகூரப்பட்டது.

1929-ம் ஆண்டு அமெரிக்காவில் கறுப்பின மதகுரு ஒருவரின் மகனாகப் பிறந்த மாட்டின் லூதர் கிங் தந்தை வழியில் மதகுருவாக மதப்பணியாற்றிய அதே நேரத்தில் - கறுப்பின மக்களின் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்து உலகப் புகழ் பெற்றவர். சமூக உரிமைகள் இயக்கம் (Civil Rights Movement) என்ற அமைப்பைத் தொடங்கி கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடியவர்.

அமெரிக்காவில் வெள்ளை இன மக்களுக்குச் சமமான உரிமைகள் கறுப்பின மக்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதற்காக பல போராட்டங்களை அமைதி வழியில் நடத்தியவர். இவரது போராட்டத்தின் உச்சக்கட்டம் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பங்குகொண்ட வாசிங்டன் பயணமாகும் (March of Washington) வாசிங்டன் நினைவுச் சின்னத்திலிருந்து ஆபிரகாம் லிங்கன் நினைவுக் கட்டடம் வரை திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தில் எனக்கோர் கனவுண்டு. (I have a dream) என்ற தலைப்பில் அவர் ஆற்றிய புகழ்பெற்ற உரை நிறவெறி பிடித்த அமெரிக்க வெள்ளையரை தலைகுனிய வைத்தது. இந்த உரையில் அமெரிக்காவில் கறுப்பின மக்கள் அனுபவித்த அனுபவித்து வருகின்ற துயர் பற்றியும் அமெரிக்க அரசின் பாராபட்சம் மற்றும் உறுதி மொழிகளை காற்றில் பறக்கவிடும் தன்மை பற்றியும் அவர் கடுமையாகச் சாடியிருந்தார்.

நல்ல பேச்சாளராக மட்டுமல்லாது நல்ல எழுத்தாளராகவும் விளங்கிய மாட்டின் லுதர் கிங் 'நமது போராட்டம்', 'மாண்டகமரியின் வரலாறு', 'அன்பின் வலிமை', 'நாம் எங்கு செல்கிறோம்', 'நாம் ஏன் காத்திருக்க முடிவதில்லை' ஆகிய புகழ்பெற்ற நூல்களை எழுதியிருக்கின்றார்.

தனது 35-வது வயதில் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற மார்ட்டின் லூதர் கிங் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி அமெரிக்காவின் தென்னசி மாகாணத்தில் உள்ள மெம்பிசி என்ற இடத்திலுள்ள Motel ஒன்றின் பல்கணியில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவரால் சினேப்பர் துப்பாக்கியால் தனது 39-வது வயதில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மார்ட்டின் லூதர் கிங் கொலை செய்யப்பட்டு 30 வருடங்கள் கடந்த பின்பும் அமெரிக்காவில் உள்ள 34 மில்லியன் கறுப்பின மக்களுக்கான நியாயம் மற்றும் இன சமுத்துவம் பற்றி அவர் கண்ட கனவு இன்னும் நனவாகவில்லை.

அமெரிக்கா சகல துறைகளிலும் முன்னேறிய போதிலும் கறுப்பின மக்களுக்கு உரிமைகளின் சமத்துவம் என்பது இன்னும் எட்டாத ஒன்றாகவே உள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் 20-ம் நூற்றாண்டு முடியும் இந்தத் தறுவாயிலிலும் அமெரிக்காவில் இன சமத்துவம் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது என்பதை ஒத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

# கண்ணீரால் பதில் சொன்ன பெண்

*(ரோம் - மார்ச் 30)*

வாய்பேச முடியாதவர் சைகையால் பதில் சொல்வது வழக்கம். அதுபோல் 'கோமா' நிலையில் உள்ள ஒரு பெண் கண்ணீரால் தனது பதிலை தெரிவித்துள்ளார். இத்தாலியில் 21 வயதான பேடி மிருவி என்ற பெண் கர்ப்பமுற்ற நிலையில் மூளையில் ஏற்பட்ட அதிர்ச்சி ஒன்றால் நினைவிழந்து கடந்த 6 மாதமாக 'கோமா' நிலையில் இருந்தார். கடந்தவாரம் அவருக்கு பெண் குழந்தை ஒன்று பிறந்தது.

இந்தக் குழந்தையின் இதயத் துடிப்பை இயந்திர மூலம் தாயின் காதுக்கு அருகில் வைத்து குழந்தையின் இதயத் துடிப்பு கேட்கிறதா என்று வினவியபோது, நினைவிழந்த நிலையில் இருந்த அப் பெண்ணின் கண்ணிலிருந்து கண்ணீர் வந்தது.

சைகை மொழியில் இதற்கு அர்த்தம் 'ஆம்' என்று வைத்தியர்கள் பதிலளித்ததாக இத்தாலியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வாரக் குறிப்பு

### 29.03.1998 ஞாயிற்றுக்கிழமை

- கொங்கோ ஜனநாயகக் குடியரசில் செஞ்சிலுவைச் சங்க பணியாளரைச் சுட்டுக்கொன்ற 13 வயது (இராணுவ) சிறுவன் ஒருவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- பாலஸ்தீன பொலிசாரால் சிறை வைக்கப்பட்டுள்ள ஹமாஸ் இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஜமால் மன்சூர்-தான் தடுத்து வைக்கப்பட்டதை ஆட்சேபித்து சிறையில் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்துள்ளார்.
- ஈராக்கில் சதாம் ஹூசேனின் மாளிகையில் சுமுகமான முறையில் ஆயுதப் பரிசோதனை நடந்து முடிந்ததாக அறிவிப்பு.

### 30.03.1998 திங்கட்கிழமை

- பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸை கொலைசெய்ய திட்டமிட்ட சதி முயற்சி ஒன்றை பிலிப்பைன்ஸ் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.
- வட கொரியா இன்று பாரிய இராணுவ ஒத்திகை ஒன்றில் ஈடுபட்டதாக சீனாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான கின்ஹாவா அறிவித்துள்ளது.
- அமெரிக்கா குவைத்துக்கு 50 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.
- பாலஸ்தீனியர்களின் வீடுகளைத் தரைமட்டமாக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு இஸ்ரேலிய இராணுவத்துக்கு, இஸ்ரேலிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### 31.03.1998 செவ்வாய்க்கிழமை

- ரஷ்ய டூமாவுக்கு (பாராளுமன்றத்துக்கு) தான் நியமிக்கும் பிரதமரை ஆதரிக்க கம்யூனிஸ்டுகள் தவறினால் டூமாவை கலைக்கப் போவதாக ஜனாதிபதி ஜெல்சின் மிரட்டல்
- பாகிஸ்தானின் வர்த்தக நகரான கராச்சியில் இடம்பெற்ற 2 வெவ்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 20 பேர் கொல்லப்பட்டனர்.
- இந்தியாவின் கிழக்குப் பகுதி தலைநகரான கல்கத்தாவில் விலைமாதர்களின் 3 நாள் மாநாடு ஆரம்பித்துள்ளது. தங்களது தொழிலை சட்டபூர்வமாக்க வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
- கனடாவின் தென் கியூபெக் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பல நூற்றுக்கணக்கான மக்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

### 01.04.1998 புதன்கிழமை

- யூகோஸ்லாவியா மீது ஆயுதத்தடை விதிக்கும் தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 14–க்கு 0 என்ற அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது. சீனா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.
- பிரித்தானிய ரோயல் விமானப்படை தனது 80-வது வருட பூர்த்தியை கொண்டாடியது. உலகிலேயே பழமையான விமானப்படை என்ற பெருமை இதற்குண்டு.
- பல்வேறு எதிர்ப்புகள் சர்ச்சைகளுக்கு மத்தியில் ஜனவரி மாதம் ஈத்-உல்-பித்ர் தினத்தையும் மார்ச் மாதம் இத்-உல்-அல்ஹா தினத்தையும் தனது அலுவலக விடுமுறை தினமாக ஐ.நா. பிரகடனப்படுத்தியது.

### 02.04.1998 வியாழக்கிழமை

- எகிப்தில் அரசாங்க உயர் அதிகாரிகளை கொலை செய்ய திட்டமிட்டிருந்த இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எகிப்திய பாதுகாப்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.
- பாலஸ்தீன மேற்குக்கரை நகரமான ஹெப்ரோனில் உள்ள பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தேர்தலில் யாசீர் அரபாத்தின் பதாஹ் அமைப்புடன் போட்டியிட்ட ஹமாஸ் இயக்கம் வெற்றியடைந்துள்ளது.
- ஈரானுக்கு அமெரிக்கர்கள் சென்று வருவதற்கு அமெரிக்க அரசு விதித்திருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 03.04.1998 வெள்ளிக்கிழமை

- துருக்கி சிறைச்சாலையில் உள்ள இடதுசாரி கட்சிக் கைதிகள் தாம் பயணக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த 11 சிறைச்சாலை ஊழியர்களையும் விடுதலை செய்தனர்.
- ஈராக்கிலுள்ள புனித நகரங்களுக்கு ஜனாதிபதி சதாம் ஹூசேன் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள்.
- இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் கடும் உணவுப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 75 இலட்சம் பேர் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலை வரும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

### 04.04.1998 சனிக்கிழமை

- கொலம்பியாவில் (பாக்) மாக்சிசக் கெரில்லாக்களால் கடத்திச் செல்லப்பட்ட 3 அமெரிக்கர்களும் உளவாளிகள் அல்ல என்று அந்த அமைப்பினர் அறிவிப்பு
- எகிப்தின் தலைநகரான கைரோயில் தங்கியிருக்கும் அமெரிக்கப் பிரசைகள் மீது கெரில்லா தாக்குதல் நடத்த இஸ்லாமிய தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.



# ALPHA TELECOM

| | |
|---|---|
| SRI LANKA | 52p, 48p |
| INDIA | 44p, 40p |
| MALAYSIA | 33p, 29p |
| CANADA | 12p, 8p |
| AUSTRALIA | 14p, 10p |

தனது பாவனையாளர்களுக்கு

இனிய தமிழ் புத்தாண்டு

வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்.

UK 5p

புத்தாண்டில் உங்கள்
உறவினர்கள், நண்பர்களுடன்
உரையாட குறைந்த கட்டண
தொலைதூர தொலைபேசி சேவையை
வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்
**ALPHA TELECOM**

| | |
|---|---|
| FRANCE | 14p, 10p |
| GERMANY | 14p, 10p |
| SWITZERLAND | 16p, 12p |
| NORWAY | 16p, 12p |
| SINGAPORE | 23p, 19p |
| USA | 9p, 5p |



இணைப்புகளுக்கும், தொடர்புகளுக்கும்

வேந்தன் : 0181 682 1141 / 0956 262684



# வெளிவந்துவிட்டன

ரமி யின்










RAMIY
RECORDS





ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# பேர்லினும்-கொழும்பும்

சிறீலங்காவின் வர்த்தகத் தலைநகர் கொழும்பில் கடந்த இரண்டு வாரங்களாக தமிழர்களுக்கு எதிராக நடந்துவரும் ஆள் பிடிக்கும் நடவடிக்கை ஹிட்லர் காலத்து பேர்லினை நினைவு படுத்தும் விதத்தில் அமைந்திருக்கிறது.

1940-களின் ஆரம்பத்தில் ஹிட்லரின் நாசிப்படைகள் நள்ளிரவு நேரத்தில் பேர்லின் நகரத்திலிருந்த யூதக் குடியிருப்புக்களுக்குள் புகுந்து வீடு வீடாகக் கதவைத் தட்டி யூதர்களை குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள், ஆண்கள், பெண்கள் என்ற வயது வித்தியாசம் இல்லாமல் துப்பாக்கி முனையில் பொது இடங்களுக்கு இழுத்துச் சென்று சோதனை என்ற பெயரில் இம்சைப்படுத்தி அவர்கள் யூதர்கள் என்பதற்கு அடையாளமாக நட்சத்திரச் சின்னம் பொறித்த பட்டியை அவர்கள் கட்டியிருக்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்து அனுப்புவது வழக்கமாக இருந்தது.

ஆரம்பத்தில் சோதனை செய்வது இம்சைப்படுத்துவது என்றிருந்த இந்த வழக்கம் பின்பு யூத இளைஞர்களையும், யுவதிகளையும் கைது செய்து வதை முகாம்களுக்குக் கொண்டுசெல்லும் நிலைக்கு வளர்ந்தது. இறுதியில் யூதர்களை குடும்பங்குடும்பமாகவே வதை முகாமுக்குள் கொன்று குவிக்கும் நிலைக்கு இந்த நடைமுறை சென்றது.

தற்போதும் பல இலட்சக் கணக்கான யூதமக்களைக் கொன்று குவித்த ஹிட்லரை ஆரிய இனத்தின் காவலன் என்று சொல்லிக்கொண்டு தங்களது ஆரிய வாதத்துக்கும் இனத் தூய்மைக்கும் அப்படிப்பட்ட ஒரு தலைவன் வேண்டும் என்று கனவுகாணும் பௌத்த சிங்கள பெருந்தேசியவாதிகள் நிறைந்த சிறீலங்காவில், நாசிப் படைகளின் பாணியில் சிங்களப் படைகள் கொழும்பிலும் அதன் புற நகர்ப்பகுதிகளிலும் உள்ள தமிழர்களின் வீடுகளுக்கு நள்ளிரவு வேளைகளில் புகுந்து குடும்பம் குடும்பமாக அவர்களை இரவு உடுப்புடன் இழுத்துச் சென்று விசாரணை என்ற பெயரில் இம்சைப்படுத்தும் – இளவயதினரை ஆயிரக் கணக்கில் கைதுசெய்துகொண்டு செல்லும் முயற்சிகளில் இறங்கியிருக்கின்றனர்.

ஹிட்லர் யூதர்களை ஒரு இனம் என்ற அடிப்படையில் அடையாளக் குறியிட்டு தனிமைப்படுத்தியதுபோல் சிறீலங்கா அரசு தமிழர்களுக்கு 'பொலிஸ் பதிவு' என்ற ஒரு தனியான அடையாளக் குறியீட்டை வைத்திருக்கிறது. உலகில் உள்நாட்டு யுத்தம் நடக்கும் பல நாடுகளில் ஒரு சிலரை அல்லது ஒரு சில குடும்பங்களை நள்ளிரவு வேளையில் அரச படையினர் பிடித்துச் செல்வது வழக்கம். ஆனால் ஒரு இனம் என்ற அடிப்படையில் ஆயிரக்கணக்கான குடும்பங்களை ஒரே இரவில் பிடித்துச் செல்லும் நடைமுறை ஹிட்லர் கால பேர்லினுக்கு பின்பு கொழும்பிலேதான் நடந்திருக்கிறது; நடந்துவருகிறது.

ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் யூதர்களை பிரான்சிலிருந்து நாடுகடத்தியதற்காக அதற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிக்குத் தண்டனை கொடுக்கும் பிரான்ஸ் போன்ற நாடுகள், சிறீலங்காவுடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவுக்கு இனப்படுகொலை புரிந்த–புரிந்துவரும் செர்பிய அரசை கண்டிக்கும் நிர்ப்பந்திக்கும் மேற்குலக நாடுகள், சிறீலங்கா அரசினது இனச் சுத்திகரிப்பு, இன ஒதுக்கல் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.

# ஐ.நா. 54வது ஆணைக்குழுவில் சிறீலங்கா மீது அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து கண்டனம்

ஐ.நா. 54வது மனித உரிமை ஆணைக் குழு, தொடர்ந்து திரு. ஜேக்கப் சலிபிப் என்ற தென்னாபிரிக்க பிரதிநிதியின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இடை இடையே அயர்லாந்து நாட்டின் முன்னாள் பிரதமரும், தற்போதைய ஐ.நா. மனித உரிமை தூதுவருமான திருமதி மேரி ரோபின்சன் சமூகம் அளிப்பார். தொடர்ந்து நாடுகளின் பிரதிநிதிகளும், அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் வேறுபட்ட பல விடயங்களில் காரசாரமான பேச்சு, சொற்பிரயோகங்களுக்கு ஆளாகின்றனர்.

பல அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் சிறீலங்கா அரசு மீது தமது கண்டனங்களை எழுப்பி வருகின்றன. இதில் 'சமாதானத்திற்கும் விடுதலைக்குமான சர்வதேச பெண்கள் அமைப்பு', 'ஆசியன் கலாச்சார முன்னேற்ற அமைப்பு' மற்றும் சர்வதேச கல்வி நிறுவனம் ஆகியவை தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை 'சர்வதேச மன்னிப்புச் சபை' (Amnesty International) இவ் 54வது மனித உரிமை ஆணைக்குழுவிடம் சிறீலங்கா பற்றிய சில சிபாரிசுகளை முன்வைத்துள்ளது. இதில் சிறீலங்கா அரசு, முன்பு மனித உரிமை மீறல்களை தாம் குறைப்பதற்கு முன்னெடுப்பதாகக் கூறிய சில உடன்பாடுகளை இன்றும் நடைமுறைப்படுத்தவில்லை என்றும், அவை உடனடியாக நடைமுறைப்படுத்த இவ் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டிய அதேவேளை, சிறீலங்கா அரசின் பொய்ச் சத்தியங்கள் பற்றியும் கடுமையாகச் சாடியுள்ளது.

ஆசியாவின் 'கலாச்சார முன்னேற்ற ஸ்தாபனம்', சிறீலங்காவில் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதைக் கடுமையாகக் கண்டித்துள்ள அதேவேளை, 'வீரகேசரி' பத்திரிகை நிருபர்களுக்கு அண்மையில் நடந்த அனுபவங்களை உதாரணமாகக் கூறியுள்ளது. சர்வதேச கல்வி நிறுவனம், சிறீலங்காவில் தொடர்ந்து நடைபெறும் இனக் கலவரம், தமிழினப் படுகொலைகளுக்கு சிறீலங்காவின் இனத் துவேசக் கொள்கையே காரணம் என்றும், இதில் பிரித்தானிய அரசும் குற்றவாளியாகக் காணப்படுவதாகக் கூறியுள்ளது. அத்துடன் 15 வருட காலப் போரில் ஆயிரத்து அறுநூறு தேவாலயங்களும், கோயில்களும் நாசமாக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா அரசை குற்றம்சாட்டியுள்ளது. சமாதானத்திற்கும் விடுதலைக்குமான சர்வதேச பெண்கள் அமைப்பின் சார்பில் பேசிய செல்வி சுனிலா அபயசேகரா, ஐ.நா.வின் காணாமல் போவோருக்கான மனித உரிமைகள் பிரிவு, 1997ல் சிறீலங்காவிலேயே ஆகக் கூடுதலான மக்கள் காணமல்போயுள்ளதாகக் கூறியுள்ளதை இவ் ஆணைக் குழு அவதானமாகக் கவனிக்க வேண்டும் என்றும் கூறியதுடன், வடக்குக் கிழக்கில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதை கண்டித்தும் உள்ளார். அத்தோடு சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் அரச உதவியுடன் தமது கொலை, பாலியல் வன்முறை, ஆட்கடத்தல் முதலான மனித உரிமை மீறல்களை தொடர்ந்தும் செய்துகொண்டிருக்கிறார்கள் என குற்றம் சாட்டினார்.

இந்த 54வது கூட்டத்தொடரில் கலந்து கொண்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை எடுத்துரைத்தனர். அத்தோடு சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளையும் விநியோகித்தனர்.

இவ் அறிக்கையில் தமிழர் தாயகத்திலிருந்து சிறீலங்காத் துருப்புக்கள் உடனடியாக 'வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் அதேவேளையில், விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கடந்த மாவீரர் தினத்தன்று கூறிய, பேச்சுவார்த்தைக்கான அடிப்படை 'திம்புக் கொள்கைகள்' என்பதை வலியுறுத்தியுள்ளமையும் இணைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**ஐ.நா.விலிருந்து ச. வி. கிருபாகரன்**

# மாற்றம் கொள்வதா? முரண்பட்டு நிற்பதா?

*அன்புடன் எதுகை + மோனையார் அவர்கட்கு!*

இனிய நல்வணக்கங்கள். முழக்கம் 166 இன் 'நாமே புலையர்' என்று தலைப்பிட்டு நீங்கள் எழுதியதுபற்றி கருத்துக் கேட்டிருந்தீர்கள். என் குட்டி அறிவுக்கு தட்டுப்படுவதை பகிர்ந்துகொள்கிறேன்.

ஒவ்வொரு மொழியையும் போலவே எங்கள் தமிழ் மொழியையும் காலவோட்டத்திலே தன் சொல் வளத்தைப் பெருக்கியும், உணர்த்தும் சொற்களை கருத்து மாறுபாடுகளில் இருந்து தவிர்க்கும் படியாக வரையறைகளை வகுத்தும் வருகின்றது. ஒரு சில பத்து உணர்வொலிகளுடன் ஓசை வெளிப்பாடுகளுடன் தொடங்கிய ஆதிகாலமனிதன் இன்று நம்மை இதுவரை கொண்டுவந்து விட்டிருக்கிறான். மேலும் சொற்களின் கருத்துகளிலும், பயன்பாட்டு புழக்கத்திலும் அந்தந்த மொழி பேசிய மக்களின் சமூக பண்பாட்டு, நாகரீக விழுமியங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்டதே. எங்களைப் பொறுத்தவரை ஆரியத்தாக்கம் குறிப்பிடத்தக்க அந்நியத் திணிப்புகளையும் எம்மேல் மேற்கொண்டது. இதன் எச்ச சொச்சங்களில் சில அகற்றப்படவேண்டிய தேவையற்றும், (மானிட வரலாற்றில் சில சங்கமங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதே! சுத்தமாக, சுயமாக எவரும் வானத்திலிருந்து குதிப்பதில்லைத்தானே!) சில அகற்றப்பட முடியாமல் மக்களைப் பீடித்தும் இருக்கின்றன. கதிரவச்சுவரொளியில் கண் விழிக்கும் காலமிது; ஆகவே, ஒவ்வாததை உதறித் தள்ளும் தேவையே!

மொழியுலகில் 1500 வருடங்கள் பிரண்டுபட்டுப்போன கருத்துக்களை புழக்கத்திற்கேற்ப மாற்றிக் கொள்வதா அல்லது சங்க ஏடுகளை ஆதாரம் காட்டி வழக்கமான கருத்து வெளிப்பாடுகளுக்கு முரண்காட்டி நிற்பதா? Deutsch மொழியில் Duden என்னும் 'நிகண்டு' தன் சொற் பிரயோகங்களை உறுத்தி நிற்பதில் தனியாட்சி செய்கின்றது. ஆண்டு தோறும் புதுப்பிக்கப்படும் இது பல கருத்துக்களை ஒரு சொல் உணர்த்துவதை கூடியவரை தடுத்து நிற்கின்றது. நம்மைப் பொறுத்தவரை தமிழகத்து அகராதி வெளியீட்டாளர்கள் சொந்த மொழிக்கு இரவல் எண்ணங்களுடன் அச்சுவடிவம் கொடுக்கிறார்கள். கீழுள்ள அகராதி விளக்கங்கள் எடுத்துக் காட்டுகளாகலாம்!

ஆரியர் - அறிவாளிகள், மேன்மையானவர்கள்

தாசரி - அடிமைகள், ஊழியர்கள் (தஷ்யூ என்று திராவிடரை குறிக்க ஆரியர் பயன்படுத்திய பதம் இன்று தமிழிலேயே இழிவு படுத்தப்பட்டு நிற்கிறதல்லவா! தாசனின் பெண்பாலான தாசி கூடாத சொல்லாகவும் மாறிவிட்டது)

## எதிரொலிகள்

ஈழம் - சிங்களத்தீவு

இவை தவிர ஆணாதிக்க சமூகக் கருத்துக்களால் பேதை-பேதமை-பெண் போன்றவை இன்றும் வழங்கப்படுகின்றன. மடையன் என்பது சமையல் வேலை செய்யும் தொழிலாளியைக் குறிப்பதே. இத் தொழிலைச் செய்வதற்கு பெரிதாக கல்வித்தகைமை தேவையில்லாமல் போனதால், மடைத்தனம்-அறிவீனம் என்றாகி அடிக்கடி நாங்கள் ஏசிக்கொள்ளும் சொல்லாகிவிட்டது. பேசுதல் என்பது சொல்லுவதைக் குறித்தாலும், வழக்கத்தில் திட்டுதல் என்பதையே உணர்த்தி நிற்கின்றது. ஆனால், தமிழகத்தில் உரியவாறு உணர்த்தி நிற்கின்றது. மேலும் சவரம் (Shave) செய்யும் சவரர்-கீழ் மக்கள் என்கிறது அகராதி. இத்துடன் ஒரு சொல் பல பொருள் என்பவற்றையும் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடியவாறு (மாற்றவகை இருந்தும்) உள்ளது. பண்டி என்பதற்கு யானை என்றும் மறம்-என்பதற்கு தீமை என்றும் (அப்படியென்றால் புறம் (புறநானூறு தீயவர்களான மறவர்களைப் பாடியது என்றும் பொருள்படும் பாடிய மறவர்கள் தீயவர்களா!) பொருள் சொல்லக் கூடியவாறு இருப்பது நம்முடைய கடந்த காலத்து இலக்கியச் செழுமையே அன்றி குறையல்ல. ஆனால் இதைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் தமிழ் நீதிமன்ற, சட்ட மொழியாக்கப்பட வேண்டுமென்று விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கு கவிஞர் கண்ணதாசன் கூறிய விதண்டாவாதம் கவனிக்கத்தக்கது; 'தமிழில் நீங்கள் எழுதும் எந்தச் சட்டமும் தனது பல்வேறு உணர்த்துதல்களால் செல்லுபடியாகாமல் போகுமென்பதை நிரூபித்துக் காட்டுவேன்'.

'காட்சி' வடமொழியிலிருந்து வந்ததென உறுத்தும் அகராதி, கண்-காண்-காட்சி என்பது மண்-மாண்பு- மாட்சி என்பதைப் போலவே எழுந்ததென்ற இலகுவான உண்மையை மறைத்து 'ட்சி' என்று வரும் சொற்களெல்லாம் வடமொழித் திரிபுகளென்று நட்டென கூறுகின்றன. 'கரு'வும் வடமொழி என்பது அதன் விளக்கம். எக்கச்சக்கமாக தமிழில் வடமொழிக்கலப்புகள் இருப்பது உண்மையே. ஆனால் அதுவே சுய அடையாளங்களைப் பொறுத்தவரையில் குருட்டுப்பார்வைக்கு வழிவகுத்து இரவல் இருப்புகளுக்கு காரணமாக அமைய விடுதல் கூடாது. எங்கள் மண் முழுமையாக ஆதிக்கவாதிகளிடமிருந்து விடுபடும் வேளையில், இதற்கென பரவிய அளவில் முழுத் தமிழுலகத்திற்கும் தமிழால் தமிழ் செய்யும் 'தமிழ்ப்பலகை' மீண்டும் அமையத் தருணம் வாய்க்கும்.

'நீர்' என்பதைக் குறிக்கும் சமஸ்கிருத 'ஜலம்' தமிழில் சிறுநீரைக் குறிப்பது (பேச்சுவழக்கில்) விநோதமே. இப்படி இன்னும் ஏராளம் உள்ளன என்பது நீங்கள் அறிந்ததே.

ஒவ்வொரு பதத்திற்கும் அவற்றின் பாவனை, பிரயோகம் குறித்து 'நிகண்டு' ஆண்டு தோறும் வரவேண்டும். இன்ன சொல் இதை மட்டும்தான் அல்லது இதை ஒத்ததை மட்டும்தான் குறித்து நிற்கின்றது என்று உறுத்தும் வகையில் அமைய வேண்டும். அது வழக்கத்தில் இல்லாத பழந்தமிழ்ச் சொற்களை, சொற்கள் இல்லாத இடத்தில் மீண்டும் புழங்க விட வேண்டும். புராண இலத்தீன் மொழி நவீன அறிவியல் உலக கலைச் சொற்களுக்கு அள்ளித் (அகராதியை சாதீயப் பிணியிலிருந்து நீக்கிய பின்னரே அங்கு தமிழைத் தேட முடியும்) தருவதைப்போல, ஏற்ற இடங்களில் லத்தீன் உட்பட்ட ஏனைய மொழிச் சொற்களையும் தேவையேற்படின் எடுத்துக்கொள்ளாவிடில் இது, இது அதில் வரும் இது என்று பேசவேண்டியிருக்கும். இவற்றிற்கு முதன்மையாக புதிய தமிழ் கலைச்சொற்களின் அறிமுகம் அந்நியமாக இன்னும் இருப்பது தவிர்க்கப்பட்டு பாவனை பரவவேண்டும். நீங்கள் தரும் 'பதில் தமிழ்ச் சொற்கள்' அலசி ஆராயப்பட்டு அகராதியில் புகும்வகை செய்ய வேண்டும். அதிகமான (உங்களால் அறிமுகப்படுத்தப்படும்) சொற்கள் அவற்றின் தன்மை குறித்த சுவையுடையதாய் இருப்பது சிறப்பு. ஒன்று மட்டும் விளங்கவில்லை Fax என்பதற்கு 'தொலைநகல்' என்றால் உமக்கு என்னவாம்? புதிதாக 'தொலை எழுதி' ஒன்று தேவையா? Fax எழுதாமல் பிரதி (சம்ஸ்)-நகல் தானே எடுக்கின்றது.

நம் சொற்களின் 'மூலம்' குறித்த பாணியில் அடிப்படையில் புதிய சொற்களும் அமைவது நல்லதல்லவா! நட+அன்னம் =நடனம், தி+வசம் = திவசம், உள்+ஆறு= உட்கார் , நாடு+அகம் = நாடகம்

தமிழீழம், தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்படும் சொற்களைப் பொறுத்தவரையில், தமிழீழம் எங்களுயிரோடு ஒட்டிக் கிடப்பதால் உடனே வந்தடைகின்றது. தமிழகத்தில் தமிழார்வலர்கள் கலைச் சொற்களை அறிமுகம் செய்வதாக அடிக்கடி வாசிக்க முடிகிறது. அதற்கு மேலே அவைகளை காணமுடிவதில்லை; 'ஈழமுரசு' முரசம் கொட்டவேண்டும். அதுவரை '...புலையர் படையே மூழ்காதே...?' என்பதில் புலையர் யாரென வாசிப்பவரே உணர்ந்து ஒரு முடிவுக்கு வரமுடியும்.

இன்னும் ஒருமுறை சந்திக்கும்வரை அன்புடன்

– எஸ். ஞானவன்.




**முன்கதைச் சுருக்கம்:-**

தமிழீழத்தின் அமைதியான கரையோர குடும்பம் ஒன்றின் மூத்தமகனான அன்ரனி, விடுதலை வேள்வியில் தன்னை இணைக்கும் இலட்சியத்தில் வாழ்கின்றான். வறிய பெற்றோர், தம்பி அருள், தமக்கை மேரி ஆகியோருடன் இவன் வாழ்க்கை கலகலப்பாக போகின்றது. அன்று ஒருநாள் காலையில், அருளின் அச்சக்குரல் வெளியே கேட்கின்றது.....

அன்ரனி அவசரமாக எழுந்து வெளியே சென்று பார்த்தான். கடற்கரையில் சிறுகூட்டம் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. அவனைத்தாண்டி பலர் வேகமாக ஓடிச்சென்று கொண்டிருந்தார்கள். அருள் ஏதோ சொல்லியவாறு முன்னுக்கு போய்க்கொண்டிருந்தான். காற்று பலமாக வீசியபடியால், அன்ரனிக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒருவித அச்சத்துடன், ஓட்டமும் நடையுமாக கடற்கரையை அவனும் சென்றடைந்தான்.

கடற்கரையில் நின்ற சனக்கூட்டங்களை, ஓரளவு விலக்கியபடி உள்ளே எட்டிப்பார்த்தான். அங்கே அவன் கண்ட காட்சி, சில நிமிடங்கள் மூச்சு நிற்குமளவிற்கு அதிர்ச்சியை உண்டாக்கியது. அழுகிய நிலையில் ஒரு மனித உடல் சிதைந்துபோயிருந்தது. கழுத்தருகில், சூட்டுக்காயங்களுடன், கண்கள் கொத்தி எடுக்கப்பட்டு பயங்கரமாக அந்த உடல் காட்சியளித்தது. இறந்தவருக்கு முப்பது வயதிற்குள் இருக்கும். திடகாத்திரமான உடற்கட்டு, நல்ல தொழிலாளி என்பதையும் காட்டியது.

அங்கே குழுமியிருந்தவர்களின் வாய்களிலிருந்து 'யார் பெற்ற பிள்ளையோ...? என்ன கஷ்ரத்தில தொழிலுக்கு போச்சுதோ... அந்தோனியாரே!' என்ற பல ஆற்றாமைக்குரல்கள் வெளிப்பட்டன. அன்ரனியின் முகம். வேதனையால் இறுகி, கல்லுப்போல் இருந்தது. அருகில் அங்கே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அருளையும், வேறு சிறுவர்களையும் வீடுகளுக்கு போகும்படி அனுப்பிவைத்தான்.

நாளைக்கு இதில் நிற்கும் அப்பாவித் தொழிலாளர்களின் நிலையும் இப்படித்தானா? பிணமாக திரும்பி வருவார்களா? அல்லது மீன்கள் கொத்திச் சாப்பிட இரையாவார்களா? அல்லது சனநடமாட்டம் இல்லாத இடத்தில் கரை ஒதுங்கி பருந்துகளுக்கு உணவு ஆகுவார்களா...? என்று பலவாறாக எண்ணி கலங்கினான். சொந்தக்கடலில் மீன்பிடிக்க எங்களுக்கு யார் தடைபோடுவது? என்று இளவயதுக்கே உரிய கோபத்துடன் நினைத்துக் கண்கள் சிவந்தன.

சிறிது நேரத்தில் காவல்துறையினர் வந்து இறந்தவரின் உடலை பொறுப்பேற்று தங்களுக்கே உரிய கடமையை செய்தனர். அவர்கள் சென்றதும் அங்கு நின்ற வயோதிபர்கள் 'இன்னும் கொஞ்சநாளில பெடியள், இந்த நேவியை அடிச்சுக் கலைச்சுப் போடுவாங்கள்' என்று குசுகுசுத்தார்கள். இக் கதையை ஓரளவு செவிமடுத்த அன்ரனி 'தங்கட பிள்ளையளை நல்ல வசதியா வீட்டுக்குள்ள பொத்திவைச்சுக்கொண்டு சும்மா கதைதான்..' என்று தனக்குள்ளே திட்டியவாறு, மனப்பாரத்துடன் வீடு திரும்பினான்.

அன்ரனியின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மரியாவும், மேரியும் என்ன பிரச்சினை என்று வினாவினார்கள். அவர்களுக்கு ஏதோ விரக்தியாக பதிலை கூறிவிட்டு, தனிமையை தேடி கொட்டில் பக்கம் சென்று படுத்தான். அசைந்தாடும் மாவிலைகளை கண்கள் வெறித்தாலும், கடற்கரையில் கண்ட அந்தக் காட்சியே அவன் மனம் முழுக்க நிறைந்திருந்தது. சொல்ல முடியாத அந்த ரத்தில் மனம் தவித்தது. சாப்பிடக் கூப்பிட்ட தாயிடம் பசியில்லை என்று கூறிவிட்டு கண்களை மூடிக்கொண்டான்.

மாமரநிழலின் அரவணைப்பில் தூங்கிக் கொண்டிருந்த அன்ரனியை, தகப்பனின் குரல் விழிப்படையச் செய்தது. ஆனாலும் எழும்பாமல் விழித்தபடி படுத்திருந்தான். மரியா 'என்னப்பா... இண்டைக்கு தொழிலுக்கு கட்டாயம் போகவேணுமோ?.. ரெண்டு மூண்டு நாளைக்கு பாத்து போகலாம்தானே...' என்று கணவனை பயம் கலந்த குரலில் கேட்பது, மேரியும் தகப்பனை போக வேண்டாம் என்று சொல்வது எல்லாமே அன்ரனிக்கு தெளிவாகக்கேட்டது.

'என்ன செய்யிறது...எங்கட தலையில என்ன எழுதிப்பிருக்கோ அதுதான் நடக்கும்...நாங்கள் ...இந்த கடல் மாதாவைத்தானே நம்பி இருக்கிறம்! ஒரு நாளைக்கு போகாவிட்டால் எங்கட நிலை தெரியும்தானே மரியா? நாங்கள் பட்டினியை தாங்குவம்..ஆனால் இந்தப்பிஞ்சுகள் எப்பிடி...'என்று அதற்குமேல் கதைக்க முடியாமல் யோசப்பிற்கு துக்கத்தால், தொண்டை அடைத்தது.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அன்ரனி, ஆத்திரம் பொங்கியவனாக மூவரையும் பார்த்து ' உந்த நாய்களின் அட்டகாசம் எத்தினை நாளைக்கு. பெடியள் குடுப்பாங்கள்..பொறுங்கோ..!' என்று கூற, மேரி உனக்கு ஒரே இந்தக் கதைதான்.. எழும்படா' என்று ஏதோ ஒருவித அச்சத்துடன் அவனின் கதையை திசைதிருப்பினாள்.

மாலை நேரச் சூரியன் தனது பொற்கிரகணங்களை, அழகாக பூமியெங்கும் பதித்துக்கொண்டிருந்த வேளையில், இரவு கடலுக்கு போவதற்கான ஆயத்தங்களைச் செய்ய யோசப்பும், அன்ரனியும் கடற்கரைக்கு வெளிக்கிட்டார்கள். அருள் தானும் சேர்ந்து வாறன் என்று வெளிக்கிட, அவனை படிக்கும்படி வீட்டில் நிறுத்திவிட்டு இருவரும் கடற்கரையை சென்றடைந்தார்கள்.

கடற்கரை மணலில் ஆங்காங்கே ஒளிந்து விளையாடிக் கொண்டு நின்ற நண்டுக் கூட்டங்களை நோக்கிய அன்ரனி, இவைகளைப் போலவே எங்கள் வாழ்க்கையும் அச்சத்துடனேயே போய்க்கொண்டிருக்கிறது என்று தனக்குள்ளே நினைத்து கவலைப்பட்டான். மகனது நீண்ட நேர மௌனத்தை அவதானித்த யோசப் 'என்ன தம்பி கடலுக்கு வர பயமா இருக்கோ?? .... நீ இண்டைக்கு வராத.. நான் சமாளிக்கிறன்...' என்று கூறி முடிப்பதற்கிடையில் 'என்ன பயம் அப்பா.... நானும் வாறன்...' என்று உற்சாகமாககூறி, தகப்பனை ஆறுதல்படுத்தி, வேலைகளில் மும்முரம் காட்டினான் அன்ரனி.

கடற்கரையோரத்தால், கடல் அடையல் பார்த்துக் கொண்டு வந்த மரியாவின் தமயன் செய்வேத்தி இவர்களைக் கண்டு, 'கடல் நல்ல சீராக்கிடக்கு...நல்ல தொழில் நடக்கும்.' என்று கூற, அதற்கு யோசப் 'ம்...உயரப் போனால் தொழில் நடக்கும்தான்.. ஆனால் இந்த அநியாயமாப்போன நேவிக்காரனால்தான் பயமாக்கிடக்கு.' என்று ஏக்கத்துடன் கூறிக்கொண்டிருக்க, அதற்கு அன்ரனி 'இதுக்கெல்லாம் பயந்தால் பிழைக்கேலாது...! நடக்கிறது நடக்கட்டும்' என்று துணிச்சலோடு கூறினான்.

தகப்பனின் மனதில் 'இவன்ரை கதை போக்குகள் கொஞ்சநாளாய்ச் சரியில்லை...! எல்லாவற்றிற்கும் என் வறுமையும், நாட்டு நிலையும்தான் காரணம்' என எண்ணி பெருமூச்செறிந்தபடி வீடுநோக்கிச் சென்றான். அன்ரனி மாலை நேரத் தென்றலுடன் போட்டிபோட்டு கடற்காற்று தழுவிக்கொடுத்த சுகத்தை அனுபவித்தபடி இருட்டு மட்டும் மண்ணில் உட்கார்ந்திருந்தான். முன்னர் அடிக்கடி அன்ரனி நினைப்பான், 'இந்தக் கடலில் என்னுடைய பெரிய வள்ளம் இரண்டு ஓடித்திரியவேண்டுமென்று...' ஆனால் இப்போது ஒரு கட்டு மரத்துடனாவது... சுதந்திரமாகப் போய்வரவேண்டும் என்றுதான், அவன் மனம் ஏங்கிக்கொண்டிருந்தது.

இருள் அரக்கனின் பிடியில், எல்லோரும் உறங்கிக் கொண்டு இருந்த நேரம், யோசப் எழுந்து வெளியே வந்து வானத்தைப் பார்த்தான். நட்சத்திரங்கள் ஆங்காங்கே சிரித்துக்கொண்டிருந்தன. ஒரு விடிவெள்ளியைப் பார்த்து, மனதினுள் நேரத்தை ஊகித்துக்கொண்டு இரவு பத்திப்போட்டு வைத்த குறைச் சுருட்டைத் தேடினான். அதற்கிடையில் கண்விழித்த மரியா 'என்ன சுருட்டோ தேடுறியள்...! உந்தப் பத்தி மூலைக்குள்ளே கிடந்தது. ..! இந்தாங்கோ' என்று நீட்டிய சுருட்டை வாங்கி காற்றுடன் போராடி ஒருவாறு புகைக்கத்தொடங்கினான். மனைவி தந்த தேநீரை அருந்தியபடி அன்ரனியை எழுப்பினான். இரவின் அமைதியில் யோசப்பின் குரல் இன்னும் அமைதியாக 'டேய் தம்பி..தம்பி...எழும்பு' என்றான். நித்திரைக்கு பஞ்சுமெத்தையைவிட வெள்ளை மணல் இதமானது. அந்த இதத்தில் உறங்கிக்கொண்டிருந்த அன்ரனி தகப்பனின் குரலைத் தொடர்ந்து இரு கைகளையும் மேலே உயர்த்தி, சோம்பல் முறித்து ஒருவாறு எழுந்தான்.

அன்ரனியும் தேநீர் குடித்து முடிய, இருவரும் புறப்பட்டார்கள். மரியா இருவரையும் வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தாள். அவர்கள் வாசல் கடந்து போனதும் மரியா திடீரென்று தும்மினாள். அதன் பிறகு அவள் மனம் ஏனோ சஞ்சலப்பட்டு, நினைக்காதவற்றையெல்லாம் நினைத்து, மனதிற்குள் அழுது அந்தோனியாரை மன்றாடியபடி, பிள்ளைகளை அணைத்தபடி தூங்கமுற்பட்டான்.

கடல் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது. சக தொழிலாளர்களும் ஒவ்வொருவராகப் புறப்படத் தொடங்கினர். கடலலைகள் இரவின் அமைதியைக் குலைக்காமல், மெதுவாக வந்து கரையைத் தொட்டுச் சென்று கொண்டிருந்தன. கரையில் தயாராக வைத்திருந்த கட்டு மரத்தை இருவரும் சேர்ந்து உருட்டி கடலுக்குள் இறக்கினார்கள். மரத்தை இறக்கிய யோசப்பும் அன்ரனியும் திரும்பிநின்று அந்தோனியாரை மன்றாடியபின், கட்டு மரத்தில் ஏறினார்கள். பெரிதாகப் புறப்பட்டுவந்த முதல் அலை, அன்ரனியின் முழங்காலுக்குமேல் நனைத்து உடம்பு முழுக்க 'ஜில்' என்ற சுகத்தைக் கொடுத்தது.

கட்டுமரம் அலைகளின் தாளத்திற்கு ஏற்ப ஆடி அசைந்து சென்றுகொண்டிருந்தது. இருவரும் மெதுவாக துடுப்புகளால் வலிக்கத்தொடங்கினார்கள். கடல் எங்கும் மீனவர்களின் உற்சாகமான குரல்களும் பாட்டுச் சத்தமும் கேட்டுக்கொண்டிருந்தன. யோசப்பும் கவலையெல்லாம் மறந்து பாடத்தொடங்கினான். தகப்பனின் பாட்டுத் தந்த உற்சாகத்தில் அன்ரனி வேகமாக வலித்தான். கடலன்னையும் இவர்களது சந்தோஷத்தில் விழித்துக்கொண்டாள்.

கரை தெரியாத தூரம் கடந்ததும், யோசப் கடல் ஆழத்தை ஓரளவு ஊகித்துக்கொண்டு, வலைகளை கடலில் இறக்கினான். அன்ரனி விளக்கைக்கொழுத்தி, தகப்பனுக்கு உதவி புரிந்தான். திடீரென்று ஏதோ வித்தியாசமான இரைச்சல் கேட்டது. யோசப் விளக்கை அணைத்து விட்டு உன்னிப்பாக கடல் எங்கும் ஆராய்ந்தான். பருத்தித்துறைப் பக்கமிருந்து பெரியதொரு கறுத்த உருவம் வந்துகொண்டிருந்தது. அது நேவிதானென்று எல்லோருக்கும் புரிந்தது. 'அந்தோனியாரே என்ன நடக்குமோ. அவன் என்ன செய்வானோ...' என்று அச்சத்துடன் எல்லோர் உள்ளங்களும் தவித்துக்கொண்டிருந்தன.

(தொடரும்)

# நன்றியுள்ள நாய்களை ஆயுதம் ஆக்கும் இராணுவம்

நாய் நன்றியுள்ள மிருகம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இவற்றின் பயன்பாட்டை அறிந்த மனிதர்கள் இவற்றை பலவகையிலும் பயன்படுத்தத் துவங்கினர். அதாவது ஆதிகாலத்தில் நரிகள் போன்று கூட்டம் கூட்டமாக வாழ்ந்த நாய்கள் மனிதன் வாழும் அண்டிய பகுதிகளில் இலகுவாகக் கிடைக்கும் உணவுக்காக மனிதர்களை நாடிவந்து காலப்போக்கில் மனிதர்களிலேயே தங்கியிருந்தது. அதாவது மனிதனுக்கு தேவையான உதவிகளை செய்வதன் மூலம் மனிதன் அளிக்கும் உணவுடன் வாழ்ந்துவந்த இவற்றைக்கொண்டு மனிதன் தனக்குத் தேவையான பல வேலைகளைப் பெற்றான். அதில் முக்கியமாக காவல்காப்பது ஆகும்.

தனது அனைத்துக் கண்டுபிடிப்புக்களையும் போர் புரிவதற்கேற்ப மாற்றும் தன்மையுள்ள மனிதன் இந்த நாய்களின் பயன்பாட்டையும் விதிவிலக்காக்கி விடவில்லை. அவற்றையும் யுத்தத்துக்குப் பயன்படுத்தி தான் அதாவது, உலகின் அழகை, பறவைகள் போன்று பறந்து அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் உருவாக்கப்பட்ட விமானங்களை பின் யுத்தத்துக்காகப் பயன்படுத்தி பல அழிவுகளை விளைவிப்பதைப் போலத்தான் இதுவும்.

தற்போது உலகில் உள்ள அனைத்து இராணுவப் படைப் பிரிவுகளிலும் நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. மனிதனின் நெருங்கிய ஓர் நண்பன் என்று அழைக்கப்படும் நாய்களை, எமது வேலைக்கேற்ப பயிற்றுவிப்பதன்மூலம் இவற்றை நாம் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தலாம். தற்போது இராணுவம் தமது தளபாடங்கள் முகாம்கள் போன்றவற்றைப் பாதுகாக்கவும், கண்ணி வெடிகள், வெடிமருந்துகள் போன்றவற்றைக் கண்டுபிடிக்கவும், காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கவும் பயன்படுத்துகின்றது. அதுமட்டும் இன்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்யமுடியாத நேரம், இடங்களில் நாய்களே ஆயுதமாகப்பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது இவற்றைச் சற்று விரிவாகப் பார்ப்போம். பொதுவாக இராணுவத்தில் ஆண் நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. அது மட்டுமன்று. சிறுவயதில் இருந்தே இவற்றுக்கு கடுமையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதாவது ஓர் இராணுவ வீரனைவிட பல மடங்கு அதிகமான பயிற்சி நாய்க்கு வழங்கப்படுகின்றது. நாய்கள் போர்முனைக்குள் பிரயோகிக்கப்பட்டதை அடுத்து போர் களங்களில் பல சாதனைகளை இவை நிலைநாட்டியுள்ளன. இது நமது நவீனயுத்தங்களுக்கும் விதிவிலக்கல்ல. நமது நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் குறிப்பாக ஐரோப்பிய கண்டத்தில் நடைபெற்ற முதலாவது உலகமகா யுத்தத்தில் நாய்களின் பங்களிப்புக்கள் பல உண்டு.

முதலாவது உலகமகாயுத்தம் (1914 -1918). இதை ஓர் எல்லை யுத்தம் என்று சொல்லலாம். அத்துடன் இது ஓர் பிரசித்திபெற்ற யுத்தம். ஏனெனில் 1914-ம் ஆண்டு வரை எந்த நாட்டிலும் நடைபெறாதவாறு ஆள், ஆயுத பலத்துடன், இழப்புக்களின் மத்தியில் மூர்க்கத்தனமாக நடைபெற்றயுத்தம் இது. இத்துடன் முதன்முறையாக இரசாயன ஆயுதம், குண்டுவீச்சு விமானங்கள் பயன்படுத்தப்பட்டதும் இந்த யுத்தத்தில்தான், அதாவது ஜேர்மனி இராணுவத்தினர் 1914-ம் ஆண்டு பிரான்ஸ் துருப்புக்கள் மீது இரசாயன ஆயுதங்களைப் பிரயோகித்து பரீட்சித்தனர். அத்துடன் இன்று உலகில் உள்ள நாசகார ஆயுதங்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. தாங்கிகளும், குண்டுவீச்சு விமானங்களும். அமெரிக்க வருகையும்தான், ஜேர்மனி இராணுவத்தை 10 .11.1918-ம் ஆண்டு அன்று சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பமிட வைத்தது என்பதை நாம் அறிவோம்.

யுத்த களத்தில் இரு இராணுவப் பிரிவுகளுக்கும் நடுவில் இருக்கும் பகுதியை சூனியப் பிரதேசம் என்று அழைப்பர். அப்பகுதியில் சண்டைகளில் கலந்து காயப்பட்ட இராணுவ வீரர்களை தேடிக்கண்டுபிடிக்கும் பணியை இந்த நாய்கள் செய்தன. இதன் மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டதை இன்றும் பல இராணுவ வரலாற்றுப் புத்தகங்கள் நினைவு கூறுகின்றன. அத்துடன் எளிதில் தகர்க்க முடியாத எதிரிகளின் பாதுகாப்பு அரண்களை தகர்ப்பதற்கு நாய்கள் மீதே குண்டுகள் கட்டிவிடப்பட்டன. இதைப் போன்ற பல வேலைகளுக்கும் இவை பயன்படுத்தப்பட்டன.

இதனையடுத்து இரண்டாவது உலக மகாயுத்தத்தில் (1939-1945) ஜேர்மனியினரின் தாங்கிகளை தகர்ப்பதற்கு Ex -U.R.S.S இராணுவத்தினர் புதியதோர் முறையைக் கையாண்டனர். அதாவது தமது நாய்களை குண்டுகளாகப் பயன்படுத்தித் தாங்கிகளைத் தகர்ப்பதற்கு திட்டமிட்டனர். அதாவது நாயுடன் வெடிபொருள் அடங்கிய அங்கியை அணிவித்து டாங்கிகள் நகரும்போது அவற்றின் சில்லுப்பகுதியின் முன் சென்று அமரும்படி பயிற்சி அளித்தனர். டாங்கிகள் நாய்கள் மேல் ஏறியதும் ஏற்படும் குண்டு வெடிப்பால் நாசிகளின் தாங்கிகளை அழிக்கலாம் என்று Stalin இன் இராணுவம் திட்டம் இட்டது. அதன்படி நாய்கள் போர்க்களத்துக்குள் திணிக்கப்பட்டன. அங்கு Stalin இன் இராணுவம் எதிர்பார்க்காதது நடைபெற்றது. அதாவது நாய்களுக்கு நாசிகளின் டாங்கிகள் எது ரஷ்ய டாங்கிகள் எது என்பதை பிரித்தறியும் தன்மை இல்லாத படியால், இருதரப்பு தாங்கிகளையும் அவை தகர்த்தன.

நாய்களின் உபயோகத்தை அன்றைய ஜேர்மன் நாசித் தலைவர் ஆன கிட்லர் அவர்களும் நன்கு அறிந்திருந்தார். இவற்றை தனது இராணுவத்தில் பயன்படுத்த அவர் தயங்கவில்லை.

இன்னும் பல யுத்த களங்களில் நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது நடைபெற்று முடிந்த யூகோஸ்லாவிய உள்நாட்டு யுத்தத்தில் அமைதி காக்கச் சென்ற (U.N) ஐக்கியநாட்டுச் சங்கப் படையினர் நாய்களையே பெரிதும் பயன்படுத்தினர். இவற்றைத் தவிர இராணுவ முன்னேற்றம் நடைபெறும் காலங்களில் 'சண்டைத்துருப்புக்கள் ஓய்வு பெறும்போது' இந்த நாய்களுடன் சில வீரர்களே காவற் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். நன்கு பயிற்றப்பட்ட ஓர் நாய், காவல் காப்பதில் 6 இராணுவ வீரர்களுக்குச் சமன் என்று கூறுவர். அத்துடன் பெரும்பகுதி சண்டைத் துருப்புகளை ஓய்வு எடுப்பதற்கு இந்த நாய்கள் உதவுகின்றன. அது மட்டுமன்றி இயற்கையோடு இயற்கையாக மறைந்து மனிதக் கண்களால் பிரித்தறிய முடியாத எதிரி உழவாளிகளை மோப்ப சக்தி மூலம் கண்டுபிடிப்பது தவிர, எதிரிகளின் கண்ணிவெடிகள், வெடிமருந்துகள், எதிரிகள் நடமாட்டம் போன்றவற்றை மனிதனுக்கு முன்னதாக கண்டுகொள்பவையும் நாய்களே.

இராணுவ நாய்களை சாதாரண நாய்களுடன் ஒப்பிட முடியாது. ஏனெனில் இவை நன்கு பயிற்றுவிக்கப்பட்டவை, சேவையின்போது இராணுவ வீரர்கள் போன்று கட்டளையின்படிதான் நடக்கின்றன. இவற்றுக்கு சிறுவயதில் இருந்தே துப்பாக்கி, குண்டு வெடிச்சத்தங்கள் பழக்கப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் துப்பாக்கி என்றால் புகையும், நெருப்பும், சத்தமும் கக்கும் கருவியென்றே பழக்கப்படுகின்றது. இவை மிகவும் சிறந்த ஓர் ஆயுதம் ஆகும். நாய்கள் எதிரிகளைக் கொன்ற கதையும் பல உண்டு. இவை பத்துவயதை அடைந்ததும் கடுமையான உழைப்புக்காக ஓய்வும் கொடுக்கப்படுகின்றது. இவற்றின் வீரச் செயலுக்கு இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படுகின்ற பதக்கங்கள் போன்ற பதக்கங்கள் வழங்கப்பட்டாலும், இவை ஓர் சாதாரண ஆயுதமாகவே கருதப்படுகின்றது. எனவே ஒரு நாயின் இழப்பு ஓர் ஆயுதத்தில் இழப்புக்குச் சமன். தற்போது இரவில் பார்க்கும் கண்ணாடி, போன்று பல நவீன ஆயுதங்கள் வருகையின் பின்னரும் இராணுவத்திற்கு நாய்களின் சேவை தேவைப்படுகின்றது.

### சினிமா

# ஜீவனின் எச்சில் போர்வை

## நடைமுறையும் கோட்பாட்டறிவின் அவசியமும்

ஜீவனின் எச்சில் போர்வை குறும்படம் அதனது தொழில்நுட்ப நேர்த்திக்காகவும் அதன் மையக்கருவின் முக்கியத்துவத்துக்காகவும் சிறந்த குறும்படமென கலைபண்பாட்டுக் கழகத்தின் போட்டி நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

இப்போது எச்சில்போர்வை குறும்படமும் அதனோடு கவிக்குயில் என்றொரு குறும்படமும் சேர்த்து வீடியோவாகக் கொண்டுவந்திருக்கிறார் ஜீவன். இதுவன்றி யாத்திரை என்றொரு குறும்படத்தையும் ஏற்கனவே அவர் இயக்கியிருக்கிறார். ஜீவன் ஒளிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், திரைக்கதையாளர், இயக்குநர் என்று எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுச் செயல்படுகிறவர். அவருடைய இந்த மூன்று குறும்படங்களையும் பார்க்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இதுவரையிலும் புலம்பெயர்ந்த நாடுகளில் தயாரிக்கப்பட்டு நான் பார்த்த படங்கள் ஐந்து படங்கள். அருந்ததியின் முகம், ரமேஷ் சிவரூபனின் தலைமுறை, தற்போது ஜீவனின் மூன்று படங்கள். இவற்றில் முகமும் தலைமுறையும் முழுரூபத் திரைப்படத்தின் தன்மைகள் கொண்டவை. ஜீவனின் படங்கள் அனைத்துமே குறும்படங்கள் எனும் வகையைச் சேர்ந்தவை.



முதலிரண்டு படங்களும் ஒரு முழு வாழ்வின் பல்வேறு பிரச்சினைகள் / பல்வேறு கதை மாந்தர்கள் என எடுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட இட/கால வரையறைக்குள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பான அவதானங்களை பதிவு செய்கின்றன. இவற்றின் நீளமும் தமிழ் சினிமா அல்லது பிற உலக சினிமாக்கள் போன்றே அமைந்தவை. ஜீவனின் குறும்படங்கள் ஒவ்வொன்றும் 15 நிமிடங்களுக்கு மேல் போவதில்லை. ஒரு பாத்திரமே மையம். குறிப்பிட்ட ஒரு சிந்தனைத் தெறிப்பு அல்லது கருமுடிச்சு (Knot) தான் இக்குறும் படங்களின் மையம். அதைச் சுற்றித்தான் கதை அமைகிறது. யாத்திரை படம் ஜீவனின் ஆரம்ப காலக்குறும்படம். அப்படம் புலம்பெயர்ந்து வந்த, மன உலைச்சலும், துயரமும் ஆழ்ந்த ஒரு மனிதன் தற்கொலை செய்து கொள்வது தொடர்பான படம். விவரணப் பட நறுக்குகளும் கதையும் இணைந்த படம். எச்சில் போர்வை பட முதிர்ச்சிக்கான வேர்கள் யாத்திரை படத்தில் உண்டு.

இதுவரை புலம்பெயர் சினிமா தொடர்பான தயாரிப்பாளர்கள் இயக்குநர்கள் விமர்சகர்கள் அந்தந்த நாடுகளின் பார்வையாளர்கள் போன்றோரின் எழுத்துக்களையும் அபிப்பிராயங்களையும் கவனமாக அவதானித்து வந்திருக்கிறேன். சில இயக்குநர்களோடும், சில படம் எடுக்க விரும்பும் நண்பர்களோடும் விவாதித்திருக்கிறேன். ஈழமுரசிலும் பெப்ரவரி/மார்ச் 98 இதழ்களில் புலம்பெயர் சினிமா சம்பந்தமான சுயவிமர்சனக் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

இதிலிருந்தெல்லாம் புலம்பெயர் சினிமா தொடர்பான, இதில் சம்பந்தப்பட்டவர்களின் நடைமுறைப் பிரச்சினைகளையும் கோட்பாடு சம்பந்தமான புரிதல்களையும் புரிந்துகொள்ள முடியும்.

ஜீவனின் குறும்படங்களை முன்வைத்து புலம்பெயர் சினிமாவில் எதிர்காலத் திசைவழி குறித்து யோசித்ததில் இருந்து எழுந்த அபிப்பிராயங்களே பின்வருவன. இதற்கான அணுகுமுறையை நான் கீழ் வருமாறு வகுத்துக் கொள்கிறேன்.

I. நான் பார்த்த ஐந்து படங்கள், II. நான் அவதானித்த விவாதக் கருத்துக்கள், III. நான் பார்த்த பிறமொழி புலம் பெயர் சினிமாக்கள், IV. தொழில்நுட்பம் கதைத்தர்க்கம் சம்பந்தமான இணைவு, V. பொதுவாக நாம் நல்ல சினிமா என எதை நினைக்கிறோம்

இதன் மூலம் புலம்பெயர் சினிமா தொடர்பான ஒரு ஆரோக்கியமான கலந்துரையாடலைத் தூண்ட விரும்புகிறேன்.

பொதுவாக சினிமா வடிவம் எனும் அளவில் இங்குள்ள பெரும்பாலான தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் எதை முன்னோடியாகவும் வகை மாதிரியாகவும் கொள்கிறார்கள்?

நிலவும் வியாபார / ஸீஸன் தமிழ்ச் சினிமாவைத்தான். தமிழ்நாட்டுத் தமிழ், அதிலும் இன்று ஆதிக்கம் செலுத்தும் கோயமுத்தூர் தமிழ்ப்பாணி, பாட்டு, இரு கதாநாயகி, ஒரு கதாநாயகன், தலா ஒருபாட்டு, சண்டை, பண்பாட்டு உபதேசம் என்கிற பாணிதான் இவர்களது பாணியாக இருக்கிறது.

1. தமிழகத்தில் இருக்கிற பல்வேறு தயாரிப்பாளர் / இயக்குநர்கள் போலவே சென்று தேய்ந்த தடத்திலேயே சுயசிந்தனையற்று, [illegible] சிந்திப்பதைப் பற்றிய கவலையில்லாமல் சென்று தேய்கிறார்கள்.

2. பெரும்பாலானவர்களுக்கு தொழில்நுட்பம், தொகுப்பு, இசை பற்றிய கோட்பாட்டு அறிவு என்பதோ, சுயபடிப்பின் மீதான தேடுதல் என்பதோ இல்லை. அப்படியானவர்களைத் திட்டமிட்டு உருவாக்க வேண்டும் எனும் செயல்திட்டமும் இல்லை.

3. இவர்களது படங்களுக்கான கருமையம் என்பது பண்பாட்டைக் காப்பது, / பெண் பாலியல்பை புனிதப்படுத்துவது என்பதற்கு மேல் தாண்டிச் செல்வதாக இல்லை. நமது கலாச்சாரத்திற்கும், வந்து சேர்ந்த மேற்கத்திய கலாச்சாரத்திற்கும் இடையிலான உறவு அல்லது முரண்பாட்டைப் பற்றி ஆய்வறிவின் மீதோ தேடுதலின் மீதோ இவர்கள் கதைகள் அமைவதில்லை. தமது பண்பாடு பற்றிய அசட்டுப் பெருமிதமே இவர்களின் சுயவிமர்சனங்களிற் கூட வெளியாகிறது.

கொஞ்சம் கடுமையாக இப்படிச் சொல்லலாம்: நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்வில் காலூன்றாத அசட்டுக் கற்பனைகள்தான் இவர்களின் படங்கள். வாழும் பண்பாட்டின் மோதல் X இணைதலை காலத்தில் நின்று, இடத்தில் நின்று இவை சொல்வதேயில்லை. சென்று விட்ட அழுகிய மதிப்பீடுகளை இவர்கள் புனிதப்படுத்தி சந்தோஷப்பட்டுக் கொள்ள நினைக்கிறார்கள். இயக்குநர் இங்கு கோயில் பூசாரியின் இடத்தையோ, தெய்வத்தின் இடத்தையோ எடுத்துக் கொள்கிறார். நவீன உலகின் முரண்பாடுகள் குறித்த சுய தேடலோ, தொழில்நுட்ப சாதனங்களில் பயிற்சியோ இவர்களுக்கு இல்லை.

வாழ்வின் பல்வேறு நெருக்கடிகள் குறித்து இவர்கள் அதிர்ச்சியடைகிறார்கள். சில வேளை இவர்களின் இத் தயாரிப்புக்கள் மீது இவர்களின் அறியாமை குறித்து பரிதாபமாக இருக்கிறது. பெண் கெட்டுப் போவது, குடிப்பது, சிகரெட் போன்றவைதான் இன்னும் இவர்களின் கதைகளுக்கான அடிப்படையாக இருக்கிறது. பிற பண்பாடுகளிலிருந்து கற்றுக்கொள்ள இவர்கள் ஒரு போதும் நினைப்பதில்லை.

புலம்பெயர் சமூகங்கள் தொடர்பாக மூன்று படங்களை மட்டுமே இப்போது எடுத்துக்கொள்வோம்.

முதலாவது அர்ஜன்டீன இயக்குநர் ஸொலானஸின் பிரெஞ்சு / இலத்தீனமெரிக்கப் படமான Tango: The Exile of lerdal

இரண்டாவது ஸ்விட்டிஸ் / துருக்கிய படமான The Journay of hope

மூன்றாவது கனேடிய / ஈழப் படமான Welcome to Canada (இந்த மூன்று படங்களையொட்டிய விரிவான விவாதங்கள் லண்டன் மீட்சி, பாரிஸ் ஈழமுரசு போன்றவற்றில் வந்திருக்கின்றன.)

இதில் Tango படத்தில் பிரான்ஸ் வரும் அர்ஜன்டீன அகதிகள், நாடகமொன்று போட முயல்கிறார்கள். பிரெஞ்சு மதிப்பீடுகளோடு அவர்களுக்கு அறிவுத் தளத்தில் முரண்பாடுகள் வருகிறது, அவர்கள் சிருஷ்டிபூர்வமாகச் செயற்பட முடியவில்லை.



இயக்குனர் ஜீவன்

நாடோடி வாழ்வு, நாட்டுக்குச் சிலர் திரும்பிச் செல்ல, சிலர் அங்கிருந்து இங்கு வருகிறார்கள்.

Journey of hope படத்தில் துருக்கியில் நிலத்தைவிற்று பஞ்சம் பிழைக்க சுவிட்சர்லாந்து போகிறார்கள் கால்நடை மேய்க்கும் விவசாயிகள். நிறவெறி; குழந்தைகள்சாவு. தன் குழந்தையை தன் துருக்கி கிராமத்தில் புதைக்க வேண்டுகிறான் விவசாயி.



Welcome to Canada படத்தில் ஒரு கனேடியத் தீவு மக்கள் எவ்வளவு பரிவுடன் ஈழத் தமிழ் மக்களைப் புரிந்து கொள்ள முயல்கிறார்கள் என்பதையும், பரஸ்பர கலாச்சாரம் பண்பாடுகள் தொடர்பான சகிப்புத் தன்மையையும் படம் விளக்கிச்சொல்கிறது.

இப்போது நான் பார்த்த ஐந்து படங்களையும் பார்ப்போம்.

சிவரூபன் பெண்கள் கெட்டுப்போவது, போதை மருந்து பழக்கம் போன்றவை குறித்து நேர்மையாகவே வருத்தப்படுகிறார். சங்கடம் கொள்கிறார். ஆனால் அவரது திரைப்பட வடிவம் தமிழின் சாதாரண சினிமா வடிவத்தைத் தாண்டி வரவில்லை. இரண்டு ரூபங்களும்கூட இருக்கிறது! நமது பண்பாடுகளைக் காப்பதில் பெண் கருத்துத்தான் முக்கியமான இடம் என்பதை வலியுறுத்துகிறார். இவை தமிழ்ப் பொதுப்புத்தியில் பதிந்த சாதா உண்மைகள். ஏன் இவ்வாறு நெருக்கடிகள் சாவுகள் வருகிறது? ஏன் மேற்கில் நமக்கு மன உலைச்சல்கள்கூட வருகிறது? இங்கு உள்ள தனி நபர் உரிமை, சமூக உத்தரவாதம் போன்றவற்றிற்கும் பெண்களின் கலகத்துக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா? நமது பாரம்பரிய திருமணமுறைகளில் தனிநபர் தேர்வு என்பதற்கு இடம் இருக்கிறதா? ஏன் நாம் பாலுறவு வேட்கைகளை மறைத்து மறைத்துச் செய்கிறோம்? பிடிபடும்போது அதிர்ந்து போகிறோம்?

இத்தகைய கேள்விகள் மட்டுமே புலம் பெயர் தமிழ் சினிமாவை உருவாக்கும்.

அருந்ததியின் கதை அசலானது. மிகத்தெளிவானது. உத்திரவாதமில்லாத வாழ்க்கை. சொந்த நாட்டுக்கான பொறுப்பு. கூட்டு வாழ்கை ஏற்படுத்தும் மனிதப் புரிதல். பாலியல்பு திரிபடைவது என புலம்பெயர் வாழ்வின் கட்டிடக்கூண்டில் வாழ நேர்ந்த நண்பர்களின் வாழ்வை தெளிவாகத் தேர்ந்து கொண்டிருக்கிறார்.

ஆனாலும் நடிப்பு, சில காட்சியமைப்புக்கள் தமிழ் சினிமா வடிவத்தில் இடறியிருக்கிறது. இசை பற்றிய பிரக்ஞை முறையிலும் செயல்படவில்லை. படத்தொகுப்பில் நிறைய திரும்பத் திரும்ப நிகழ்தல்கள் கவனிக்கப்படவில்லை.


முகம் இதுவரையில் அசலான கதையிருப்பினும், தொழில்நுட்ப நேர்த்தியில் படத்துடன் இணைவைச் சாதிக்க முடியவில்லை.

ஆயினும் புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்த படங்களில் முதல் அசலான கதைத்தேர்வு கொண்ட படமும், புலம்பெயர் சினிமாவும் தேவையான வடிவத்தையும் முதன் முதலில் முயற்சித்த படமும் அதுதான். அதற்கான காரணம் அருந்ததி கதைபற்றியும் தொழில்நுட்பம் பற்றியும் முடிந்த வரையில் பிரக்ஞை பூர்வமாக இருந்தார் என்பதுதான்.


(தொடர்ச்சி அடுத்த வாரம்)

யமுனா ராஜேந்திரன்

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வன் கோகிலன் உமாளன்** பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




## உங்கள் கைவண்ணம்




**செல்வன்**
**சிவசோதி கிருபா**

**வயது: 08**
**இடம்:**
9950 VARDO,
Norway.

புலி
எனக்கு மிகவும் விருப்பமான
மிருகம் புலி
புலியின் உடலில் வரிவரிக்
கோடுகள் இருக்கும்
புலியின் உருவம் பெரியது
புலி பசித்தாலும் புல்லைத்
தின்னாது
தமிழீழத்தின் கொடி
புலிக் கொடி என்பதால்
மிகவும் நான் புலியை
விரும்புகிறேன்.

## சித்திர முற்றம்

### இலக்கங்களை இணைத்துப்பாருங்கள்



## குட்டிக்கதை படிப்போம்

### கடவுளும் இரேனும்

இரேன் பெருமுயற்சியுடனும் கடினத்துடனும் பயணம் செய்து கடவுளைக் கண்டாள். அவரிடம் தன் துன்பங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி அறிவுரை கேட்டாள்.

'எனக்குச் சலிப்பும் மிகுந்த களைப்பும் ஏற்படுகின்றன'. என்று தொடங்கினாள்.

'அது நீ செய்த நீண்ட பயணத்தால் ஏற்பட்டவை' என்றார் கடவுள்.

'எனக்கு இரவில் உணவு செல்லவில்லை'

'நீ கொஞ்சமாகச் சாப்பிட வேண்டும்'

'தூக்கமின்மையால் தொல்லைப்படுகிறேன்'

நீ இரவில் மட்டுமே தூங்க வேண்டும்'

'நான் இவ்வளவு பருமனாக இருக்கிறேனே! இதற்கு என்ன மருந்து சாப்பிட வேண்டும்'

நீ சில சமயங்களிலாவது உன் கால்களுக்கு வேலை கொடுக்க நடக்க வேண்டும்.

'என்னால் திராட்சைச் சாறு குடிக்க முடியவில்லை'

'தண்ணீர் குடி, உனக்கு செரிமானக் கோளாறு; பத்தியமாயிரு'

'எனக்குப் பார்வை குறைகிறதே!'

'கண்ணாடி அணிந்துகொள்'

'நான் பலமிழந்துள்ளேன்; முன்னிருந்தது போல வலுவும் நலமும் இல்லை'

'உனக்கு வயது ஆகிறது'

'இந்தத் தளர்ச்சியிலிருந்து மீளும் வழி என்ன?'

'மிகவும் எளிது; உன் தாயார், முன்னோர்கள் போல இறப்பதுதான்'

'கடவுளே! என்ன அறிவுரை கூறுகிறீர்கள்?' மனிதர்கள் புகழும் அறிவியல்களெல்லாம் இதற்குத்தானா? உலகம் உங்களை வணங்குவது இதற்குத்தானா? அரிதான மந்தணமான எதை எனக்குச் சொல்லப் போகிறீர்கள்? நீங்கள் இதுவரை சொன்னவையெல்லாம் எனக்குத் தெரியாதனவையா?'

'தெரிந்த அவற்றைப் பயன்படுத்தாமல் என்னைத் தேடி ஏன் இவ்வளவு தொலைவு வந்தாய்? உன் நீண்ட பயணத்தால் உன் வாழ்நாட்களை ஏன் குறைத்துக்கொண்டாய்? என்று கேட்டார் கடவுள்.

பிரெஞ்சு எழுத்தாளர்
லப்ரூயேர்.

## அறிந்து கொள்ளுங்கள்

### பச்சோந்தி ஓணான்

ஓணான் வகைகளில் பச்சோந்தி என ஒருவகை உண்டு. இது சூழ்நிலைக்கேற்ப தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் ஒரு வகையாகும். எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்காகவும், காலநிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கவும் இது நிறம் மாறிக்கொள்ளும். பலமான பச்சோந்தி தன்னை தாக்கவருகின்ற வேளையிலும் கூட, தனது இயலாமையை வெளிப்படுத்தவும்



பலவீனமான பச்சோந்தி நிறம் மாறுவதுண்டு. மஞ்சள், கறுப்பு, பச்சை என நிறமாற்றங்களை இந்தப் பச்சோந்திகள் ஏற்படுத்திக்கொள்ளும்.

## கவிதை முற்றம்

### மிருகங்களின் பாட்டு

- செ. யோ -

வீட்டு மிருகம் யாவும்
ஒன்றாய்ச் சேர்ந்து கொண்டன!

கூட்டமாகச் சங்கீதத்தைப்
பாட எண்ணின!

நாயார் முதலில் எழுந்து நின்றார்:
வள் வள் வள்வள் வள்.....

இதனைக் கேட்டு கோழி வந்தார்:
கொக்கரக்கோ கோஓ...

மீசையினைப் பூனையாரும் தடவி விட்டாரே:
மியாவ் மியாவ் மியாவ் மியாவ் மியாவ் மீ...

கோழிக் குஞ்சார் குரல் கொடுத்தார்:
குவாக் குவாக் குவாக்...

கன்றோடு அங்கே பசுவும் வந்தார்:
மா...மா...அம்மா...மாஆ...

வள் வள் வள் வள்...
கொக்கரக்கோ...ஓ...
மியாவ்...மியாவ்...மியாவ்...
குவாக்..குவாக்...குவாக்...
மா அம்மா..மாஆ...



எல்லாக் குரலும் ஒன்றாய் எழுந்து கேட்டதனாலே
எடுத்து வந்தான் பெரிய கொம்பை வீட்டுக்காரனே!
பொல்லாத அவன் கோபத்தோடு கொம்பை வீசினான்!
பொத் பொத்தென்று அடி விழவே யாவும் ஓடின!




# அமெரிக்காவில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் இராணுவத் தரப்புப் பெண்கள்

உலகெங்கிலும் இன்றும்கூட பெண்கள் எங்கோ ஒரு மூலையில் எவ்வழியிலேனும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிய வண்ணமே இருக்கிறார்கள்

இது சாதாரண பெண்களிற்கு மட்டுமல்லாது யுத்த முனையில் போரிடும் ஆயுதப்பயிற்சி பெற்ற வீரம் செறிந்த பெண்கள் வரை நீண்டு செல்கிறது. அண்மையில் அமெரிக்க இராணுவத்தில் பணி புரியும் பெண்கள் இத்தகைய குற்றச்சாட்டை வெளி உலகுக்கு தெரியப்படுத்தியிருந்தார்கள். இவர்களையடுத்து சமீபத்தில் இத்தகைய பாலியல் சேட்டைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் ஹெல்லி என்ற இளம் விமானி தனக்கு நேரும் இன்னல்களை வெளியே தெரிவித்திருக்கிறார்.

27 வயதான ஹெல்லி அமெரிக்காவின் இராட்சத போர் விமானங்களில் ஒன்றான பி. 52 என்ற போர் விமானத்தை செலுத்துபவர். இவர்தான் அமெரிக்காவின் முதல் பெண் போர் விமானி என்ற பெருமைக்கும் உரியவர். ஆனால் இவரின் சக ஊழியர்களோ இப் பெண்ணை தொழில் நிமித்தம் தனியே வெளியிடங்களில் சந்திக்கையிலும் மற்றும் தம்மோடு விமானத்தை ஓட்டி வரும் போதும் தம் பாலியல் இச்சைக்கு இணங்கும் படி கேட்கிறார்கள். அது மட்டுமல்லாது திடகாத்திரமாக காணப்படும் இவர் உடலைக் காட்டி நீ மிகவும் அழகாகவும் எம்மை சந்தோசப்படுத்தக்கூடியவளாக வசீகரமாகவும் உள்ளாய் எனக் கூறி தகாத சொற்களால் இம்சைப்படுத்துகிறார்கள். இதனால் தன்னைப் பாதுகாக்க வேண்டி எப்பொழுதுமே ஹெல்லி தொழில் செய்யும் இடங்களில் 'பாதுகாப்புடனே' இருக்கவேண்டியுள்ளதாம். இதைப் பற்றி குறிப்பிடுகையில், என்னைப் போன்ற ஆயுதங்களை வைத்திருக்கும் பெண்ணிற்கே இந்த நிலையெனில், சாதாரண பெண்கள் எவ்வாறு இவ் ஆண்களின் இச்சைக்கு பலியாவார்களோ என கவலை தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர் பெண்களும் பெண்விடுதலை நிலைப்பாடும்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரான்ஸ் தமிழ்ப் பெண்கள் அமைப்பினரால் 08.03.98 அன்று நடாத்தப்பட்ட எழுச்சிமாலை நிகழ்ச்சியில் ஈழமுரசுப் பெண்கள் பகுதியினரிடம் அங்கு வருகைதந்த பெண்கள் 'பெண் விடுதலை ஏன் அவசியம்' என்பது பற்றி தெரிவித்த அவர்களது அபிப்பிராயங்களினது தொடர்ச்சி......

**கேள்வி:** *பெண்களின் விடுதலையையும் அதைப் பெறுவதற்காகப் போராடும் இப் பெண் அமைப்புக்கள் பற்றியும் உங்கள் கருத்தென்ன?*

**பதில்:** நானும் ஓர் பெண் என்பதால் இப் பெண்களிற்கான உரிமைகள் கிடைக்கத்தான் வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளேன். ஆனால் இதற்காகப் போராடும் அமைப்புக்களில் இணைந்து செயற்படும் பெண்கள் எல்லோரையும் என்னால் சரியானவர்களாக ஏற்க முடியவில்லை. காரணம் இதில் ஓர் சிலர் வெளியில் பெண்விடுதலையைப் போற்றியும், பின் தம் சொந்த விடயங்களில் பெண் அடிமைத்தனத்திற்குத் துணைபோபவர்களாயும் உள்ளனர். இது உண்மையில் எப்படி ஒரு முழுமையான பெண்விடுதலையைப் பெற்றுக்கொள்ள வழி அமைக்கும்? அதனால் இத்தகைய இரண்டுபக்க கருத்துக்களை உடையவர்கள் முதலில் இவ் அமைப்புக்களிலிருந்து திருந்தும் வரை இப் பெண்ணுரிமைப் போராட்டம் வெற்றிபெறாது.

(தொடரும்)

# பிரிட்டன் அரச தாயில் தோன்றும் ஆண்பெண் சமத்துவம்

பிரிட்டனில் பல காலமாய் நடைமுறையில் இருந்துவரும் ஆண்களுக்குச் சார்பான ஒரு சட்டம் தற்பொழுது திருத்தப்பட இருக்கிறது. அதாவது பிரிட்டன் அரியணையில் ஏறி அரசாட்சி புரிய இவ்வளவு காலமும் ஆண்களுக்குத்தான் முதலிடம். அதாவது இப்பொழுது முடிசூடி ஆட்சி நடத்துபவரின் வாரிசுகளில் முதலில் உள்ள ஆண் வாரிசுகளே தந்தைக்குப் பின் ஆட்சிப்பீடத்திற்கு வரலாம். உதாரணமாக அக் குடும்பத்தில் மூத்தது பெண் பிள்ளையும், அடுத்தது ஆண் பிள்ளையாக இருந்தாலும் கூட மூத்த பிள்ளையால் அரச பீடத்தில் முடிசூட முடியாது. ஏனெனில் அவர் பெண்பிள்ளை. சரியான் வழியில் ஆட்சி நடத்துவது கேள்விக்குறி. மற்றும் தந்தை தாய் குடும்பவழி உரிமைகள் ஆண்பிள்ளைக்கே உரித்தானது என்பது அதற்கான காரணம். இப்பொழுது ஆட்சி செய்யும் மகாராணியார் கூட தன்கூடச் சகோதரர்கள் யாரும் இல்லாத இடத்தேதான் இன்று முடிசூடி ராணியாக வலம் வருகிறார். ஆனால் தற்போது இந்த ஒருதலைப்பட்சமான முறைமைக்கு பெரியதொரு மாற்றம் வரவுள்ளது. அதாவது இனி ஆட்சி புரிபவரின் வாரிசுகளில் மூத்தவருக்கே முடிசூடும் வாய்ப்பு அளிக்கப்படும். அவர் பெண்பிள்ளையாக இருந்து அவருக்குக் கீழே ஆண் சகோதரர்கள் இருந்தாலும் கூட, அரியணை ஏறி ஆட்சி செய்யும் பொறுப்பு குடும்பத்தின் முதற் பிள்ளையான பெண்ணின் கைகளிலேயே வழங்கப்படும். இவ்வாறு ஆண்களுக்குச் சமமாக பெண்களுக்கும் வழங்க இருக்கும் இச் சமத்துவமான உரிமையை பிரிட்டிஷ் பெண்கள் மகிழ்வுடன் விரைவில் எதிர் பார்க்கிறார்கள்.

# நோபல் பரிசு பெற்ற ஜோடி வில்லியம்ஸ் பதவி நீக்கம்



நிலக்கண்ணி வெடியை தடைசெய்யக் கோரும் ஒரு சர்வதேச நிறுவனத்தில் திறமையாகப் பணியாற்றியதன் பேரில் கடந்த 4 மாதங்களின் முன்பு நோபல் பரிசைப் பெற்றவர், ஜோடி வில்லியம்ஸ் என்ற பெண்மணி. இவருக்கு இப் பரிசு கிடைத்ததும் அனேக பத்திரிகைகள் இவரையும் மறைந்த இளவரசி டயானாவையும் இணைத்து, டயானா இருந்திருந்தால் அவருக்குத்தான் இப்பரிசு வழங்கப்பட்டிருக்குமென்றும் அவர் இறந்ததால்தான், ஜோடி வில்லியம்ஸிற்கு கிடைத்துள்ளது. அது மட்டுமல்லாது சிறந்த மனிதாபிமானம்மிக்க பெண்மணியான இவருக்கும் இப்பரிசு கிடைத்தது சிறந்த தேர்வு தான் என்று புகழ்ந்து எழுதின. ஆனால் இன்றோ சரிவர தம் நிறுவனத்திற்கு ஒத்துழைக்கவில்லையென இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஜோடி வில்லியம்ஸை பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள். இத்தகைய சிறந்த பரிசிற்கு தேர்வான இவர், உண்மையில் அந் நிறுவனத்தின் நல்ல சேவைக்கு சரியாக ஒத்துழைக்கவில்லையா அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மனிதாபிமானமற்ற கொள்கைக்கு உடன்படவில்லையா என்று பலரதும் கேள்விக்கும் ஆளாகியுள்ளார்.

## ஆணின் மற்றுமொரு கோட்டை தகர்ந்தது



உலகின் முதலாவது விண்கல பெண் கொமாண்டர் லெப். கேர்ணல் மரி கொலின்ஸ்

# குழந்தைக்கு ஏன் தாய்ப் பால் சிறந்தது

ஒரு குழந்தைக்கு பாலூட்டுதல் என்பது வெறும் உணவு கொடுப்பது மட்டுமல்ல தாய்க்கும் சேய்க்குமிடையே நடக்கும் ஓர் உணர்ச்சிபூர்வமான பாசப்பிணைப்புமாகும். இதைத் தவறாகக் கருதி உடல் நலம் பாதிக்கப்படுமென சில தாய்மார்கள் தாய்ப்பாலூட்டத் தயங்குவது உண்மையில் மூடத்தனமான செயல். ஆகக் குறைந்தது குழந்தை பிறந்த 6 மாதம் மட்டுமாவது தாய் தன் பாலையே ஊட்ட வேண்டும். அதற்கு மேலும் தொடர்ந்து கொடுக்க முடியுமெனில் மிகவும் நல்லதே. இத் தாய்ப் பாலைப் பருகுவதால் குழந்தை வேறெதிலும் இல்லாத அளவிற்கு நிறைவான அனைத்துச் சத்துக்களையும் பெறுகிறது. அத்தோடு வெளியிடங்களிலிருந்து பெறப்படாமையால் எந்த வித கிருமிகளின் தொற்றும் குழந்தையை அணுகாது. அது மட்டுமல்லாது குழந்தைக்கு வேறு வழிகளில் தொற்றும் கிருமிகளை எதிர்க்கும் சக்தியும் இத் தாய்ப் பாலில் இருக்கிறது. இத்தோடு தாய்க்கும் உடலிற்கு பல நன்மைகளைக் கொடுக்கிறது. அதாவது கர்ப்ப காலத்தின் அளவுக்கதிகமான கொழுப்புப் படிவுகள் கரைந்து விடுகின்றன. இதைவிட பாலூட்டும் காலங்களில் கர்ப்பம் தரிக்கும் வாய்ப்பும் அதிகளவில் இடம் பெறாது. ஆனால் சில வேளைகளில் தாய் தன் பாலை குழந்தைக்கு வழங்க முடியாத நிலையும் உண்டு. அதாவது தாய் தீவிரமாக காசநோய், புற்றுநோய், தொழுநோய் போன்றவற்றால் அல்லது மனநோயால் பாதிப்படைந்திருந்திருந்தாலும் சிலவேளைகளில் மார்பில் கட்டி முலைக் காம்பில் வெடிப்பு அல்லது புண் போன்றவை இருந்தாலும் பாலூட்டலைத்தவிர்க்க வேண்டும். தாய் பாலூட்ட முன்பு தன் மார்பகங்களை நன்கு கழுவி சுத்தம் செய்யவேண்டும். அத்தோடு குழந்தையின் தலையை சற்று உயர்த்தி தன் வசதிக்கேற்ப இருந்துகொண்டே பாலைக் கொடுக்க வேண்டும். படுத்திருந்தபடி பால் கொடுக்கும் பழக்கம் மிகவும் ஆபத்தானதே.

**ஈழமுரசு பெண் வாசகிகளே!**

உங்களுடன் இவ் ஈழமுரசின் பெண்கள் பகுதியினர் எழுத்து வடிவிலான ஓர் உறவுப் பிணைப்பை ஏற்படுத்த விரும்புகிறார்கள். அதாவது இன்றுள்ள எம் புலம்பெயர் பெண்கள் நிலையில் பலவிதமான பிரச்சினைகள் தோன்றி வருவதை நாம் இனம் காண்கிறோம். இதை நேரடியாக உங்களிடம் வந்து நிவர்த்தி செய்யும் கடமை எங்களிற்கு அவசியமாக, ஏன் அவசரமாக உள்ளது. எனவே இப் பெண்கள் பகுதியூடாக உங்களிடமிருந்து சில ஒத்துழைப்பை நாடி உங்களிற்கு சிறு வழியிலேனும்உதவி புரிய எண்ணமிட்டுள்ளோம். அதாவது பலர், தாய் தந்தை உறவுகள் துணையின்றி தனித்தே வாழ்கிறார்கள். இதனால் அவர்களின் சொந்த விடயங்களைஆராய்ந்து அவர்களிற்கான சில தேவைகளைப் பூர்த்தி செய்யவோ அல்லது இப் பெண்கள் எதிர்நோக்கும் பல குடும்பச் சிக்கல்களை சரிவர ஆராய்ந்து தகுந்த அறிவுரைகளை வழங்கவோ யாருமில்லை. பல பெண்களிற்கு அங்கிருந்து இங்கு வந்து இத் தனித்துவிடப்பட்ட நிலையில் மனதளவில் பல ஊமைத்தனமான உணர்வுகளுடன் நடமாடும் உயிர்ச்சிலைகளாகக் காணப்படுகிறார்கள். இவர்களை ஆட்கொள்ளும் இப் பிரச்சினைகளை தீர்க்க, முழுமனதுடன் தகுந்த ஆலோசனை வழங்க நாம் தயாராக உள்ளோம். குறிப்பாக இன்று உங்கள் வசம் ஏதேனும் மனதளவில் அடக்கப்பட்டு வெளியே தெரிந்த ஆட்களுடனோ அல்லது உங்கள் உறவுகளுடனோ தெளிவாகக் கதைத்துத் தெரிந்து கொள்ள முடியாத நிலைமையில் தவிக்கின்றீர்களா? நீங்கள் நினைப்பதை எமக்கு எழுதியனுப்புங்கள். உங்களிற்கான நல்ல பதில் எம்மால் வழங்கப்படும். நீங்கள் கேட்கும் கேள்விகள் அனுப்பும்போது உங்கள் பிரச்சினைகளை மட்டும் உண்மையானதாகவும் விரும்பின் பெயர் சொந்த முகவரிகளைத் தவிர்த்தும் விடலாம். தற்போது இக்கேள்வி பதில் பகுதியை பெண்களிற்கு தொடங்கியதன் முழு நோக்கம், சில கால நேரடி அவதானிப்பில் பல பெண்கள் மனந் திறந்து பேசமுடியாதநிலையிலும் முறையான வழிகாட்டல் இன்றியும் இருத்தல், விவாகரத்து கருத்து முரண்பாடுள்ள கட்டாயத் திருமணங்கள், நாடுவிட்டு நாடு வந்ததன் பேரில் இங்குள்ள சில அடிப்படைச் சட்ட விதிகளைத் தெரியாமல் கல்வி, பொருளாதாரத் தேடலில் கொண்டுள்ள குழப்பங்கள், மாறுபட்ட சூழலில் இருவேறுபட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பெற்றோர் குழந்தைகளிற்கிடையிலான உளவியல் ரீதியான பிரச்சினைகள் என்பவற்றைக் காண நேர்ந்ததே ஆகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

# 'மட்டக்களப்பு வைத்தியம்'

- அ. பாலமனோகரன்

## சிறுகதை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஏன்தான் ரமணியக்காவிற்கு இந்தச் சோமாலியப் பெண்மேல் இத்தனை வெறுப்பு? அவள் கறுப்பி, நீக்கிரோ என்பதாலா? ஒரு முறை ரீவியில் மண்டேலா தனது மனைவி வினியை விவாகரத்துச் செய்ததுபற்றிச் செய்தி வந்தது. இந்தக் கறுப்பியள் எல்லாம் இப்படித்தான்! என்று ரமணியக்கா அளுத்திச் சொன்னா. அது மட்டுமல்ல, மண்டேலா வினியை 'டைவோஸ்' பண்ணியதுதான் சரி! அந்த ஆள் உண்மையிலை ஒரு இதான மனிசன்தான்! என்றும் சொல்லியிருந்தா. கனகரும் அப்போது பக்கத்தில் இருந்தவர்தான். அவர் எதுவுமே சொல்லவில்லை. அவருடைய சுபாபமே அப்படித்தான். சின்னராசா அண்ணர் மட்டும் மண்டேலா உண்மையிலே ஒரு இதான மனிசன்தான் இருபத்தேழு வருடம் ஜெயிலிலை இருந்தவரெல்லே, அதனாலைதான் அந்த நாட்டு மக்களுக்கு விடுதலை கிடைச்சது. எங்கடை தலைவர்களும் இந்தியாவிற்குப்போய் ஒழித்துக்கொண்டிருக்காமல் நாட்டிலே மறியலிலை இருந்திருந்தால் நாடு இண்டைக்கு இந்த நிலைமைக்கு வந்திருக்காது. எனச் சற்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார். உடனே ரமணியக்கா எனக்கு இந்தப் பொலிற்றிக்ஸ் கதையெல்லாம் பிடிக்காது என்று உங்களுக்குத் தெரியாதே என்று சொல்லவும், சின்னராசா அண்ணரின் உணர்ச்சி அப்படியே பொக்கென அடங்கிப்போயிற்று. சாந்தன் நடையின் வேகத்தைக் குறைக்காமலே சுமையின் வேகத்தை மற்றத் தோளுக்கு மாற்றிக்கொண்டான்.

இன்னமும் இரண்டு கிலோ மீற்றர்தான் விடுதி வந்துவிடும். அப்பாடா என ஒரு குளிப்புக் குளிச்சிட்டுச் சாப்பிடலாம். கனகர் சமைத்து வைத்துக்கொண்டு காத்துக்கொண்டிருப்பார்.

இன்னுமொருநாள் ரீவியில் டயானாவின் விவாகரத்துப் பற்றிச் செய்தி வந்தபோது, ரமணி அக்கா அதை மிகவும் ஆர்வத்துடன் பார்த்தா. பார்த்தது மட்டுமல்லாமல் 'இந்த வெள்ளைக்காறியள் எல்லாரும் இப்பிடித்தான்! என்ற தோரணையில் பேசினா. அப்போதுதான் ரமணி அக்கா வெறுப்பது இந்தக் கறுப்பு, வெள்ளை நிறங்களையல்ல என்பதுபோல் சாந்தனுக்குத் தோன்றியது. அப்போ ரமணி அக்கா ஏன்மேல் இத்தனை தீவிர வெறுப்பைக் காட்டுகின்றார் என யோசித்தான்.

ஒருநாள் அவன் தனது சந்தேகத்தை கனகரிடம் கேட்டான். 'ரமணி அக்கா ஏன்தான் இந்த சோமாலியக்காரியிலை இவ்வளவு கோபமாய் இருக்கிறா? அதற்குக் கனகர்

உனக்கு மண்டேலாவிலை குறிப்பாய் பிடிச்ச விஷயம் என்ன?' என்று திருப்பிக் கேட்டார். நான் கேட்டது ஒன்று, இவர் கேட்பது வேறொன்றாக இருக்கிறதே என நினைத்த சாந்தன் சில வினாடிகள் யோசித்து விட்டு, 'எனக்கு மண்டேலா போடுகிற சேட்டுக்கள்தான் அவரிலை முக்கியமாய்ப் பிடிச்ச விஷயம்! அந்தாள் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மாதிரி சேட்டுப் போட்டுக்கொண்டு நிப்பார்...நல்ல வடிவான சேட்டுக்கள்' என்றான். கனகர் மெல்லச் சிரித்துவிட்டு 'உனக்கு வடிவான சேட்டுக்களிலை விருப்பம்.. அதாலை மண்டேலாவின்ரை சேட்டுக்கள்தான் உனக்குக் குறிப்பாய் தெரியுது' என்று சொன்னபோது சாந்தனுக்கு மேலும் குழப்பமாகவே இருந்தது. 'அதுக்கும் நான் கேட்டதுக்கும் என்ன சம்பந்தம்?' எனப் புரியாதவனாக வினவினான். அதற்கு அவர் 'ரமணி அக்காவுக்கு பெண்களின் ஒழுக்கந்தான் முக்கியமான விஷயமாய் தெரியுது எண்டு நான் நினைக்கிறன், அதுதான் அவ மண்டேலாவின் மனைவியையும், டயானாவையும் கடுமையாக வெறுக்கின்றா போலும்!' என்று சொல்லிய கனகர் மறுபுறம் திரும்பிப் படுத்து நித்திரையாய்ப்போனார்.

கனகருக்குக் கவலையே கிடையாதா என்று யோசித்தபடியே நடந்தான் சாந்தன்.



ஏன் இருக்காது! வந்தளையிலை ஒரு சின்னப் பலசரக்குக் கடை வைத்திருந்தவர். சிங்களக் காடையரின் அட்டகாசம், பொலிஸ் கெடுபிடி தாங்கமுடியாமல் அதை விற்றுவிட்டு, ஏஜென்சிக்குப் பணம் கட்டி, மொஸ்கோவில் 14 மாதங்கள் தவமிருந்து ஒருவாறு டென்மார்க் வந்து சேர்ந்தவர். இடையில் நெடுந்தூரம் பனிச்சகதியில் சாதாரண சப்பாத்துக்களுடன் நடந்து, கால் விரல்களைப் பனி சுட்டு இப்போதும் தீராத வலியினால் அவதிப்படுபவர். இதற்கிடையில், சரசாலையில் இருந்த அவருடைய மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இப்போ உடையார் கட்டில். இரண்டு மூன்று மாதங்களாக அவர்களிடமிருந்து தகவல்கள் எதுவும் இல்லை. இவையெல்லாம் கனகர் தானாகச் சொன்னவையல்ல, பேச்சுவாக்கில் தெரியவந்த விஷயங்கள்.

ஆனால் சாந்தனோ தன் சரித்திரத்தையே கனகரிடம் கூறியிருந்தான். அடக்கி வைக்க முடியாமல் மனதின் கவலைகள். பயங்கள் யாவற்றையும் அவரிடம் கொட்டித் தீர்ப்பான். அவர் அதிகம் பேசாது அமைதியாகக் கேட்டுக்கொண்டிருப்பார். அதுவே அவனுக்கு பெரும் ஆறுதலை அளிக்கும்.

சில சமயங்களில் அவர் தனது அறையின் ஜன்னலூடாகத் தெரியும் வயல்வெளியைப் பார்த்தவாறே நிற்பதைச் சாந்தன் கண்டிருக்கின்றான். 'என்ன யோசிக்கிறியள் கனகரண்ணை?' என்று கேட்கத்தோன்றும். ஆனால் அவன் கேட்பதில்லை.

சமவயதென்றால் பரவாயில்லை. அவனைவிட அவருக்கு, பதினைந்து வயதாவது அதிகமிருக்கும். எப்படிக் கேட்பது......

விடுதியை அடைந்த சாந்தன் முதலில் ரமணி அக்காவின் அறைக்குத்தான் சென்றான். கதவைத் தட்டியபோது ரமணி அக்காதான் கதவைத் திறந்தா. பேசும் படம், பொம்மை இதழ்களைக் கண்டதுமே அவளுடைய முகம் மலர்ந்தது. 'இதெல்லாத்துக்கும் எவ்வளவு காசு சாந்தன்?' எனக் கேட்டாள். இதற்கிடையில் சின்னராசா வந்து மற்றப் பொருட்களை வாங்கிக்கொண்டு அவற்றுக்கான பணத்தை எடுக்க மேசையடிக்குச் சென்றார்.

அந்த அறை இருந்த கோலத்தை சாந்தனால் அவதானிக்காமல் இருக்க முடியவிலலை. பணத்தைப் பெற்றுக்கொண்டு நேரே கனகருடைய அறைக்குத்தான் சென்றான்.

சோமாலியக்காரி துப்பரவில்லை என்று அடிக்கடி சொல்லும் ரமணி அக்கா ஏன் தங்களுடைய அறையை இவ்வளவு அலங்கோலமாக வைத்திருக்கின்றா?...இரண்டுபேர் இருக்கினம்...வேறை வேலையும் இல்லை....என்று யோசித்தவாறே கனகருடைய அறையைத் திறந்தான்.

அந்த அறை இருந்த ஒழுங்கையும் ரமணி அக்காவின் அறை இருந்த கோலத்தையும் அவனால் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை.

எங்கே கனகர்? எனத் தனக்குள் கேட்டவாறே அவருடைய அறைக்குச் சற்றுத் தள்ளியிருந்த குளியலறையையும் பார்த்துக்கொண்டு சாந்தன் சமையலறைக்குச் சென்றபோது அங்கு கனகரைக் கண்டான்.

தலையில் கட்டுடன், சாறத்தை முழங்காலுக்கு மேல் மடித்துக் கட்டிக்கொண்டு கனகர் சமையலறைத் தரையைக் கழுவித் துணியினால் துடைத்துக் கொண்டிருந்தார்.

இன்று சனிக்கிழமை. சமையலறையைத் துப்பரவு செய்ய வேண்டிய ஒழுங்குத் திட்டத்தின்படி, சின்னராசா ரமணி அக்காவின் முறையல்லவா? ஏன் அவர்கள் செய்யவில்லை? எதற்காகக் கனகர் தலைவலியையும் பொருட்படுத்தாது கழுவிக் கொண்டிருக்கிறார்?

கனகரைக் கேட்டபோதுதான் விஷயம் புரிந்தது. அடுத்தநாள் சமையலறையைத் துப்பரவு செய்யவேண்டியது சோமாலியப் பெண்ணின் முறையாக இருந்தது. அவளுக்குச் சிரமம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, ரமணி அக்காவும், சின்னராசாவும் துப்பரவு செய்யாது விட்டதுமல்லாமல், வேண்டுமென்றே ஒரு பைக்கற் மா முழுவதையும் தரையெங்கும் கொட்டிச் சிதறியிருந்தனராம்.

'அதுக்கேன் நீங்கள், இந்தக் காயத்தோட நிண்டு வேலை செய்யவேண்டும்? ரமணி அக்கா அவையளிட்டைச் சொல்லுறதுதானே!' என ஆத்திரத்துடன் கேட்டான் சாந்தன்.

'இந்தா வேலையெல்லாம் முடிஞ்சுது!..நீ போய்க் குளிச்சிட்டு வா, சாப்பிடுவம்...பசிக்குது!' என்ற கனகர் தண்ணி வாளியையும் துடைப்பத்தையும் அவற்றுக்குரிய இடத்தில் வைத்தார்.

சாந்தன் தனது அறைக்குச் சென்று உடையை மாற்றிக்கொண்டு குளியலறையை நோக்கிச் சென்றபோது வழியில், சின்னராசாவும் ரமணி அக்காவும் தங்களுடைய அறைக்கு வெளியே நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். சின்னராசாவைப் பார்த்தால் சற்றுப் பதட்டநிலையில் இருப்பதுபோல் தோன்றியது.

அவர்களைச் சாந்தன் நெருங்கியதுமே சின்னராசா அவனிடம் 'கனகருக்கு ஏன் தேவையில்லாத வேலை! உவள் சோமாலியாக்காரியை இந்த விடுதியாலை எழுப்புறதுக்குத்தான் நாங்கள் திட்டம்போட்டு குசினிக்கை மாவைக் கொட்டி விட்டனாங்கள். இப்பிடி நாங்கள் எல்லாரும் சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமாய் அலுப்புக் குடுக்க தன்ரைபாட்டிலை வெளிக்கிடுவாள் கறுப்பி! அதுக்கு இந்தப் பே மனிசன் தான்போய் நிண்டு குசினி கழுவுது! என்று சற்று ஆத்திரத்துடனேயே கூறினார்.

'அந்தாளுக்கு சோமாலியன் அடிச்சுப் போட்டான் எண்டுதானே நாங்கள் இதைச் செய்தனாங்கள்... நாங்கள் தமிழர், ஒரு இனம் எண்டொரு இது இல்லை மனுசனுக்கு!...படிப்பறிவும் இல்லை!... போறாக்குறைக்கு மனிசிக்காறியை விட்டிட்டு இஞ்சை வந்து இரண்டு வருசமாகுது.... அதுதான் அந்தாளுக்கு கறுப்பியிலை இவ்வளவு கரிசனை!...அவற்றை வெண்மண்டையிலை ரத்தத்தைக் கண்டதும் அவ பதறிப்போய் பாய்ஞ்சுவந்து, தன்ரை துண்டாலை துடைச்சுக்கையே எனக்குத் தெரியும்!.... சீ....இப்படியும் ஒரு மனிசன் இருக்கவேணும்!' எனப் படபடத்தாள் ரமணி அக்கா.

தனது மனைவி சொல்வதை ஆமோதித்து அவளுடைய புத்திக்கூர்மையைப் பாராட்டுவது போன்றதொரு சிரிப்புடன் நின்றார் சின்னராசா.

கனகரை ரமணி அக்கா இப்படித் தரக்குறைவாகப் பேசியது சாந்தனுக்கு என்னவோபோல் இருந்தது. அவர்களிடமிருந்து ஒருவாறு தன்னை விடுவித்துக்கொண்டு குளியலறைக்கு வந்துவிட்டான்.

எவ்வளவு எளிதாக கனகரை இழிவுபடுத்திவிட்டா ரமணி அக்கா! கனகர் படிப்பறிவில்லாத ஆளாம்!.. அண்டைக்குக் கனகர் இல்லாட்டி இவை இரண்டு பேற்றை மண்டையையும் அடிச்சு நொறுக்கியிருப்பான் சோமாலியன்!... இதுக்கிடேலை தாங்கள் இரண்டுபேரும் பெரிய படிப்புப் படிச்ச ஆக்கள் எண்ட எண்ணம்!...

சாந்தன் தனக்குள் பொருமிக்கொண்டே குளித்தான்.

சோமாலியக்காறி ஒழுக்கம் கெட்டவள் எண்டு ரமணி அக்காவுக்கு என்னெண்டு நிச்சயமாய் தெரியும்! அவளும் தன்னைப் போலை ஒரு பொம்பிளைதானே எண்டு ஏன் இந்த ரமணி அக்கா யோசிக்கேல்லையே!... அல்லது அவளும் தன்னைப்போலை ஒரு பொம்பிளை எண்டபடியாலைதான் இப்பிடி யோசிக்கிறாவோ!...


கனகருக்கேன் இந்தத்

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

# உலக அரங்கின் கவனத்தை ஈர்க்கும் இந்திய நாவல்

'அவர்கள் அனைவரும் எல்லை மீறிய குற்றத்திற்கு உரியவர்கள், மரபின் பிடி அவர்களை அடக்கத் தவறவில்லை. எல்லாவற்றிற்கும் சட்டமுள்ள சமூகத்தில் யார் யாரைக் காதலிக்கலாம். எவ்வளவு காதலிக்கலாம், எப்படி காதலிக்கலாம் என்பதை இவர்கள் அறியாமல் இருந்தால் யார் தவறு?'

முப்பத்தாறே வயதான மலையாளப் பெண்ணான அருந்ததியின் முதல் புதினம் (நாவல்) நாவலாசிரியர்களின் கனவான 'புக்கர்' பரிசைத் தட்டிக் கொண்டு போயிருக்கிறது. இந்திய வம்சாவளியினர் இங்கிலாந்தின் மிகச் சிறந்த இப்பரிசைப் பெறுவது இதுதான் முதல் முறை என்றில்லையாயினும், ஒரு இளம் பெண், தனது முதல் நாவல் மூலமாக, அதுவும் முழுக்க, முழுக்க இந்திய சூழலில் எழுதப்பட்டு, முழுக்க இந்தியத் தன்மை கொண்ட ஒரு ஆங்கில புதினத்தின் மூலமாக ஊறுகாய் குடிசைத் தொழில். அதில் வேலை பார்க்கும் வெளுத்தா, சாக்கோ, மார்க்கரெட் கோச்சம்மா இவர்களின் பெண் ஸோஃபிமோள். இப்படி



ஒரு சின்ன உலகத்தின் கதை.

சின்ன உலகம் என்று சொன்னாலும் நுண்ணோக்கி கொண்டு பார்க்கும்போது சின்ன உலகின் அற்புதங்கள் ஒவ்வொன்றாய் விரியும் போது, சின்ன உலகமே ஒரு பிரபஞ்சம் ஆகிப் போகிறது. சின்ன உலகில் பிரபஞ்சம் அடங்கிப் போவது அதிசயமில்லை, சின்னவைகள்தான் பிரபஞ்சத்தை உருவாக்குகின்றன என்பதுதான் அதிசயம். அது இந்நாவலைப் படிக்கும் போது நன்றாக உணர முடிகி என்று நம்பிக் கொண்டிருப்பவர்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தி, கிறிஸ்தவர்கள் இதில் இம்மி அளவு கூட குறைந்தவர்கள் அல்ல என்பதுதான்! தோப்பில் முகம்மது மீரானின் கூனன் தோப்பு என்ற நாவல் சாதி வித்தியாசங்கள் முகம்மதியர்களிடமும் உண்டு என்பதைக் காட்டியது. அருந்ததி ராயின் இந்நாவல் கிறிஸ்தவர்களிடம் புரையோடிப் போயிருக்கும் இச் சமூக நோயை இனம் காட்டுகிறது.

அந்த வகையில் 'சின்னவைகளின் தெய்வம்' என்னும் இந்நாவல் ஒரு தலித் நாவல்.


வெளுத்தா— அட்டக் கரியாக இருக்கும் இப்பறையனின் பெயர் வெளுத்தா (அதாவது வெளுப்பு). மம்மாச்சியின் பார்வையில் 'இவர்கள் வந்தாலே ஒரு நாத்தம்!' கோச்சு மரியா வீட்டு வேலைக்காரி என்றாலும் சிரியன் கிறிஸ்டியன் சமூகத்தைச் சேர்ந்தவள் ஆதலால், பறையரை அடுப்படிக்குள்

## அருந்ததி ராயின் 'சின்னவைகளின் தெய்வம்'

பரிசு பெறுவது முதல் முறை.

அப்படித்தான் நினைக்கத் தோன்றும் நாவலுக்குள் புகுவதற்கு முன்பு, நாவலுக்குள் புகுந்து வெளிவரும்போதுதான் தெரியும் இந்நாவலின் பிரபஞ்சத் தன்மை. வயதிற்கும் எழுத்துத் திறத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதும் அப்போது புரியும். சாதி, வர்க்கமென பிரிந்திருக்கும் இவ்வுலகில் அன்பு என்பது அனாதைப் பிள்ளையாய் அலையும் அவதியைச் சொல்லும் இந்நாவல் வெறும் இந்திய நாவல் என்று ஒதுக்கிவிட முடியாதுதான். இது மானுடக்கதை, மனிதன் உலகில் எங்கிருந்தாலும் இக்கதை அவனை கட்டிப் போட்டும். அதனால்தான் இப்பரிசு இந்நாவலுக்கு கிடைத்திருக்கிறது. இந்திய தீப கற்பத்தின் முத்தாக உலக அரங்கில் அறிமுகமாகும் இந்நாவல் இந்திய வம்சாவளியினர் ஒவ்வொருவரும் வாசித்துப் பெருமை கொள்ள வேண்டிய நாவல்.

கதை எஷ்தா, ராகேல் என்னும் இரட்டையரின் உலகைச் சுற்றிச் சுற்றி வருகிறது. அவர்களது சின்ன உலகில், அவர்களின் சின்னப் பார்வையில், பெரியவர்கள் உலகு காண்பிக்கப்படுகிறது. அன்புக்காக அலையும் இரட்டையர் இவர்கள், எஷ்தா பையன், ராகேல் பெண். இரு முட்டைக் கருக்களானாலும் ஒரு ஆன்மாவைக் கொண்ட இரண்டு ஜீவன்கள். இவர்களது ஆசைகள், பார்வைகள், அதிசயங்கள், தேவைகள் இவையெல்லாம் அதிசயிக்கத்தக்கவகையில் ஒன்றாய் இருப்பதுதான் அதிசயம்! இவர்களது தாய் அம்முக் குட்டி, மாமா சாக்கோ, இவரது ஆங்கில (முதல்) மனைவி மார்க்கரெட், பாட்டி மம்மாச்சி, அம்முவின் அத்தை பேபி கோச்சம்மா. இவர்கள் வீட்டு சமையல்காரி கோச்சுமரியா. அம்மாச்சி ஆரம்பித்து, பிள்ளை சாக்கோ எடுத்து நடத்தும் சொர்க்கத்து




> ஜாதி என்பது இந்துக்களின் சாபக்கேடு என்று நம்பிக் கொண்டிருப்பவர்களுக்கு அதிர்ச்சிதரும் செய்தி, கிறிஸ்தவர்கள் இதில் இம்மி அளவு கூட குறைந்தவர்கள் அல்ல என்பதுதான்!

றது. அருந்ததியின் நுண்ணோக்கிப் பார்வையிலிருந்து எதுவும் தப்புவது இல்லை.

ஒரு சின்ன நிகழ்ச்சி கூட! ஏதோ போட்டோ எடுத்தது போன்ற வருணனை. வெறும் காட்சிகளை மட்டும் பதிப்பிக்கும் நாவல் அல்ல இது. அதற்கல்ல பரிசு. சின்ன, சின்ன மனத்தின் சலனங்களையும் பதிவு செய்கிறது. சமூகத்தின் சின்ன, சின்ன, சின்னத்தனங்களையும் பதிவு செய்கிறது நாவல். இந்தியாவில் ஆழ வேர் ஊன்றி இருக்கும் சாதிக்கொடுமையை பதிவு செய்யும் இருபதாம் நூற்றாண்டு நாவல் இது.

இந்நாவலின் தனி பங்களிப்பு, அதிகம் எழுதப்படாத சிரியன் கிறிஸ்தவ சமூகத்தைப் பற்றியதாகும். ஜாதி என்பது இந்துக்களின் சாபக் கேடு

நுழைய விடுவதில்லை. தீட்டுப் பட்டுவிடும்! கம்யூனிசம் பேசும் காம்ரெட் பிள்ளை சொல்கிறார், 'முதலாளி, நீங்கள் வெளுத்தாவை வேலை விட்டு விலக்குவது நல்லது. அவனுக்கு நீங்கள் அதிகம் இடம் கொடுக்கிறீர்கள். நான் கம்யூனிஸம் பேசினாலும் வீட்டுக் கட்டுப்பாட்டின்படி அவன் உள்ளே வரக்கூடாது' இப்படி எல்லோர் முகத்திரையும் கிழிகிறது இந்நாவலில், இந்திய மண்ணிற்கே உரிய பாசாண்டித்தனம். சாதி என்பது கம்யூனிச வார்த்தைகளில் வர்க்கம் தான் என்று பேசிக் கொண்டே சாதி பார்க்கும் இந்திய கம்யூனிஸ்டுகள்.

நாங்கள் சிரியன் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவத்தில் ஜாதி கிடையாது என்று சொல்லிக் கொண்டே, புனித தாமஸ் இந்தியா வந்தபோது முதலில் மதம் மாற்றிய நம்பூதிரி பிராமணர்கள்தான் பின்னால் சிரியன் கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள் என்று ஜாதி பேசும் கிறிஸ்தவர்கள். தங்களுக்குள் பேதம் பார்க்கும் இந்த இந்தியர்கள் வெள்ளையரைக் கண்டவுடன் தெய்வத்தைக் கண்டது போல் பல்லிளிக்கும் தாழ்வு மனப்பான்மை, இப்படி இந்தியப் பாசாண்டித்தனத்திற்கு சாட்டை அடி கொடுக்கிறது. அருந்ததி ராயின் நாவல். சாதி என்பது உண்மையில் வர்க்க பேறுபாடுதான் என்பதால் அதற்கு ஒரு பிரபஞ்சத் தன்மையும் வந்து விடுகிறது. இந்நாவலுக்கு பரிசு கொடுக்கும் இங்கிலாந்து தன் இன, வர்க்கப் பிரிவினைக்கு பேர் பெற்றதுதானே, அதனால்தான் இந்நாவல் அவர்கள் சமூகத்திற்கும் நல்ல பாடமாக அமைவதால் பரிசு கொடுத்திருக்கிறார்கள் போலும்.

சின்னவைகளின் தெய்வம் ஒரு பெண்ணிய நாவலும் ஆகும்.

அம்மாச்சியின் கணவர்

(தொடர்ச்சி 25ம் பக்கம்)

# நாற்று

இளம் ஆக்கங்கள்

## இன்ரநெற் யுகமும் இருபத்தோராம் நூற்றாண்டும்

இருபத்தியோராம் நூற்றாண்டு....
தமிழீழ வரலாறு!
எங்கும், எதிலும் எழுதப்படும்
இன்ரநெற் யுகம்தானே– 'இணைவலைகள்'
எம் இடுக்கண்கள் எல்லாம்,
எடுத்தெறிந்து எழுதட்டும்

காலம் காலமாக நாம் காவிய
விசக் கனவுகள் எல்லாம் கலைந்தோடட்டும்.
அன்று.... !
நடு மையத்தில் நாமிழந்த நமது இருப்பும்,
நெருக்கடிக்குள் நீளுமெம் நெஞ்சத்து நெருப்பும்
நெடுகிலும் என்ன நீண்டா போகும்...?!

'சூரியக் கதிர்கள்' வேரிழந்து போனதுபோல்,
'ஜயசிக்குறுகள்' சுக்கு நூறாகி தவிடுபொடியாகும்.
தாய் மண் மீதேறிய சருகுகள் கொழுத்தி....
களம் தனிலாடும் கதிரவன் பிள்ளைகள்
கடுகதிபோல் கதிர் விடுவார்கள்!

கிட்டிப்புல்லடித்து விளையாடிய,
எம் முற்றமும்,
புற்கள் தின்னும் வீதிகளும்
கறையான் அரிக்கும் வேலிகளும்
கிட்டடியில் எம் கைகளில் வீழும்!
அங்குநாம்....,
கணினியிலே கரமும் விளையாடலாம்;
புதுக் கவிதைகளும் புனையலாம்.

சிங்களவன் ஷெல்லடித்து
வட்டுமுறித்த
எம் தென்னையும் பனையும்
மொட்டையிழந்து,
வானம் எட்டும்வரை மொட்டுவிடும்!
தமிழன் ஏர் பிடித்தால்..... குழுப்பிடித்த
எருதுகளும் ஏர் இழுக்கும்.
தரிசான வயல்களெல்லாம் தலையசைக்கும்
'தைத்திருநாள் இல்லமெல்லாம் களித்திடும் தைப்பொங்கல்
இத்தனை நாள் காத்திருந்தோம் இனிய தமிழ்ப் பொங்கல்'
வறண்ட நாக்களெல்லாம் உமிழ் சுரந்து,
நயச்சுழற்றி நல்ல நாதமிசைக்கும்
எரிந்த குடில்களும் எட்டுமாடி வீடுகட்டும்!

ஊர்க்காற்று வந்து,
உலகத் தமிழர்களை அழைக்கும்
உங்கள் உறவும், வேரும்
தாமெனத் தமிழினத்தின் காதுகிழிக்கும்,
உழைப்பிற்கு உதாரண புருசர்களாய்...
தமிழரை தமிழீழ விடுதலைப் புலிகளை– இந்த
உலகம் உற்று நோக்க
உதய சூரியனும் ஒரு கணம் உச்சி குளிர்வான்

இருபத்தியோராம் நூற்றாண்டில்....
இன்றைய ஐ.நாவில்,
நாளை ஏ–நாவிலேனும் – எங்கள்
தமிழீழக்கொடி...... புலிக்கொடி பறக்கும்,
தொடக்குங்கள் ஏடு...!
எம்பிஞ்சு குருத்துக்களுக்கு–
எழுதச் சொல்லுங்கள் – எங்கள்
தமிழீழ வரலாற்றை......... எப்படி?
அம்மா.... அப்பா........ என்று அல்ல
'தமிழீழம் எங்கள் நாடு'
'தமிழ் மொழி எங்கள் தாய்மொழி'
'தமிழின் தலைவன் பிரபாகரன்' என்று!

எது எப்படியிருக்கினும் – இது
இப்படித்தான் இருக்கவேண்டும் – இந்த
இன்ரநெற் யுகமும் இருபத்தோராம் நூற்றாண்டும்!

மித்திலன் – ஒஸ்லோ




## தேடியவை

கடந்த சில நாட்களுக்கு முன்னர் மோனையாரை தேடிக்கொண்டு நெடிதுயர்ந்த தோற்றமுடையவர் ஒருவர் வந்திருந்தார். வந்தவர் தன்னை அறிமுகப்படுத்திய போது மோனையாருக்கு கிடைத்த புதினங்கள்...

கத்தோலிக்க மதகுருவான அவரது பெயர் அருட்தந்தை ஹிலரி. பெயர் கொஞ்சம் வித்தியாசமாக இருந்தாலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவர் தனது இறையியல் கல்வியை இங்கே [பிரான்சில்] கற்று குருப்பட்டம் பெற்றவர்.

ஆனால் அவரது 'குருப்பட்டம்' எதுவும் சிங்கக்கொடியோரின் புலனாய்வுத் துறையினருக்கு புலப்படவேயில்லை. அதனால்தான் தனது திருச்சபையின் உதவிப் பணிகளுக்காக அவர் கொழும்புக்கு சென்றபோது விசாரணைகள் என்ற பெயரில் துளைத்தெடுத்துவிட்டார்கள். மனம் வெதும்பிய குருவானவர் தனது வேதனையை ஈழமுரசின் படியேறி மோனையாரிடம் பகிர்ந்துகொண்டார்.

திருச்சபையின் மனிதாபிமான உதவித்திட்ட பணிகளுக்கென கொழும்பு சென்ற இவர் ஒபரோய் ஐந்து நட்சத்திர விடுதியில் தங்கியிருந்த வேளையில் இவரது தேவைக்கென சிற்றூர்தி ஒன்றினையும் விடுதி நிர்வாகம் ஒழுங்கு செய்திருந்தது. சிற்றூர்திக்கு ஓட்டிகளாக அமர்த்தப்பட்டவர்கள் அனைவரும் இந்தத் தமிழ் மதகுருவினை இனவாதப் பார்வையுடன் நோக்கி அவருடன் பணிபுரிய மறுத்ததனால், ஒருவார காலப்பகுதிக்கிடையில் 'ஐந்து' ஓட்டுனர்கள் பணிக்கென வந்து போனார்கள்.

அஞ்சல் தலை ஒன்றினையும் வெளியிடவேண்டுமெனவும் விடுக்கப்பட்ட வேண்டுதலானது சிறீலங்கா அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாகவும் மோனையாருக்குக் கிடைத்த 'புதினங்கள்' உறுதிப்படுத்துகின்றன.

இதிலுள்ள விடயம் என்னவென்றால்,

இதே சிறீலங்கா அரசுதான் யாழ்ப்பாணத்திலுள்ள கிறீனது நினைவுச் சின்னங்களை அழிக்க பல முயற்சிகள் எடுத்தது. இதனையே இங்கு மோனையார் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்புக்கும் உள்ளாகியுள்ளார்.

யாழ். மானிப்பாயில் கிறீன் அவர்களின் நினைவாக ஒரு ஆங்கிலப் பாடசாலையும் [தற்போது தமிழ்மொழி பாடசாலை], ஒரு வைத்தியசாலையும் [கிறீன் அவர்கள் பணி புரிந்ததும் இந்த வைத்தியசாலையில்தான்] இயங்கி வருகின்றன. இந்த வைத்தியசாலையை 1980`களின் பிற்பகுதியில் சிறீலங்கா அரசின் குண்டுவீச்சு விமானங்கள் தமது போர் வெறிக்கு இலக்காக தேர்ந்தெடுத்து குண்டுகளை வீசின. கூரையிலே செஞ்சிலுவை சின்னம் பொறிக்கப்பட்டும், வைத்தியசாலை வளாகம் போர் தவிர்ப்பு பிரதேசம் என பிரகடனப்படுத்தப் பட்டிருந்த போதிலும் இந்த அரக்கத் தனத்தை போர்விமானங்கள் புரிந்தன. வைத்தியசாலை முன்றலில் விழுந்த குண்டுகளுக்கு அப்பாவிகள் பலர் பலியானார்கள். கட்டடங்களுக்கும் சேதம் ஏற்பட்டது. அதுமட்டுமல்ல, கிறீன் அவர்களது அரிய பல தமிழ் நூல்களைக் கொண்டிருந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நூலகத்தினைக்கூட 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ வெறிப்படை சேதமாக்க முனைந்த கதையும் உலகம் அறியாததல்ல.

வைத்தியர் கிறீன் அவர்கள் தனது தாய்நாடான அமெரிக்கா திரும்பியவேளை தனது யாழ் நினைவாக தமிழ் வைத்திய ஓலைச் சுவடிகள் சிலவற்றை தம்முடன் எடுத்துச் சென்றிருந்தார். இச் சுவடிகள் அவரது சொந்த ஊரான வோர்செஸ்டரில் உள்ள நூல்நிலையத்திலுள்ள கிறீன் அறையில் இன்றும் பாதுகாப்பாக உள்ளன. ஆனால் யாழ். மண்ணுக்காக அவர் விட்டுச்சென்ற இச் சுவடிகளைப் போன்ற எத்தனையோ அரிய மருத்துவ சுவடிகளை 1983 ஆம் ஆண்டு சிங்களப் பேரினவாதம் யாழ். பொதுநூலகத்தோடு கருக்கிச் சாம்பலாக்கிவிட்டது.

ஆக, மொத்தம் செய்வதையெல்லாம் செய்துவிட்டு கிறீன் அவர்களது சேவைக்காக நினைவு முத்திரை ஒன்றினை சிறீலங்கா அரசு வெளியிட முனைவது எவ்விதத்திலும் நியாயமாக மோனையாருக்கு புலப்படவில்லை. உங்களுக்கு என்னமாதிரியோ கண்மணிகளே!

## ☞ குருவானவர் வேதனை
## ☞ முதலைகளின் சிறப்பாரம்
## ☞ ரகுமான் யார்?

அதில் இறுதியாக வந்த ஓட்டுனரோ ஒருபடி மேலேபோய் குருவானவரைப் பற்றி புலனாய்வுத்துறையிடம் 'அண்டி' வைத்துவிடவே குருவானவர் அரச 'விருந்தாளியாக' கணிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன. தானொரு குருவானவர் என்று பலதடவை எடுத்துக்கூறியபோதும் சிங்கக் கொடியோர் காதுகளில் எதுவுமே ஏறவேயில்லையாம்.

ஏதோ, குருவானவர் ஒருவர் குண்டுடன் கொழும்பிற்குள் வந்துவிட்டாரென்ற பாணியிலேயே விசாரணைகள் அனைத்தும் நடைபெற்றுள்ளன. விசாரணை முடிவில் மனம் வெதும்பிய குருவானவரோ, 'உங்களது நடத்தைகள் காரணமாக யாருமே உங்கள் நாட்டுப்பக்கம் எட்டிக்கூடப் பார்க்க விரும்பமாட்டார்கள்' என அவர்களிடம் கூறவே அவர்களும் பதிலுக்கு,

'நீர் குருவானவரென்பது சரிதான் ஆனால் நீர் ஒரு தமிழர் என்பதை மறந்துவிடாதீர்' எனக் கூறி அனுப்பியுள்ளனர். சிங்கக் கொடியோரின், தமிழ் மனங்களை வெல்லும் க[ா]ட்சியில் குருவானவருக்கு நேர்ந்தது ஒரு துளிதான்.

தனது மனவேதனைகளை வாசகக் கண்மணிகளிடம் எடுத்துரைக்க வேண்டுமென்ற அவரது வேண்டுகோளினை மோனையார் இப்போது நிறைவேற்றிவிட்டார். சரிதானே கண்மணிகாள்...!

* * *

கடந்த இதழிலே டென்மார்க்கிலிருந்து அன்பர் த.தர்மகுலசிங்கம் அவர்கள் தொகுத்தளித்த அறுவை சிகிச்சை நிபுணரும் மருத்துவருமான சாமுவேல்பிறிஸ்க் கிறீன் அவர்களைப் பற்றிய ஆக்கம் [சாரப்பகுதி] மோனையார் அவர்களை ஈர்த்துக்கொண்டது. அன்பர் தர்மகுலசிங்கத்தின் அத் தொகுப்பு பாராட்டுதற்குரியது.

1847 ஆம் ஆண்டு முதல் 1872 ஆம் ஆண்டுவரை தமிழீழ மண்ணிலே வைத்தியர் கிறீன் அவர்கள் தமிழுக்காக பணி [மருத்துவப் பணி உட்பட] செய்த காலப்பகுதியில், ஒருமுறை அவர் நோய்வாய்ப்பட நேர்ந்தது. அவ்வேளை அவரது தாய் நாடான அமெரிக்காவிலிருந்து அவரது தங்கை கிறீனை உடனடியாக நாடு திரும்பும்படி பணித்தபோது, கிறீன் அவர்கள் தன் தங்கைக்கு எழுதிய கடிதத்தில்

'தமிழுக்காக நான் சிரமப்பட்டது வீணாகக்கூடாது' எனவே நான் நாடு திரும்பமாட்டேன்' என உறுதியாகக் குறிப்பிட்டமை அன்னாரது தன்னலமற்ற சேவை நலனுக்கு ஒரு உதாரணம்.

[ஆதாரம் Life and Letters of Dr.Green)....

இவ்வாறாக வைத்தியர் கிறீன் அவர்களது சேவை சிறப்பினை விபரித்துக்கொண்டே போகலாம்.

ஆனால் அன்பர் தர்மகுலசிங்கத்தின் ஆக்கத்தின் இறுதியிலே குறிப்பிடப்பட்டிருந்த விடயமொன்றுதான் மோனையாரின் அலசலுக்கு உள்ளாகிவிட்டது.

அதாவது, அமரர் கிறீன் அவர்களை தேசிய வீரராக சிறீலங்கா அரசு பிரகடனப்படுத்தி அவருக்கு நினைவு

* * *

இந்தியாவின் சுதந்திர பொன்விழாவிற்காக 'வந்தே மாதரம்' என்ற இசைத்தட்டினை வெளியிட்டவரும், தமிழகத்தின் பிரபல இசையமைப்பாளரும், இளைய மனங்களை இழுத்தெடுக்கும் இசைக்குரியவருமான ஏ.ஆர் ரகுமான் முஸ்லிம் தீவிரவாதத்திற்குள் மெல்ல மெல்ல சென்று வருகிறார். அமைதியும், அடக்கமும் கொண்ட ரகுமான் வாழ்வில் வெடிகுண்டு முஸ்லீம் தீவிரவாதம் நுழைந்துவிட்டது. பரம்பரை இந்துக்களாக இருந்த ஒரு குடும்பம் ரகுமானது குடும்பம். ரகுமானது சொந்தப் பெயர் கூட திலீப்குமார் என்பதுதான். அப்படியானால் ரகுமான் குடும்பம் எப்போது முஸ்லீம் மார்க்கத்திற்கு மாறியது?

ரகுமானது மன்னிக்கவும், திலீப் குமாரது தந்தை நோய்வாய்ப்பட்டு இறந்துபோக அதே நோய் அவரது தாயாரையும் பீடித்தது. முஸ்லிம் 'பெரியவர்' ஒருவரது சிகிச்சையினால் அந்நோய் குணமாகியதைத் தொடர்ந்து திலீப்குமாரும் வீட்டிலிருந்த இந்து கடவுள் படங்களெல்லாம் வெளியேற்றப்பட்டு முஸ்லீம் மார்க்கம் அந்த வீட்டில் குடிகொண்டுவிட்டது. திலீப்குமாரும் ரகுமானாக மாறி பேரும், புகழும் பெற்றுவிட்டார்.

தனது பேருக்கும் புகழுக்கும் 'அல்லா' தான் காரணமென்பது ரகுமானின் அசைக்க முடியாத நம்பிக்கையாகவும் மாறிவிட்டதால் முஸ்லிம் மார்க்கத்திற்காக வாரி வழங்க தொடங்கியும்விட்டார். சிறி ஹரிகோட்டா என்ற இடத்தில் பெரிய முஸ்லிம் தர்கா ஒன்றினையும் ரகுமான் தற்போது கட்டிவருகிறார்.

இவ்வாறான வாரிவழங்கல்கள் முஸ்லீம் தீவிரவாதிகளையும் போய்ச்சேரும் வகையில் ரகுமானது குடும்பத்தோடு ஒட்டியிருக்கும் 'ஒருவர்' ஏற்பாடுகளைச் செய்துவிட்டதால் ரகுமானை அறியாமலே பெருந்தொகை பணம் ஜிகாத், அல்-உம்மா போன்ற தீவிரவாத அமைப்புக்களுக்கு போய்ச் சேருகின்றன.

இவ்வாறாக...இவ்வாறாக மோனையார் தெரிவிக்கவில்லை. மாறாக தமிழகத்திலிருந்து வெளியாகும் நக்கீரன் இதழினது மார்ச் மாத இறுதிப்பதிப்பில் இந்த விடயங்கள் அடங்கிய கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. தனது நிருபர்கள் குழாமின் கவன 'ஆய்வின்' மூலமாக இந்த 'விடயங்கள்' எடுக்கப்பட்டன எனவும் நக்கீரன் தெரிவித்துள்ளது.

சந்தன வீரப்பனின் 'சரணடையும் கதை' தொடர்பாக தமிழக அரச கோட்டைக்கும், காட்டுக்குமாக கொஞ்ச நாட்கள் அலைந்து திரிந்த நக்கீரனின் இந்த புதிய கதையில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பதை ரகுமானது சுயவிளக்கம் தெரியப்படுத்தும்வரை நீங்களும் கொஞ்சம் பொறுத்திருங்களேன்..... கண்மணிகளே.

## 'மட்டக்களப்பு வைத்தியம்'

### சிறுகதை

[18ம் பக்கத் தொடர்ச்சி]

தேவையில்லாத அலுவலுகள்! தானும் தன்ரை சோலியும் என்றிருந்தால் ஏன் இந்தப் புடுங்குப்பாடுகள்!...கனகருக்குச் சொல்லவேணும்!... என நினைத்த சாந்தன் குளியலை முடித்துக்கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்றான்.

அவன் கனகருடைய அறைக்குச் சென்றபோது அவர் தன்னுடைய சிறிய மேசைமீது உணவை ஆயத்தமாக வைத்திருந்தார். சாந்தன் தன்னுடைய மனதில் இருந்ததை உடனேயே பட்டெனக் கேட்டான்.

'அண்ணை! உங்களுக்கேன் இந்தத் தேவையில்லாத வேலை?... அவையள் மானைக் கொட்டினால் என்ன என்னத்தைச் செய்தால் என்ன? நீங்கள் ஏன் போய் நிண்டு குசினி கழுவினனீங்கள்? உங்களுக்கும் சோமாலியாக்காறிக்கும் எதோ தொடுப்பு இருக்குதாம்..அதுதான் அவள் செய்யவேண்டிய வேலையை நீங்கள் செய்தனீங்களாம்!... ரமணி அக்கா சொல்லுறா' என ஆத்திரத்துடன் கேட்டான் சாந்தன்.

'அவ சொன்னாச் சொல்லட்டன்....அதுக்கேன் நீ கோவிக்கிறாய்?' எனச் சிரித்துக்கொண்டே நிதானமாகக்கேட்டார் கனகர்.

சாந்தனுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. 'அண்ணை உங்களுக்கு கொஞ்சமெண்டாலும் சூடுசுரணை இல்லையோ? அண்டைக்கு தேவையில்லாமல் அவையின்ரை சண்டைக்கே தலையைக் குடுத்து அடி வாங்கினியள்!...இண்டைக்கு ஆரோ செய்யவேண்டிய வேலையை நீங்கள் செய்துபோட்டு.... அதாலை மற்ற ஆக்கள் தேவையில்லாத கதை கதைக்கினம்!

'சாந்தன் ஆரெண்டாலும் சொல்லுறதைச் சொல்லட்டும்! என்னைப் பொறுத்த மட்டிலை இந்தக் குசினி எங்கள் எல்லாருக்கும் பொதுவான குசினி! இண்டைக்கு இவையள் செய்த வேலைக்கு நாளைக்கு அந்தச் சோமாலியாக்காறி குசினியைத் துப்பரவு பண்ணுவாள் எண்டு நம்புறியே??... நாளைக்கு அவளும் தன்ரை சமையலை முடிச்சுக்கொண்டு குசினியைத் துப்பரவு செய்யாட்டி பிறகு நாங்கள் அந்தக் குப்பைக்கை நிண்டுதான் சமைக்கவேணும்!..இதாலை பிரச்சினையள் வளருமேயொழிய ஒருதரும் நிம்மதியாய் இருக்கேலாது!...இண்டைக்கே துப்பரவாக்கிவிட்டால் வேலையும் குறையும், பிரச்சினையும் வளராது எண்ட நோக்கத்தான் நான் துப்பரவாக்கினான்! .....இந்தச் சின்ன விஷயத்தையெல்லாம் பெரிசுபடுத்தாமல் வா சாப்பிட்டிட்டுப் படுப்பம்! என்றார் கனகர்.

கதிரையை இழுத்துப்போட்டுக்கொண்டு சாப்பிட உட்கார்ந்த சாந்தனுக்கு கனகரைப் பார்க்கையில் வியப்பாக இருந்தது. இப்படியும் ஒரு ஆள் இருக்கமுடியுமா என்று நினைத்தவனுக்கு கூடவே மண்டேலாவின் ஞாபகம் வந்தது.

'கனகரண்ணை....உங்களுக்கு மண்டேலாவிலை பிடிச்ச விஷயம் என்ன? என்று கேட்டான் சாந்தன்.

'எனக்கு அந்தாளைப்பற்றி கனக்கத் தெரியாது!...ஆனால் 27 வருசம் மறியலிலை இருந்தும் அந்தாள் விசர் பிடியாமல் இருந்ததுதான் பெரிய விஷயமாய் எனக்குத் தெரியுது!' என்று சொல்லிச் சிரித்தார் கனகர்.

'அவரும் உங்களைப் போலத்தான்!...தான் இருந்த சிறையிலைகூட பூக்கண்டு நட்டவராம்!' என்றான் சாந்தன்.

அதற்குக் கனகர் 'எனக்கு மண்டேலாவைப்பற்றித் தெரியாது, ஆனால் எங்கடை ஊரிலை ஒரு ஆள் மட்டக்களப்பு வைத்தியம் எண்டு இருந்தவர், அவரைப்பற்றி நல்லாய்த் தெரியும்!'என்றார்.

கனகர் ஏன் இதனைச் சொல்கின்றார் என்பது புரியாமல் அவரைப் பார்த்தான்.

'எங்கடை ஊர் எல்லையிலைதான் இந்த மட்டக்களப்பு வைத்தியம் தன்ரை மனுசியோடை இருந்தவர். அவருக்கு எங்கடை ஊரிலை சொந்தம் கிந்தம் ஒண்டுமில்லை. வயசுபோன மனிசன். எப்ப எங்கடை ஊருக்கு வந்தவர் எண்டது எனக்குத் தெரியாது. என்ரை சின்ன வயதிலை என்ரை அம்மாவோடை நான் அங்கை மருந்துக்குப் போன ஞாபகம். ஒரு சின்ன ஓலைக் கொட்டில்தான் வீடு. திண்ணையிலை மருந்தரைக்கிற அம்மி, மூலிகைக் குழை, பலவிதமான கிழங்குகள், வேர்கள் எல்லாம் இருக்கும். நல்ல கைராசி! வைத்தியத்துக்கு காசு வேண்டாது. சனம், அரிசி சாமான் குடுத்தால் வேண்டுவார்.

வைத்தியம் குடியிருந்த அந்தச் சின்ன வளவை நீ பாக்கவேணும்!...பால்போலை வெள்ளை மணல்...வேலி ஓரத்திலை குங்கும நிறத்திலை வாடாமல்லி பூ.... வைத்தியம் அந்த வளவுக்குக் குடி வரமுதல் அது ஒரே பிரப்பம் பத்தையாய்க் கிடந்ததாம்! அவரும் மனிசியும்தான் கொஞ்சம் கொஞ்சமாய் பிரப்பம் பத்தையளை வெட்டி, வேர், கிழங்கு பிரட்டித் துப்பரவாக்கினவையாம். வேலையில்லாத நேரத்திலை அதுகள் இரண்டுபேரும் எப்போதும் அந்த வளவைத் துப்பரவாக்கிக்கொண்டுதான் இருப்பினம்!

ஒருநாள் அம்மா வைத்தியத்தைக் கேட்டா. ஏன் வைத்தியம், உங்களுக்கென்ன பிள்ளையோ குட்டியோ?... ஏன் இந்த வயதிலை இப்பிடி இந்தக் காணியை பிரம்பு படராமல் கஷ்டப்பட்டு பராமரிக்கிறியள்? அதுக்கு வைத்தியம் சிரிச்சுக்கொண்டு சொன்னது எனக்கு இப்பவும் நல்ல ஞாபகம்! 'நாங்கள் இரண்டுபேரும் இருக்க மாட்டந்தான்...ஆனால் காணி இருக்குமெல்லே!.... இந்தக் காணிக்கை எங்களுக்குப் பிறகு இருக்கப்போற ஆக்கள் பிரச்சினை இல்லாமல் இருக்கலாமெல்லே!

இந்தக் கதையைக் கூறிவிட்டு கனகர் சோற்றைப் பிசைந்து உண்ணத் தொடங்கிவிட்டார்.

'அப்ப எங்கடை நாட்டிலும் மண்டேலா போலை ஆக்கள் இருந்திருக்கினந்தான்! எனச் சாந்தன் சொல்லியபோது சாப்பிடுவதை நிறுத்தி அவனை நேருக்கு நேர் பார்த்தார் கனகர். 'தம்பி சாந்தன்! குடியிருக்கிற காணியும் ஒண்டுதான்...குடியிருக்கிற நாடும் ஒண்டுதான்...மண்டேலாவைப் பற்றிக் கதைக்கிறாய்...நாளைக்குத் தங்கடை நாட்டிலை இருக்கப் போற சனம் பிரச்சினை இல்லாமல் சீவிக்கவேணும் எண்டதுக்காக எத்தினை இளம் பிள்ளையள் தங்கடை உயிரைக் குடுத்துப் போராடுதுகள்!... என்னைப் பொறுத்தவரையிலை அந்தப் பிள்ளையள்தான் எல்லாரிலும் பெரிசாய் தெரியுதுகள்! இதை எப்பவெண்டாலும் யோசிச்சு பாத்திருக்கிறியே?' என அமைதியாகக் கேட்டார் கனகர்.

சாந்தன் திகைத்துப் போனான்.

(முற்றும்)

வானலைகளில் உலகளாவிய ரீதியில் தமிழ்

**I.B.C.**

**Astra Satellite - Movie Channel**

**Transponder - 18 / Audio 7.56Kz / Video 11.479Kz**

தொடர்புகட்ளுக்கு: P.O.Box -1505, London SW 82 ZH.
Tel: 0171 787 8000 / Fax: 0171 787 8010

**Radio Asia Canada**

தொடர்புகளுக்கு: 680, Progress Avenue Unit 01,
Scarborough, Ontario, M1 H3 A5, Canada.
Tel: 00 1 416 289 1522 / Fax: 00 1 416 289 1840

**Tamil Radio & Television (T.R.T)**

**(Tamil Ozhi Oli)**

*தினமும் உங்கள் சின்னத் திரையில்*

12.00 செய்தி நேரம், 16.45 பி.பி.சி.யின் தமிழோசை,
21.00 செய்தி நேரம், எமது பிரதான செய்தித் தொகுப்பு


**தினமும் உங்கள் வானொலியில்**

8.00 செய்தித் தலைப்புகள், 8.30 ஐரோப்பிய வலம்,
13.30 பிரதான செய்திகள், 16.45 பி.பி.சி.யின் தமிழோசை,
17.16 கனடாவிற்கான ஒலிபரப்பு, 21.00 பிரதான செய்திகள்
**நள்ளிரவு முதல் காலை 6.00 வரை கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள்.**

தொடர்புகளுக்கு: 79, Rue Rateau, 93120 La Courneuve.
Tel: 01 43 11 27 77 / Fax: 01 43 11 27 72

**Radio veritas Asia (Tamil Section)**

தொடர்புகளுக்கு: P.O. box 2642
Quezon City 1166, Philippines.
Tel: (632) 93900 11-4 / Fax: (632) 9381940



லண்டனில்

# ஆச்சீஸ்

ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 15 வரை

**புதுவருடத்தை முன்னிட்டு**

# மாபெரும் மலிவு விற்பனை

**பச்சையரிசி (ஆச்சீஸ்) - 1கிலோ** £1.49
(மூன்று கிலோ வாங்கினால் ஒரு கிலோ இலவசம்)

**சர்க்கரை (ஆச்சீஸ்) - 500கிராம்** £1.49

**யாழ்ப்பாண மிளகாய்த் தூள் - 450 கிராம்** £1.69
ஆச்சாஸ், வீலா)
(மூன்று வாங்கினால் ஒன்று இலவசம்)



வீலா, ஆச்சீஸ் தயாரிப்பு பொருட்கள் அனைத்திலும் 5 வீதக் கழிவு உண்டு

இலங்கை மரக்கறி வகைகள் அனைத்தும் 1 இறாத்தல் 99P

**Arhie'S**

**Tel: 0181-2053552**

*205, Edgware Road, Colindale-Nw 9.*

# ஈழமுரசை முன்நிறுத்தி சில கருத்துக்கள்

'ஈழமுரசு' இதுவரை ஆற்றிய பங்கை மதிப்பீடு செய்வதும், அதன் உள்ளடக்கம் பற்றிய சில கருத்துக்களை முன்வைப்பதும் எம் நோக்கம். இதற்கு, எமது நீண்ட நாளைய ஈழமுரசு வாசகச் சூழலும், நாம் கொண்டிருக்கும் சமூகக் கண்ணோட்டமுமே ஆரோக்கியமான பார்வைக்கு வழி சமைக்க வேண்டும்.

கடந்த காலங்களில் (90-க்கு முன்) சிறு பத்திரிகைகளின் வாயிலாக தாயகச் செய்திகளையும், கருத்தாடல்களையும் நாம் பெற்று வந்தோம். 1990-க்குப் பின் பல சிறு சஞ்சிகைகள் பொருளாதார ரீதியிலும், கருத்து மோதல்களாலும் நின்று போக, இச் சிறு சஞ்சிகைகளின் இடத்திற்கு பெரிய வாரச் செய்தித்தாள்கள் வரவுகொண்டன.

அவற்றில் பல பத்திரிகைகளை நாம் வியாபாரச் சூழலுக்குள் வைத்துப் பார்க்கும்போது, அவற்றை வெகுஜனப் பத்திரிகைக்கான சூழலுக்குள் அடக்கிவிட முடியாது போகிறது. இவ் வகைச் சூழலை எது மீறுகிறதோ அஃது நம் கவனத்திற்குரியதாகிறது.

> **ஐரோப்பாவில் தினமும் 24 மணி நேரம் தமிழ் வானொலிகள் இரண்டு; 8 மணிநேரச் சேவை ஒன்று; தொலைக்காட்சியொன்று! இவற்றின் வரவு, சராசரி வாசக வட்டத்தைக் காவு கொள்ள — செய்தித்தாள்களின் பரப்பளவு (வாசகப் பரப்பு) குறிப்பிட்டளவு குறுகிவிடுகிறது. இதிலிருந்து ஒரு வெகுஜனப் பத்திரிகை தன்னை காப்பாற்றிக் கொள்வதும், புதிய தேவைகளின் சாதகத்தைப் புரிவதும், அதைத்தர தம்மாலான முயற்சிகளில் ஈடுபடவும் முயல வேண்டும்.**

இந்த வகையில் ஈழமுரசு நம் கவனத்தை ஈர்ப்பது முற்றிலும் ஆச்சரியப்பட் வேண்டியது.

தேசம் பற்றிய பிரக்ஞையோடு; இன விடுதலை என்பது தேசத்தின் விடுதலையோடுதாம் சாத்தியமென்ற கோட்பாட்டுக்கு மெருகேற்றும் பொறுப்போடு ஈழமுரசு வந்துகொள்வதில் முழு மூச்சாகச் செயற்படுவதால், 'அதை, கட்சிப் பத்திரிகை என்று அடக்கிவிட முடியாது. எனினும், அதை வெகுஜனப் பத்திரிகை என்ற தளத்திற்கு உயர்த்தும் நலன் தேசிய விடுதலைச் சக்தியின் பக்கத்திலிருந்தே முகிழ்கிறது. இக்காரணத்தால் இப் பத்திரிகை தன் ஸ்தாபக ஆசிரியரையே காவு கொடுக்க வேண்டியும் வந்தது யாவரும் அறிந்ததே.

இவ்வகைப் புரிதலின் பொருட்டு ஈழமுரசு வெகுஜனப் பத்திரிகை என்று திடமாக வரையறை செய்வோம். இப்படிச் செய்தால் மட்டுமே அதன் உள்ளடக்கத்தின் நியாயமான, சில முக்கியமான தேவைகளை நாம் அங்கீகரிக்கமுடியும்! இல்லையேல் சராசரி வாசகத் தேவையின் உணர்வோடு அணுகும் அபாயம் தோன்றிவிடும்.

ஈழமுரசு செய்திகளைச் சுடச்சுட பதிப்பித்துக் காசாக்கும் பத்திரிகைகள் போல் அதன் உள்ளடக்கம் இல்லை. அஃது மிக மிகத் திருப்திகரமான ஒரு ஆரோக்கிய நிலையென்பதால் ஈழமுரசு வெகுஜனப் பத்திரிகைக்குரிய முதல் சுற்றில் வந்துவிடுகிறது.

தேசிய விடுதலை;
தேச நலன்;
மக்கள் நலன்;

மூடக் கருத்துக்களை அகற்றல்; முற்போக்காய் சிந்தித்து எழுதுதல், இரண்டாவது சுற்றில் வெகுஜனப்பத்திரிகை என்று ஓங்கி ஒலிக்க வைக்கிறது. என்னும் இது மட்டும் ஒரு பத்திரிகையை பரந்துபட்ட வாசகப் பரப்புக்குள் நிலைத்து நிற்க விடமாட்டாது! துரித பரிவர்த்தனை; வேகமான விநியோக ஏற்பாடுகள், வாசகர் கருத்து நிலையை உயர்த்துதல், புதிய இரசனைகளை வளர்த்தெடுத்தல், செய்திகளை கூடியவரை உடனக்குடன் வழங்குதல் போன்றவையும் வாசகப் பரப்பை விஸ்தரித்து நிலை நிறுத்தும்.

இவ்வகைப் பின்னணியில் வைத்து ஈழமுரசின் ஆக்கங்களை சற்று ஆராய்ந்து அதன் தன்மைகளைப் பற்றி விளங்கிக்கொள்ள முயன்றால் ஈழமுரசு பத்திரிகையின் தரநிர்ணயம் புரிந்துவிடும்.

இனி உள்ளடக்கத்தைப் பார்ப்போம்:

1. ஈழ/சிறீலங்காச் செய்திகள்; இந்திய / உலகச் செய்திகள்; புகலிட நிகழ்வுகள் = செய்திப்பகுதி;
2. சிறுவர் பகுதி = சிறார் மனோ வளர்ச்சி ஊக்குவிப்பு'
3. பெண்கள் பக்கம் = மகளிர் முன்னேற்றம்.
4. சினிமா; சாளரம் = மாற்று சமூக, கலா இரசனைத் தேடல்;
5. சடையர்; பண்ணையார்; மோனையார் = தேசநலன்;
6. அருமைத்தம்பி = புகலிட-வாழ்நிலை சீர்திருத்தம்;
7. சிறுகதை; கவிதைகள் = மாற்று இலக்கியம்;
8. கேள்வி; பதில் = அறிவியல்
9. நக்கீரன் = தமிழர் சமுதாய வரலாறு.

மேற்படி ஒன்பது வகை மாதிரிக்குள் ஈழமுரசின் உள்ளடக்கத்தை அடக்கிவிடலாம். இவற்றில் எதுவுமே மாற்றத்துக்கோ அல்லது புதிய பாணியிலோ வருவதை மறுக்கவில்லை. வாராவாரம் முரசில் இவற்றை எழுதிவிடத் தேவையான உழைப்புச் சக்தியைச்செலவிட முடியாத சூழலிலும் ஏதோ ஊசலாடி, ஊசலாடி எழுதப்படுத்துவது தாம் உண்மை! இதன் தாக்கம் படைப்புகளில் பட்டவர்த்தனமாகத் தெரியும்.

ஒரு படைப்பாளி பல்வகைப் படைப்புகளை எழுத வேண்டிய சூழலில் படைப்புத்தரம் கொஞ்சம் தளர் நிலைக்குள் போய் விடுவதை சமீபத்திய ஈழமுரசில் காணக்கூடியதாகவுள்ளது.

வாரம் ஒரு இதழ் வெளியிடுவது புலம்பெயர்வுச் சூழலில் மிகவும் கடினமானதுதாம். எனினும், குறிப்பிட்ட சூழலில் உள்ள பகை முரண்களில் நிலவும் சாதகமானதைப் பயன்படுத்தி புதிய, புதிய பாணியில் படைப்புகள் எழமுடியும். இதழ் 165, 166 இல் இப்புதிய பரிசோதனை சிவா அவர்களால் செய்யப்படுகிறது. இஃது வரவேற்றப்பட வேண்டிய ஒரு விசயம்.

> **புதிய, புதிய உத்திகளும் படைப்புகளும் இச் சூழலை முறியடிக்கும். படைப்பாளிகளை அந்நியப்படுத்தாத அணுகுமுறை ஊடாக அவர்களிடமிருந்து படைப்புகளைக் கோருவதும் சுமுகமான உறவை தொலைபேசியூடாகவோ அல்லது கடிதம் போக்குவரத்துக் கூடாகவோ ஈழமுரசு மேற்கொள்ள வேண்டும்.**

'ஈழமுரசு ஒருசில பாத்திக்குள் முடங்கிவிட்டது' எனும் வாசக அபிப்பிராயத்தை உடைப்பதிலுள்ள வீச்சில் தாம் அதன் எதிர்கால ஜீவிதம் தங்கியுள்ளது.

நமக்குள் தற்போது பற்பல ஊடகங்கள் வந்துவிட்டன. சாதாரண 'செய்தி அறியும் வாசகவிருப்பு' தற்போது ஒரு சிறிய சற்றலைட் டிஷ்க்கில் தன் வேலையைப் பூர்த்திசெய்கிறது. ஐரோப்பாவில் தினமும் 24 மணி நேரம் தமிழ் வானொலிகள் இரண்டு; 8 மணிநேரச் சேவை ஒன்று; தொலைக்காட்சியொன்று! இவற்றின் வரவு, சராசரி வாசக வட்டத்தை காவு கொள்ள—செய்தித்தாள்களின் பரப்பளவு (வாசகப் பரப்பு) குறிப்பிட்டளவு குறுகிவிடுகிறது. இதிலிருந்து ஒரு வெகுஜனப் பத்திரிகை தன்னை காப்பாற்றிக் கொள்வதும், புதிய தேவைகளின் சாதகத்தைப் புரிவதும், அதைத் தர தம்மாலான முயற்சிகளில் ஈடுபடவும் முயல வேண்டும். ஈழமுரசில் இடம்பெறும் குறிப்பிட்ட படைப்புகளால் இஃது சாத்தியமாகாது! இன்றைய சூழலில் ஈழமுரசின் தேவை மிக மிக முக்கியம். ஆனால், சரியான வகையில் சூழலை மதிப்பீடு செய்யாமல் ஒரே பாணில் ஒரு வெகுஜனப் பத்திரிகை வெளிவருமானால் அஃது சில வரையறைகளோடு போராடி ஸ்தம்பித்து, ஒருகட்டத்துக்கு மேல் நகரமுடியாது; 90-க்கு முன் சிறு பத்திரிகைகளுக்கு இது தாம் நேர்ந்தது.

- ப.வி.சிறீரங்கன் -

அவை வெறும் பாடப் புத்தகங்களாகவே வெளிவந்தன. இவற்றால் புரியும் பாணியில் கூட எழுதமுடியவில்லை; சராசரி வாசக உணர்வை மீறி இவர்களால் ஒரு சில படைப்பாளிகளுக்கு மட்டத்துக்கு ஏற்ற படி மசாலாப் பத்திரிகை நடாத்தும்படி கூறவில்லை. ஓரளவுக்கு, வாசகர்களின் இரசனையை வளர்க்கும்படி. ஆக்கஙளைப் படைக்க வேண்டும். சமீபத்தில் அம்மா இதழில் வந்த சேனாவின் 'Own Self' கதையும் பாலேஸின் 'வசித்தல்' கதையும் இந்தச் சூழலில் எப்படி வாசகர்களை முட்டாள்களாக்கும் என்பதைப் பற்றி புரிந்து கொள்ள உதாரணமாகக் கொள்ளலாம். இவ்வகைப் பாணியை தயவு தாட்சன்யமில்லாமல் நிராகரித்து பாமரர்களான நம்மை நாமே மதிக்கத் தெரிந்த படைப்புகள் வெளியிடப்பட வேண்டும்.

இந்த நோக்கில் பார்த்தால் ஈழமுரசில் அவ்வளவு குறை காண முடியாது. ஜமுனா ராஜேந்திரனால் சராசரி வாசகன் புரியும்படி எழுதுவது ஒரு போதும் முடியாது. அஃது, அவர் படித்தவற்றை உணர்வு பூர்வமாக உள்வாங்கி பிரக்ஞையோடு எழுதும்போது சாத்தியமாகலாம். அதுவரை அவர் படைப்புகளை சராசரி வாசகர் நிராகரித்தே வருவார்.

இப்போது ஈழமுரசில் ஒரு தேக்கம் நிலவுவது இயல்பாகப் புரியும் மேலே குறிப்பிட்ட படைப்புக்குள் வலம்வரும் வாசகன் சற்று சலிப்பைக்கண்டு விட்டு வேறு வழியின்றி விமர்சனமின்றி செய்திக்குள் போகும் சூழல் இப்போதில்லை. அவ்வகை தேவையை வானொலிகள் பூர்த்திசெய்ய அவர்கள் பத்திரிகையிடமிருந்து அந்நியமாகி வருகிறார்கள். இப்போது ஈழமுரசின் சில வாசகர்களுக்கு இஃது நடந்துவிட்டது.

> **'ஈழமுரசு ஒருசில பாத்திக்குள் முடங்கிவிட்டது' எனும் வாசக அபிப்பிராயத்தை உடைப்பதிலுள்ள வீச்சில் தாம் அதன் எதிர்கால ஜீவிதம் தங்கியுள்ளது.**

இதிலிருந்து ஈழமுரசைக் காக்கவேண்டிய பொறுப்பு சகல படைப்பாளிகள் மீதும் விழுந்துள்ளது (ஈழமுரசுப் படைப்பாளிகள்) வியாபாரப் பத்திரிகைகள் தம் கள்ளிப் பெட்டியை நிரப்ப சகல மஞ்சள் வேலைகளையும் செய்து தம்மைக் காத்துவிடுவார்கள். ஆனால், ஈழமுரசு போன்ற வெகுஜனப் பத்திரிகைக்கு இச் சூழலை வெற்றிகொள்வது அவ்வளவு சுலபமில்லை.

என்றபோதும். புதிய, புதிய உத்திகளும் படைப்புகளும் இச் சூழலை முறியடிக்கும். படைப்பாளிகளை அந்நியப்படுத்தாத அணுகுமுறை ஊடாக அவர்களிடமிருந்து படைப்புகளைக் கோருவதும் சுமுகமான உறவை தொலைபேசியூடாகவோ அல்லது கடிதம் போக்குவரத்துக் கூடாகவோ ஈழமுரசு மேற்கொள்ளவேண்டும்.

அ: புதிய, புதிய படைப்புக்களை வரவேற்றல்

ஆ: தமிழக / ஈழச் சூழலில் இன்று நடைபெறும் விஞ்ஞான / அறிவியல் விவாதங்களை ஈழமுரசு உள்வாங்கி பதிப்பித்தல்

இ: சாளரத்தை இந்த 'ஆ'வுக்காகவே திறந்து விடல்

ஈ: தரமான தமிழகச் சிறுகதைகளை; ஈழத்துச் சிறுகதைகளை மீள் பதிப்புச் செய்தல்

உ: முற்போக்குச் சிந்தனைகளுக்கு தாராள மனதோடு வழி விட்டு வருவதைத் தொடர்ந்து போராடிக் காத்துக்கொள்ளுவது; எக்காரணம் கொண்டும் இதிலிருந்து இறங்கி மௌனப்படக் கூடாது.

ஊ: புலம்பெயர் வாழ்சூழலில் தமிழ்பேசும் மக்களின் சகல முன்னெடுப்புக்களையும் விஞ்ஞானபூர்வமாக புரிந்து, உள்வாங்கி, அவர்கள் மத்தியில் ஓர்மனத்துடன் நிகழ்ந்து வரும் புதிய புரிதல்கள்—விஞ்ஞான / அறிவியல் முன்னெடுப்புக்களை ஈழமுரசு காவிக்கொண்டு வாசகர்களைச் சென்றடைதல்.

எ: ஐரோப்பிய வாழ்வியல் முறைமைகளை, அவர்தம் பண்பாட்டு நிகழ்வுகளை (பண்பாட்டு நிகழ்வென்பது சகல படிமுறை வளர்ச்சிகளையும் என்பது மனதில் கொள்ளவும்) ஆளுமையுள்ளவர்களைக் கொண்டு ஈழமுரசில் குறித்துக் கொள்வது

ஏ: இலக்கிய முன்னெடுப்புக்களை பன்முகத்தன்மையோடு படைத்தலுக்கான விமர்சனப்பக்கமொன்றை முரசில் ஒதுக்குவது.

மேற்காணும் இவற்றை முரசு ஏற்கும் பட்சத்தில் ஈழமுரசு நிச்சயம் இந்த விசச்சூழலை வெற்றிகொள்ளும். குமுதம், ஆ.வி, பொம்மை, பேசும்படம், திரைச் சித்திரா இப்போதைய வானொலிகளை வெற்றிகொண்டு வெகுஜனப் பத்திரிகையை காப்பாற்றுவதும் தேசப்பற்றுற கலா இரசனையை, படைப்பாற்றலை வாசகர்கள் தக்க வைக்க முயற்சி எடுப்பதும் ஈழமுரசின் இன்றைய கடமை!

★

# லண்டன் மரதன்-98





கடந்த மார்ச் 15-ம் திகதி ஹோஸ்ரிங் இல் நடைபெற்ற 13 மைல் அரை மரதன் போட்டியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் கலந்துகொண்ட வீரர்களை இங்கே காண்கிறீர்கள். இவர்களில் 13 பேர் எதிர் வரும் ஏப்ரல் 26-ம் திகதி நடைபெறவுள்ள 'லண்டன் மரதனில்' 26 மைல் மரதன் ஓடவுள்ளனர். இந்த வீரர்களால் சேகரிக்கப்படும் நிதி தமிழீழப் பகுதியில் போர்ச்சூழலில் தமது உடல் அங்கங்களை இழந்து அங்கவீனர்களான சிறுவர்கள் முதியோர்களுக்காக நடாத்தப்படும் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். கடந்த ஆண்டு முதல் தடவையாக புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் 10 மரதன் வீரர்கள் கலந்துகொண்டு சேகரித்த 6,820 பவுண்கள், தமிழீழத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வேலைத்திட்டங்களில் ஒன்றான கல்வி வசதி இழந்து இருக்கும் சிறுவர்களின் ஆரம்பப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு இலக்கம்: **0181 - 520 5876**

TRO
79 Hoe Street
Walthamstow
London E 17 4SA
U.K.

# 'ஜியான்'இல் நடைபெற்ற பொங்கல் விழா

கடந்த 07.02.98 சனிக்கிழமை அன்று ஜியான் தமிழ்ச் சோலையினரின் பொங்கல்விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் ஜியான் நகரபிதா திரு ஜோன்பியர் ஒத்திசேர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார்.



**ஜியான் நகரபிதா**
**திரு. ஜோன்பியர் ஒத்திசேர்**

இவ்விழா பி.ப. 3.30 மணியளவில் திரு, திருமதி பரஞ்சோதி அவர்கள் மங்கல விளக்கினை ஏற்றிவைக்க, திரு. ருக்மாங்கதன் தலைமையில் ஈழப்போரில் மரணித்த மாவீரர்களுக்கும் பொது மக்களுக்குமாக இரு நிமிட அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகியது. முதல் நிகழ்வாக சார்சல் தமிழ்ச்சோலை மாணவி செல்வி சர்மிளா சர்வேஸ்வரனின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. இவரது நடனம் பார்வையாளர்களின் குறிப்பாக பிரெஞ்சு நாட்டு மக்களின் பாராட்டுதலைப் பெற்றது. தொடர்ந்து ஜியான் தமிழ்ச் சோலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், பேச்சு, கவிதாஞ்சலி, காவடி ஆட்டம், டிஸ்கோ நடனம், சிறுவர்களின் 'மிருக நிகழ்ச்சி', கோலாட்டம், செம்பு நடனம் எனத் தொடர்ந்தன குறிப்பாக இந்தப் பாடசாலை ஆரம்பித்து இரண்டு மாதங்களுக்குள் இப்படி ஒரு நிகழ்ச்சியை நடாத்தி சிறுவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்திய ஆசிரியர்கள் பாராட்டுதற்குரியவர்கள். குறிப்பாக நடனத்துக்கு என்ற பிரத்தியேக ஆசிரியை இல்லாதவிடத்து சிறுமிகளுக்கு செம்பு நடனத்தினை பழக்கி தரமான நடனமாக ஆக்கித் தந்த ஆசிரியை திருமதி. ச. ருக்மாங்கதனும், டிஸ்கோ நடனத்தை வடிவமைத்த ஆசிரியை செல்வி அபிதா பரஞ்சோதியும் பாராட்டுக்குரியவர்கள். இந்த நடனங்கள் குறிப்பாக பிரெஞ்சு நாட்டுமக்களின் பாராட்டுகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இத்துடன் சார்சல் தமிழ்ச் சோலை மாணவிகள் சோபியா அன்ரனி, செழியா அன்ரனி ஆகியோரின் சம்பாசணை இடம்பெற்றது. இதனை ஆசிரியை திருமதி. ச. புண்ணியமூர்த்தி வடிவமைத்தார். அத்துடன் கீழ்கரவை பொன்னையன் தலைமையில் திரு. பரமானந்தம், திரு. சுரேஸ் அவர்களுடன் திருமதி முகுந்தினி நித்தி அவர்களும் கலந்துகொண்ட பட்டி மன்றம் இடம்பெற்றது. விழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட ஜியான் நகரபிதா தனது உரையில், தமிழ் மக்களின் கலை கலாச்சாரத்தையும், பிரான்ஸ் நாட்டில் மற்ற இன மக்களுடன் அவர்கள் சேர்ந்துவாழும் வாழ்க்கை பற்றியும் பாராட்டிப் பேசினார். அத்துடன் ஈழத்தில் எம் மக்களால் நடாத்தப்படும் போர் நியாயமானது என்றும் கூடிய கெதியில் நாம் சுதந்திரம் பெற்று எம் உறவுகளுடன் கூடி வாழ தான் வாழ்த்துவதாகவும், பிரெஞ்சு நாட்டில் தான் சந்தணப் பொட்டுடன் ஒரு திருமணத்தை நடத்திவைக்கப் போவதாகவும் கூறினார். இடையில், ஒரு திருமணத்தை நடாத்திவைத்து மீண்டும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார். அடுத்து தமிழர் ஒருங்கிணைப்பு பிரதிநிதி திரு. பாலசுந்தரம் அவர்கள் உரை நிகழ்த்தினார். திருமதி விஜயகுமாரி பாலசுந்தரம் அவர்கள் கல்லூரியில் சேவை மனப்பான்மையுடன் ஊதியமற்று கல்வி கற்பிக்கும் ஆசிரியைகளுக்கும், கல்லூரி சிறுவர்களுக்கும் பரிசில்களை வழங்கினார். இறுதியில் திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் நெறிப்படுத்தி வழங்கிய 'மாவீரன் சங்கிலியன்' என்னும் நாடகம் நடைபெற்றது. இதில் குறிப்பாக சங்கிலியனாகவும் கிழவியாகவும் நடித்தவர்களின் நடிப்பு பார்வையாளரின் மனதைக் கவர்ந்தது. நிகழ்ச்சிகளை பேராசிரியர் சக்திப்புயல் அவர்கள் மொழிபெயர்ப்பு செய்துவைத்தார். அவரின் மொழிபெயர்ப்பு, விழாவினை சிறப்புடன் நடாத்த உதவியது.



இறுதியில் திரு.நாகேஸ்வரன் அவர்களின் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவேறியது.

# புகலிட நிகழ்வுகள்

## சுவிசில்
## கணினிக் கண்காட்சியும் கருத்தரங்கும்

அம்மான் கணினி ஸ்தாபனம், சுவிஸ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் 12.04.1998 அன்றும் 13.04.1998 அன்றும் Zentrum Tscharnergut. Waldmannstr 17, 3027 Bern-Switzerland இல் கணினிக் கண்காட்சியும், கருத்தரங்கும் நடாத்த உள்ளது.

இங்கு நடைபெறும் கண்காட்சியில் அம்மான் கணினி ஸ்தாபன மாணவர்களின் முயற்சியில் உருவாக்கப்பட்ட பல்வேறு ஒழுங்குகள் (Programe) உட்பட நவீன உலகை ஒன்றிணைக்கும் முக்கிய ஊடகமான கணினிவலையின் செயற்பாடுகள், செயல்முறைகளுடன், 'காட்வெயர்' எனப்படும் கணினியின் பாகங்கள் பற்றிய விரிவான விளக்கங்கள் கண்காட்சியில் உள்ளடக்கப்படும்.

13.04.1998 திங்கட்கிழமை மாலை 3.00 மணியிலிருந்து விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட கணினிக் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் குறிப்பாக தமிழ் எழுத்துக்களின் தட்டச்சு வடிவில் உள்ள குழப்ப. நிலையைத் தீர்க்கும் முகமாக எல்லோரும் ஒன்றிணைந்து பொதுவான ஒரு தமிழ் எழுத்தை அங்கீகரிப்பது பற்றியும், அன்றாடக் கணினித் துறையில் ஏற்படும் மாற்றங்கள் சார்ந்த நன்மை தீமைகள் பற்றி பல கணினி சிறப்பினர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் கலந்து ஆலோசிக்கப்படவுள்ளன.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - லண்டன் நடாத்தும் 8-வது சர்வதேச
## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

உள்நாட்டுக் கழகங்களுடன் பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க் நாடுகளில் இருந்து வருகைதரும் கழகங்களும் கலந்துகொள்ளும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

கூழ், கொத்துரொட்டி, மற்றும் சுவையான தமிழீழ உணவு வகைகளுடன் சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளது.

குடும்பத்துடன் வந்து நல்லதோர் நாளை நாட்டிற்காகவும் சந்தோசமாகவும் கழித்தோம் என்ற திருப்தியுடன் வீடு செல்ல எதிர்வரும் மே 3-ம் திகதி Bank Holiday அன்று Dougles Eyre Sports Centre, Coppermill lane. London E 17 என்ற இடத்தில் நடைபெறும். உதைபந்தாட்டப் போட்டிக்கு வருக வருக என்று வரவேற்கின்றார்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர்.

தொலைபேசி இல: 0181-520 5876

## சோதியா கலைக்கல்லூரியில்
## புதிய வகுப்புகள்

பரத நாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின் வகுப்புகளுடன் சோதியா கலைக்கல்லூரியில் புதிதாக வீணை வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.
சிறப்புத் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களினால் நடாத்தப்படும் வகுப்புக்களில் கலந்துகொள்ள விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

**வகுப்பு நேர விபரங்கள் வருமாறு:**

**நடனம்:** - சனி, ஞாயிறு, பி.ப 2.30–5.30 மணி
**வாய்ப்பாட்டு:** - பி.ப 5.00–6.30 மணி
**வயலின்:** - புதன் 3.00–5.00 மணி
- சனி பி.ப 2.00–4.00 மணி
**புதிய வீணை வகுப்புகள்:**
- சனி, ஞாயிறு 10.30–12.00 மணி

தொடர்புகளுக்கு:
**தமிழ்ச்சோலை மண்டபம்**
26, Rue du Department, 75018 Paris.
M°: La Chepelle.

(19ம் பக்கத் தொடர்ச்சி)

## உலக அரங்கின்....

பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பூச்சியியல் விஞ்ஞானி, வேகாத வெயிலிலும் சூட்,கோட்டு ஆசாமி, தனது வெளி கௌரவம் பாதிக்கப்படும் போதெல்லாம் தனது ஆத்திரத்தை தீர்த்துக்கொள்ள அம்மாச்சியை விட்டு விளாசுவார். கையில் கிடைத்ததை வைத்து அடித்து நொறுக்குவார். கேரள நாடு கத்களி நாட்டிய நாடகத்திற்கு பேர் பெற்றது. புனிதம் காரணமாக ஆண்களே பெண் வேடம் போட்டு நடிக்கும் இந்நாடகங்களில் பெண்களாக நடிக்கும் ஆண்கள் பெண்களாகவே மாறி விடுவதை மிக அருமையாக வர்ணிப்பார், அருந்ததி, நாடகமெல்லாம் முடிந்த பின்வீடு போகும் இந் நடிகர்கள் தங்கள் ஆத்திரத்தை பெண்கள் மீது பாவிப்பதை இப்படி சொல்கிறார் ராய், 'காட்சி முடிந்து வீடு போனபின் மனைவியை வெளுத்துக் கட்டுவர் நடிகர்கள். மென் முலை குந்தி கூட!'

மம்மாச்சி தனது பிள்ளை இங்கிலாந்திலிருந்து மனைவி விவாகரத்து கோரிய பின் திரும்பி வந்தவுடன் ஊறுகாய் தொழிலை அவனுக்கு கொடுப்பதுடன், அவனது அறையில் அவனது 'ஆண் தேவைகளை' நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டு அவனது அறைக்கு தனி வாசல் செய்து கொடுக்கிறாள், அவன் தனது தொழிலாளிப் பெண்களை உபயோகித்துக் கொள்வதை கண்டும் காணாமலும் இருக்கிறாள். ஆனால் அதே அம்மாச்சி தனது பெண், விவாகரத்தாகி வீடு திரும்பும் போது கொதிப்படைந்து அவள் குடும்பத்திற்கே லாயக்கில்லை என்கிறாள். அவள் பறையனான வெளுத்தாவுடன் காதல் செய்வதை அறிந்தவுடன், வெளுத்தா முகத்தில் காறித்துப்பி, பெண்ணை வீட்டில் அடைத்துப்போட்டு, இறுதியில் ஒரு பாபமும் அறியாத வெளுத்தாவை போலிசை வைத்து உதைத்துக்கொன்று விடுகிறாள். (கவனிக்க! அடியாள் வைத்து அல்ல, சாதி வெறியுடைய பொலீஸின் துணையுடன்!!) ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பதப்படுத்தப் பட்ட (Social Conditioning) பெண்கள் எப்படி சுய சிந்தனையற்று ஆடு, மாடுகள் போல் வாழ்கிறார்கள் என்பதை இந்நாவல் மிக ஆழமாக சித்தரிக்கிறது. காம்ரெட் பிள்ளை வெயிலில் போய்விட்டு வீடு திரும்புகிறார். வீட்டில் வந்து நிற்கும் சாக்கோவை கண்டு கொள்கிறார். தனது மனைவி, தாய் அங்கு இருப்பதாகக்கூட கண்டு கொள்ளாத ஆணாதிக்க பாவத்தை மிக அழகாக பதிவு செய்கிறார். பின், சட்டையைக் கழட்டி, அக்குள் வேர்வையை அதைக் கொண்டே துடைத்து விட்டு பக்கத்தில் இருக்கும் மனைவியிடம் அதிகாரமாக நீட்ட, அந்த மட ஜென்மமும் அதை ஏதோ கடவுள் பிரசாதம் போல் வாங்கிக்கொண்டு நிற்பதை அப்படியே படம் பிடிக்கிறார் ராய்.

இந் நாவலில் ஆதார மூச்சு ஒரு பெண்ணின் மூச்சு என்பது கவனிக்க வேண்டிய ஒன்று.

இது தலித் பெண்ணின் நாவல் என்றாலும் இவரது மொழி போராட்ட மொழி அல்ல. இவரது உரை நடை கவிதையாய் மிளிர்கிறது. பல இடங்களில், வாசிக்க ஆரம்பித்தால் எழுந்து செல்ல மனமில்லாதபடி உட்கார வைக்கும் நடைராயுடையது. எப்படி சின்ன, சின்ன அணுக்கள் சேர்ந்து ஒரு மாபெரும் உலகைப் படைக்கிறதோ அதுபோல் சின்ன வருணனைகள் மூலமாக ஒரு காவியத்தைப் படைத்துக் காட்டுகிறார் ராய். இந்நாவலின் எழுத்து யுத்திக்காவது நமது தமிழ் படைப்பாளிகள் கட்டாயம் இந் நாவலை வாசிக்க வேண்டும். ஒரு நாவல் உலக கவனத்தைப் பெறவேண்டுமெனில் எப்படி எழுதப்படவேண்டுமென இந்நாவலின் மூலமாக அறிந்து கொள்ளலாம். நேர்கோடாக நிகழ்ச்சிகளைத் தொகுக்காமல் வாழ்வு எப்படி பின்னலாக அமைந்துள்ளதோ - அதே போல் நிகழ்வுகளை கடந்த காலம், நிகழ்காலம் எதிர்காலம் என வரிசைப் படுத்தாமல் - பின்னி, பின்னித் தருகிறார்.இது முதல் வரியை வாசித்தவுடன் அடுத்து என்ன நிகழப் போகிறது என்று வாசிப்பவனை தொடர்ந்து வாசிக்க தூண்டுவதுடன், அவனுக்கு கனவு போன்றதொரு சர்ரியலிச உணர்வைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது இந் நாவல். இது நாவலின் வெற்றி இரகசியம், இந்நாவலின் கதா பாத்திரங்கள் கடைசிவரை நம்முடன் வாழ்ந்துகொண்டே இருக்கிறார்கள். நாம் நாவலுடன் வாழ்வதுடன், நாவல் நம் வாழ்வாகிப் போகிறது!

சல்மன் ருஷ்டி வி.எஸ், நாய்பால் போன்ற இந்திய வம்சாவளி ஆங்கில நாவல் ஆசிரியர்களுக்கும் அருந்ததி ராய்க்கும் பாரிய வித்தியாசம் தெரிகிறது. ராய் காணும் இந்தியா அவளது தாய்நாடு. அதன் அழகையும், சௌந்தர்யத்தையும், அதன் மக்களையும், அவர்களது வாழ்வையும் தத்துவரூபமாக படம் பிடிக்கும் அதே வேளையில் அதன் குற்றங்களையும் கோபப்படாமல் சொல்லிச் செல்கிறார். நக்கலும், நையாண்டியும் இந்நாவலில் விரவி இருந்தாலும் அதுதான் நாவல் என்ற அளவுக்கு போகவில்லை. 'சின்னவைகளின் தெய்வம்' முழுக்க, முழுக்க ஒரு இந்திய நாவல், ஒரு மலையாள நாவல். செம்மீன் போல் இந்நாவல் நல்ல மலையாள இயக்குநர்களால் படம் பிடிக்கப்படலாம். இது தான் மலையாள மாந்திரீகம் என்பது.

இந்நாவலை படித்து முடித்தவுடன், இந்நாவல் ஏன் ஒரு தமிழனால் எழுத முடியவில்லை என்ற கேள்வி வந்து நிற்கிறது. இந்நாவல் ஒரு திராவிட நாவலாக இருந்தாலும், தமிழில் கிளைத்த மலையாள மொழி வளத்தின் பாதிப்பில்தான் எழுந்திருக்கிறது. அப்படித்தான் ராய் 'மிஸ்' என்ற அமெரிக்கப் பத்திரிக்கைக்கான பேட்டியில் கூறியுள்ளார். இந்நாவலில் உள்ள பல பாலியல் வர்ணனைகளைத் தாங்கும் திறன் தமிழுக்கு இன்னும் வரவில்லை. தமிழ் இன்னும் ஒரு கூச்சமுள்ள மொழியாக இருப்பதுதான் அந்தக் குறை. பண்பாடு என்ற போர்வையில் மொழியை காலத்தின் தேவைக்கேற்ற வகையில் வளர்க்கத் தவறும் நம் குறை சின்னதாக அல்ல, பெரியதாப்படுகிறது... சின்னவை பற்றிய பேசும் இந்நாவலை வாசித்தபின்.

நா.கண்ணன்.
கீல்.ஜேர்மனி

The God of Small Things
Harper Collinns Publishers 1997
UK Poundsterling 5.99
India Ink (in India) Rs, 395

# சொற்சிலம்பம்

## போட்டி எண்: 1.

**நீ - ச - சை - தி - க - ப - ட் - ப் - டு - பா - ளி - ரு - த் - னி - பு - த - கு - ல் - றி - ழ - வி - க் - ம் - ம - வ - ன் - ள - ண் - டி - ரீ - ல - கா - ர - லி - ர்.**

இங்கு காணப்படும் எழுத்துக்களைக் கொண்டு 15க்கும் மேற்பட்ட சொற்கள் ஆக்கப்படவேண்டும். சொற்கள் 4 எழுத்துக்களுக்கும், அதற்கு மேற்பட்டதாகவும் இருக்க வேண்டும். எந்த எழுத்தில் முதல் சொல் தொடங்குகிறதோ, அதே எழுத்திலேயே ஆக்கப்படும் சொற்கள் அனைத்தும் தொடங்கப்படல் வேண்டும்.

1)........................................ 16)........................................
2)........................................ 18)........................................
3)........................................ 19)........................................
4)........................................ 20)........................................
5)........................................ 21)........................................
6)........................................ 22)........................................
7)........................................ 23)........................................
8)........................................ 24)........................................
9)........................................ 25)........................................
10)........................................ 26)........................................
11)........................................ 27)........................................
12)........................................ 28)........................................
14)........................................ 29)........................................
15)........................................ 30)........................................

'சொற்சிலம்பம்' எண்-1-இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 18.04.98

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

சொற்சிலம்பம்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

பெயர்: . . . . . . . . . . . . . . . . . . . .
முகவரி: . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .
பிறந்த திகதி: . . . . . . . . . . . . . . . .
சந்தா இல: . . . . . . . . . . . . . . . . . .

போட்டியில் கலந்துகொண்டு சரியான விடைகளை எழுதி அனுப்பும் வாசகர்களில், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தெடுக்கப்படும் ஐவருக்கு மக்கள் கடை தாபனத்தினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

சொற்சிலம்பம் எண்-1 இற்கான சரியான விடையும், சொற்சிலம்பம் எண்-2 உம், 23 - 29 ஏப்ரல் 98 ஈழமுரசில் வெளிவரும்.

சவேயூ
சவுந்தரராஜா

குறிப்பு: போட்டோ பிரதிகள் தெரிவுக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.


வெகு விரைவில்
Coming Soon

ஈரோ தமிழ் ஒளி
Euro Tamil oli

இன்றே எங்களிடம் தொடர்பு கொள்ளுங்கள் ரசீவர் டெக்கோடர் வர்த்தக நிலையங்களிலும் அல்லது எங்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

**பார்ப்பதற்கான சந்தா கட்டணம் பின்வருமாறு**

ஒரு மாதம் **40 DM** — அரை வருடம் **235 DM**
மூன்று மாதம் **129 DM** — ஒரு வருடம் **455 DM**

Euro Tamil Oli
N.Navajeevakumar
Bahnhof str-1, 96224 Burgkunstadt,
Germany.

Tel : / Fax: 09572 -603135




# ஏமாறுறவை இருக்கும் வரை ஏமாத்திறவை இருக்கத்தான செய்வினம்.. ? !

இந்த நாளையிலை யாரை நம்ப முடியுது...? எந்தப் புத்துக்கை என்ன பாம்பிருக்கெண்டே கண்டுபிடிக்க முடியுதில்லை! கலியாணம் நடந்தும்(?) இப்ப நாலைஞ்சு வருசமாகி ரெண்டு குழந்தையள் வேறை பிறந்திட்டுது...... அந்தப் பிள்ளைக்கு நல்லதொரு வாழ்க்கை அமைஞ்சு போச்சு எண்டதிலை இப்ப கொஞ்சம் சந்தோசம்தான் பாருங்கோ. இருந்தாலும் அந்த நேரத்திலை ரெண்டு பேரும் விரும்பி போ(ஓடி)னதிலை அவவின்ரை உறவுகளுக்கை கொஞ்சம் மனக்கசப்பும் இருந்தது. காதல், கத்தரிக்காய் எண்டா சில சனங்களுக்கு ஒரு 'அலர்ஜி' வாறது 'நோர்மல்' தானே. பழகப்பழக பழக்கத்திலை வந்திடுற மாதிரி, எட்டஎட்ட இருந்து இடைவெளியள் ஏற்பட உந்தக் கோப தாபங்களும் விட்டுப்போறதும் சகசம் கண்டியளோ. பிள்ளையளும் பிறந்திட்டுது இனி எங்கையெண்டாலும் நல்லா இருக்கட்டும் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கேக்க எல்லோ இந்த மாதிரி இடிவிழுந்திருக்குது!

எப்பிடித்தான் இந்த முழுப்பூசணிக்காயை மகராசன் மூடி மறைச்சாரோ தெரியேலை...! ஆனாலும் உண்மையளை எத்தனை நாளைக்கு பூட்டிவைக்க முடியும்? கிணறு வெட்டப் பூதம் கிளம்பின கதை மாதிரியெண்டாலும் ஒருநாள் வெளிவரத்தானே செய்யும்.

என்னடா இது அடியும் விளங்கேலை, நுனியும் விளங்கேலை எண்டுதானே மண்டையைப் பிய்க்கிறியள்...? சொல்லுறன்... சொல்லுறன்... கொஞ்சம் பொறுங்கோ... அவற்றை மனிசிக்கு விசயம் தெரியவரவே ஐஞ்சு வருசம் செண்டிருக்கு! உங்களுக்கு தெரிய வர ஒரு ஐஞ்சு நிமிசமெண்டாலும் வேண்டாமோ.....?

அந்தப் பிள்ளையும் இங்கினை வந்து சேந்த புதுசு பாருங்கோ. அப்பிடி என்னதான் கண்கட்டி வித்தையளைக் காட்டி, என்ன புலுடாக்களை விட்டாரோ தெரியலை, அதுகும் கட்டினா அவரைத்தான் கட்டுவன் எண்டு ஒரேபிடியிலை நிண்டுட்டுது. சரி விரும்பியிட்டுதுகள். செய்து வைக்க முதல், அவற்றை பேர் ஊரை விசாரிப்பம் எண்டு வெளிக்கிடத்தான்..... அவர் பாத்தார் இதுக்குப் பிறகு இங்கினை இருந்தா இவவின்ரை உறவுகள் துருவித்துருவி எதாவது கண்டுபிடிச்சுக் கிளறினாலும் கிளறிப்போடுவினம் எண்டுபோட்டுத்தானோ என்னமோ, உடன முன்னூறு நானூறு கிலோ மீற்றருக்கு அப்பால அந்தப் பிள்ளையை கூட்டிக்கொண்டுபோய் சேத்துப் போட்டார்.

காலங்களும் உருண்டோடி ஐஞ்சு வருசத்துக்குப் பிறகு இப்பதானே ஊரிலையும் இவரை நம்பி மனிசி பிள்ளையள் இருக்கெண்ட விசயம் வெளியில வந்திருக்கு! அங்கை அதுகள் இவர் உழைச்சனுப்பி, தங்களுக்கு ஏதாவது வழி வகை பண்ணுவாரெண்டு இலவுகாத்த கிளி போல காத்துக் கொண்டிருக்க, இங்கை இவர் நடந்து கொள்ளுறதைப் பாருங்கோவன். ஏதோ தங்கட சந்தோசங்கள் மட்டும் தீரந்தாக்காணுமெண்டு நினைக்கிற இப்பிடியானதுகளை என்ன செய்யிறது? கோழிக்கு கனவிலையும் ஏதோ எண்ணம் எண்ட கணக்கா, செக்குமாடு மாதிரி எங்க கொண்டுபோய் விட்டாலும் சுத்திச்சுத்தி கடைசியா அங்கைதானே வந்து சேருங்கள். பேய்க்கு வாழ்க்கைப்பட்டா புளியமரத்தைக் கட்டிப்பிடிச்சுக்கொண்டு அழவேணுமெண்டு சொல்லுறவை இப்பிடியானதுகளுக்கு வாழ்க்கைப்பட்டுட்டு என்னத்தைக் கட்டிப்பிடிச்சு அழுகிறதாம்? விதைக்கிறது நெல்லாய் இருந்தாலும் அங்கங்கை களையள் முளைக்கிற மாதிரி, இப்பிடியான நெருஞ்சி முள்ளுகளும் சமுதாயத்திலை இன்னும் அழிஞ்சு போகாம வேர்விட்டு வளரத்தானே செய்யுது. ஏதோ இந்த மாதிரி வேதனையள் இனியும் தொடராமல் இதோட முடிஞ்சுபோச்சுதெண்டா எப்பன் ஆறுதல்தான் பாருங்கோ.

பத்துப்பொருத்தம் பாத்து, பத்தூரும் கூடிச் செய்து வைச்சாலும் மாசத்துக்கை, வருசத்துக்கை பிரிஞ்சு போறதுகளைவிட, ஒரு பொருத்தம் எண்டாலும் மனசு இணைஞ்சு விரும்பிப்போறது நல்லதுதானே. ஆனா விரும்பிறது சினிமாத்தனமா இருக்கக் கூடாது பாருங்கோ. விடிஞ்சா பொழுதுபட்டா வீடுவளிய 'நீ இங்கு நலமே... நான் அங்கு நலமா..?' எண்டு கோடம்பாக்கத்தைச் சுத்திப் பாக்கிறதுதானே இங்கத்தைய வாழ்க்கையா இருக்குது. சுத்திப் பாக்கிறவை உதுகளை பாக்கிறதோட முடிஞ்சு போனா பறுவாயில்லை, சில இளசுகள் தங்களுக்கும் அப்பிடியொரு வாழ்க்கை அமைய வேணுமெண்டெல்லோ கற்பனையைப் பண்ணித் துலைச்சுப் போடுதுகள்.

அண்டைக்கு இங்கினையொரு 'வீடியோ' கடையிலதானாக்கும் வாடகைக்கு எடுத்த கொப்பி திரும்பி வரேக்கை அதுக்கை கடிதமும் வைச்சு வருகுதாம். ஆடிக்காத்திலை அம்மியே பறக்குமெண்டேக்கை உந்த சினிமாப் புயலிலை மாட்டுப்பட்டு அதுகள் எந்த மட்டிலை நிக்கிறது? அழகையும் ஆடம்பரத்தையும் கண்டு மயங்கிப் போற வயசுதானே இது. மயங்கிறதுதான் மயங்கிறியள், வேலியிலை போன ஓணானை மடியிலை பிடிச்சுக் கட்டின கதையாட்டம் இருக்காம கொஞ்சம் நிதானமா மயங்கினால் பின்னாடி நிம்மதியா இருக்கலாம் பாருங்கோ.

இந்தக் கதை வந்த இடத்திலைதான் அவரொருத்தர் சொன்னார். இதெல்லாம் சினிமாத்தனம் இல்லையாம், உலக நாகரிகங்களோட நாங்களும் வளர்ச்சியடையச் செய்யிற முயற்சிதானாம் இதெண்டு. நாங்களும் நாகரிகத்திலை

> **கொஞ்சம் பொறுங்கோ... அவற்றை மனிசிக்கு விசயம் தெரியவரவே ஐஞ்சு வருசம் செண்டிருக்கு! உங்களுக்கு தெரிய வர ஒரு ஐஞ்சு நிமிசமெண்டாலும் வேண்டாமோ.....?**

வளர்ச்சியடைய வேணுமெண்டு நினைக்கிறதிலை தப்பில்லை. ஆனால் உதுகளைவிட அறிவில, விஞ்ஞானத்திலை இன்னும் எத்தனையோ நல்ல விசயங்களில நாங்கள் இன்னும் நிறைய வளர்ச்சியடைய வேண்டிக்கிடக்கு. முதலில அதுகளிலை வளர்ச்சியடையப்பாப்பம். அதுகளில முன்னுக்கு வந்தா, நாகரிகம் தானா முன்னுக்கு வந்திடும் எண்டுதான் நான் நினைக்கிறன். நீங்கள் என்ன நினைக்கிறியளோ....?

**அருமைத்தம்பி**




**க.தயாபரன் – ஈஸ்ட்காம், லண்டன்**

*கொழும்பில் தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கைது செய்யப்படும்போது, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூடி மௌனமாக இருப்பதேன் குப்தனாரே?*

தமிழ் மக்கள் இவ்வாறு கைது செய்யப்படுவதற்கு அடிப்படையாக இருக்கும் அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு கை உயர்த்திய அவர்கள், இதற்கு எதிராகக் குரல் கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பது, பூனையிடம் எலிகள் கொல்லப் படுவதற்கு எதிராகக் குரல் கொடுக்கும்படி கேட்பதற்கு ஒப்பாகும்.

**ப.செந்தில் – டோட்முன்ட், ஜேர்மனி**

*கிருசாந்தி வழக்கின் முதல் எதிரி தப்பி ஓடியது எதைக் காட்டுகிறது?*

வீட்டில் இருக்கும் தமிழ் மக்களுக்கு இல்லாத சுதந்திரம், காவலில் இருந்து தப்பிச் செல்லும் அளவுக்கு அவர்களுக்கு நிறையவே இருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

**மு. மலர்விழி – பலர்மோ, இத்தாலி**

*சிறீலங்காவின் அரச வங்கிகளுக்கு அனுப்புகின்ற பணம் தமிழ் மக்களை அழிக்கும் யுத்தத்திற்கு பயன்படுத்தப் பட்டு வருகின்றதா?*

நிச்சயமாக. சிறீலங்கா அரச வங்கிகளில் போடப்படும் பணம் ஏதோ ஒரு வகையில் சிறீலங்காவின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கு உதவுகிறது. அவ்வாறு பொருளாதாரம் தூக்கி நிறுத்தப்படும்போது அரசாங்கம் யுத்தத்திற்குத் தேவையான நிதியைப் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது.

**க. அமலசுதன் – பாரிஸ் 18, பிரான்ஸ்.**

*ஐரோப்பாவில் நம்மவர்கள் 10% வட்டிக்குப் பணம் கொடுக்கின்றார்களாமே உண்மையா?*

உண்மைதான். சுவிசில் இளைஞர் ஒருவருக்கு அவசரமாகப் பணம் தேவைப்பட்டபோது 100 பிராங்கிற்கு 10 பிராங் வட்டி அதாவது வருடத்திற்கு 100 பிராங்கிற்கு 120 பிராங் வட்டி எனும் வீதத்தில் ஒருவர் பணம் கொடுத்திருக்கிறார்.

**இரா.கண்ணபிரான் – பேர்லின், ஜேர்மனி**

*ஈழமுரசின் நோக்கம் என்ன குப்தனாரே?*

புலம்பெயர்ந்த சூழலில் தமிழ் மக்களின் சுய அடையாளத்தைக் காக்க உதவுவது. தாயக விடுதலைச் செயற்பாட்டை நோக்கி புலம்பெயர்ந்த மக்களை உணர்வுபூர்வமாக அணி திரட்டுவது.

**வி.மங்கை – பேர்ண், சுவிஸ்**

*சந்திரிகா அம்மையாரின் 'தீர்வுப்பொதி' என்னாச்சு குப்தனாரே.*

அது ஆற்றில் போட்ட உப்பு மூட்டை போலாச்சு.



பிரான்ஸ் தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தின்

## வீடியோ மலர்

பிரான்ஸ் தமிழர் கலை பண்பாட்டுக்கழகம் இலைமறை காயாக இருக்கும் புகலிடக் கலைஞர்களை ஊக்குவிக்கும் விதத்திலும் தரமான கலைப் படைப்புக்களை வெளிக் கொணரும் விதத்திலும் வீடியோ மலர் ஒன்றை வெளியிடவுள்ளது.

இவ் வீடியோ மலரில் பங்குகொள்ள விரும்பும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், தொழில்நுட்பத்துறை சார்ந்தோர்கள் அனைவரையும் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி



தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
341, Rue des Pyrenées,
75020 Paris.

## கவிஞர்களுக்கான கலந்துரையாடல்

பிரான்ஸ் தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் கவிஞர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடாத்த தீர்மானித்துள்ளது. இக் கலந்துரையாடலில் ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

காலம்: 26.04.1998 ஞாயிறு பிற்பகல் 6 மணி
இடம்: தமிழ்ச்சோலை மண்டபம்
26, Rue du Département, 75018 Paris.
Métro: La Chapple.

மேலதிக தொடர்புகளுக்கு: 0143581142

## டோட்முண்ட் பிறைட்டன் வீடியோவின்
## சித்திரை புதுவருட திரை வெளியீடுகள்

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்.

இளைய தளபதி விஜய், ரம்பா,
தேவயானி, மணிவண்ணன்
நடிப்பில்

**நினைத்தேன் வந்தாய்**

**10.04.98 வெள்ளி**
**13.04.98 திங்கள்**
**பி.பகல் 2.30 மணி**





சூப்பர் ஆக்டர் கமல்ஹாசன்,
நடனப்புயல் பிரபு, ரம்பா, சௌந்தர்யா
நடிப்பில்

**'காதலா காதலா'**

**11.04.98 சனி**
**12.04.98 ஞாயிறு**
**பிற்பகல் 2.30 மணி**

**THEATER CAMERA MALLINCKROD Str 279,**
**44147 Dortmund திரையில் காண்பிக்கப்படும்.**

**பிறைட்டன் ஸ்தாபனத்தின் சித்திரை புதுவருட சிறப்பு மலிவு விற்பனை இம்மாதம் 4-ம் திகதிமுதல் 18-ம் திகதிவரை**

புதிய டிசைன்களில் 22 கரட் சிங்கப்பூர் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
1 பவுண் 185 D.M
நிறைகுடசெற், டிரே உட்பட 9 உருப்படியுடன் 29.D.M
ஓடியோ கசட் 1.95 D.M முதல் C.D க்கள் 5.90 D.M முதல் ஐங்கரன்
இசைத்தென்றல் பாகம் 1 முதல் 34 வரை அனைத்தும் மலிவு விலையில்

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**Brightan Jewellery, Textiles Video Asia Shop**
**Oestermarsch 27, 37 44145 Dortmund.**
**Tel: 0231 -819431 -838703 Fax 0231-811858**



## Biel Seelland தமிழ்ச் சிறுவர் பாடசாலைகள்
## இணைந்து வழங்கும்

# செஞ்சோலைக் கலைமாலை



* அமைதி வணக்கம்
* எழுச்சி கானங்கள்: சுவிஸ் கலை பண்பாட்டுக் கழகம் -
* எழுச்சி நடனங்கள்
* சிறுவர் சிறுமியர் பேச்சுக்கள்
* கவிதை: 'விடுதலையாக வேண்டும்'
* சிறப்புரை
* வில்லுப்பாட்டு
* பேச்சு: தமிழீழ விடுதலைப் போராட்டமும் புலம்பெயர்ந்த நாடுகளில் பெண்களின் பங்களிப்பும்
* சிறுவர் நிகழ்ச்சி: பீல் தமிழ்ச் சிறுவர் பாடசாலை மாணவ, மாணவிகள்
* சிறுவர் நிகழ்ச்சி: அன்னைபூபதி சிறுவர் பாடசாலை மாணவ, மாணவிகள்
* நாடகம்: 'சிதறிய கோலங்கள்' (சுவிஸ் நாடுதழுவிய போட்டியில் முதலாமிடம் பெற்ற நாடகம்)

**காலம்: 18.04.1998 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி**
**இடம்: Paulus Kirche Blumenrain 24, 2503 Biel**
பீல் புகையிரத நிலையத்திலிருந்து Vorbolzli செல்லும் 1ம் இலக்க பஸ்சில் ஏறி 3வது தரிப்பிடத்தில் (Baren hof) இறங்கவும்.
**தொடர்புகள்: 032/385 1450 - 032/373 5936**






# எங்கும் கிடைக்கிறது







*Marketed & Distributed by*
**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 764 5200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*

BHASKY




போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# தலைமுறை இடைவெளியும்

## இனவாதம் குறித்த குழந்தைகளின் பார்வையும்

பிரான்சில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்ட கட்சியான தேசிய முன்னணி வளர்ச்சியடைந்து வரும் நிலையில் 'என் மகளுக்கு விளங்கப்படுத்திய இனவாதம்' (Le racisme explique à ma fille) என்ற நூலை எழுதிய தாகர் பென் ஜெலோன் (Tahar ben jelloun) என்ற எழுத்தாளர் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரை பிரான்சிலுள்ள முக்கியமான 15 கல்லூரிகளுக்குச் சென்று 11க்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட பல்வேறு இனங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் இனவாதம் தொடர்பான அவர்களது பார்வையையும் அவர்களது பெற்றோர்களுக்கும் அவர்களுக்குமுள்ள தலைமுறை இடைவெளியையும் அவர்களுடைய வார்த்தைகளால் வெளிக்கொணரும் விதத்தில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். Le Monde பத்திரிகையில் வெளியாகியுள்ள இந்தக் கட்டுரை ஐரோப்பிய சூழலில் வாழும் தமிழ் பெற்றோர்கள் படிக்க வேண்டிய ஒன்றாகும்.

கிளேமென்சோ கல்லூரியில் 6-ம் வகுப்பில் படிக்கும் 11 வயதான சாரா என்ற அரேபியச் சிறுமியுடன் இனவாதம் பற்றி உரையாடிய போது அரேபிய மாணவர்கள் அதிகம் உள்ள பிரெஞ்சுப் பாடசாலையில் படிக்கும் அரேபிய மாணவர்களுடைய பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை அரேபிய மாணவர்கள் அதிகம் படிக்காத வேறு பள்ளிகளுக்கு மாற்றுவதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என்று கேட்டாள்?

இந்தக் கேள்வியால் எனக்குள் எழுந்த ஆச்சரியத்தை அவளுக்குத் தெரியப்படுத்திய பின் சுய அடையாளம் பற்றிய பயத்தை இந்தச் சிறுமிக்கு எப்படி விளங்கப்படுத்துவது என்ற ஒரு கேள்வி என்னுள் எழுந்தது.

> ***'என்னுடைய அப்பாவோடு என்னால் வாதாட முடியவில்லை. அவரால் மகிரேபியர்களின் தொல்லையை சகித்துக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் எங்களது கராஜுக்கு முன்பாக தங்களது கார்களை எப்பொழுதும் நிறுத்துகின்றார்கள். இது எங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது.***

பிரெஞ்சு சமூகத்துடன் ஒன்றி வாழ விரும்பும் (அந்தப் பெற்றோர்களுடைய) ஆசை பற்றி அந்தச் சிறுமிக்குத் தெரியப்படுத்த விரும்பினேன். 'இந்தப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் பிரெஞ்சு சிறுவர்கள் போல் இருக்க வேண்டும் என்ற ஆசை உடையவர்கள். ஏனைய அரேபியக் குழந்தைகளிடமிருந்து அவர்களைப் பிரித்துவிடுவதன் மூலம் சீரழிவுக் கலாச்சாரத்திலிருந்து தங்கள் குழந்தையைக் காப்பாற்றிவிடலாம் என நினைக்கிறார்கள்' என்று கூறிய என்னை இடைமறித்த சாரா- 'குழந்தைக்கு தன்னுடைய பாடசாலையை விட்டுப்போக மனமில்லையே. அதனுடைய பெற்றோர்கள் இனவாதிகள் என்றாள். இந்த உரையாடலின் போது உடனிருந்த அவளது வகுப்பாசிரியர் இது அவளது சொந்தப் பிரச்சினையும் கூட என்றார்.

குழந்தைகளால் கேட்கப்பட்ட அத்தனை கேள்விகளுக்குள்ளும் சாராவின் கேள்வி நான் சற்றும் எதிர்பார்க்காததும் வித்தியாசமானதுமாக இருந்தது.

நான் சந்தித்த பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் இனவாதக் கருத்துக்கள் உடையவர்களாகவும் தேசிய முன்னணியுடன் (FN) தொடர்புடையவர்களாகவும் இருப்பதைக் கண்டு மனமுடைந்துபோய் அவர்களை கட்டுப்படுத்த முடியாமல் தமது கவலைகளை என்னிடம் கொட்டியதைக் கண்டு பரிதவித்துப்போனேன்.

'அவர்களுடைய வளர்ப்பில் நாங்கள் அதிக கவனம் செலுத்தியும் இனவாதத்துக்கு எதிரான இயக்கங்களுக்கு எப்பொழுதும் ஆதரவாக நாங்கள் இருந்தும் இப்படி எங்கள் பிள்ளைகள்... என்று பல பெற்றோர்கள் அதிர்ச்சியுடன் கூறினார்கள்.

பாரிசிலுள்ள புத்தக விற்பனை நிலையத்தில் நான் சந்தித்த தாய் ஒருவர் நானும் என் கணவரும் இப்பொழுது பெரும் பிரச்சினைக்குள் வாழ்கின்றோம். எங்களுடைய 15-ம், 17-ம் வயது நிரம்பிய இரண்டு மகன்களும் மகிரேபியர்களால் (Maghrebiens அல்ஜீரியன், மொரேக்கன், துனிசியன் முதலான நாடுகளைச் சேர்ந்தவர்கள்.) அடிக்கடி தாக்கப்படுகின்றார்கள். நாங்கள் எவ்வளவு தான் எங்கள் மகன்களுக்கு இதைப் பொதுமைப்படுத்தக்கூடாது என்று விளங்கப்படுத்தியும் அவர்கள் தங்களுக்குள் மகிரேபியர்களுக்கு எதிரான இனவாதத்தை வளர்த்துக் கொள்கின்றார்கள். இதற்கு என்ன செய்வது' என்று கேட்டார்.

இதே கேள்வி Bourges பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவன் ஒருவனால் வேறுவிதமாக என்னிடம் கேட்கப்பட்டது. 'என்னுடைய அப்பாவோடு என்னால் வாதாட முடியவில்லை. அவரால் மகிரேபியர்களின் தொல்லையை சகித்துக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் எங்களது கராஜுக்கு முன்பாக தங்களது கார்களை எப்பொழுதும் நிறுத்துகின்றார்கள். இது எங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. இது அந்த மாணவனது வாதம்.

Reims பகுதியில் ஒரு ஆசிரியை மகிரேபிய மாணவர்கள் எனக்கு விளங்கக்கூடாது என்பதற்காக தங்களுக்குள் அரேபிய மொழியில் கதைத்துக்கொள்வது எனக்கு எரிச்சலாக இருக்கிறது. இதற்கு என்ன செய்வது? என்று கேட்டார்.

அவரது கல்லூரியில் படிக்கும் கமிய் என்ற 14 வயது மாணவி 'சகிப்புத்தன்மைக்கு ஒரு அளவில்லையா? பக்கத்து வீட்டு மகிரேபியர் தனது 14 வயது மகளிடம் திருமணம் செய்து கொள்ளும்படியும் தலைக்கு முக்காடு போடும் படியும் கட்டாயப்படுத்தும்போது இதற்கு எப்படி முகம் கொடுப்பது?' என்று கேட்டபோது மலிக்கா என்ற மாணவி பிரான்சில் இப்படி எல்லாம் கட்டாயப்படுத்த முடியாது என்னை என்னுடைய அப்பா இப்படிக் கட்டாயப்படுத்தினால் நான் என்னுடைய தோழியின் வீட்டில் போய் ஒழிந்து கொள்வேன்' என்றாள். (இந்த இருவரும் பிரெஞ்சுக்காரர்கள்)

Bourge என்ற இடத்திலுள்ள கல்லூரி ஒன்றில் பணிபுரியும் ஹட்ஜியா என்னும் இளம் பெண், எனக்கும் குழந்தைகளுக்கும் இடையில் இடம்பெறும் உரையாடலுக்கு நடுவில் குறுக்கிடுவதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு 'பெற்றோருக்கு விளங்கப்படுத்திய இனவாதம்' என்ற நூலை எப்போது எழுதப் போகின்றீர்கள் என்று கேட்டாள். இஸ்லாமியர் அல்லாத ஒரு ஐரோப்பியரை தான் மணந்து கொள்வது பற்றி தனது பெற்றோருக்கு புரியவைப்பதில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி அவர் எடுத்துக் கூறினார். 'என்னைப் பொறுத்தவரை என்னுடைய பெற்றோர்கள் இனவாதிகள். என்னுடைய பெற்றோருக்கு வெளிநாட்டவர்கள் என்றால் பயம். என்னுடைய பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக நான் விரும்புகின்றவர் முட்டாள் தனமாக என்னுடைய மதத்துக்கு (இஸ்லாத்துக்கு) மதம் மாறுவதை நான் விரும்பவில்லை' என்றாள்.

> ***'முக்கியமாக இனவாதம் கறுப்பர்களாலும், மகிரேபியர்களாலும் வெள்ளையர்களை நோக்கி மேற்கொள்ளப்படுகிறது. ஒரு பிரெஞ்சுக்காரன் ஒரு அரேபியனைக் கொன்றுவிட்டால் அது பற்றி இரண்டு கிழமையாகக் கதைப்பார்கள். ஆனால் அரேபியன் ஒரு பிரெஞ்சுக்காரனைக் கொன்றுவிட்டால் இரண்டு மூன்று நாட்களுக்குத்தான் கதைப்பார்கள்'***

மரியம்- உயர் கல்லூரியில் (Lycée) படிப்பவள். அல்ஜீரியப் பெற்றோருக்கு பிரான்சில் பிறந்தவள். துலுசில் (பிரான்சின் தென்பகுதி) வாழும் தனது அண்ணன் நல்ல வேலையும், அமைதியான வாழ்க்கையும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தன்னுடைய பெயரை மாற்றியதைப் பற்றிக் கூறிவிட்டு சிறிது மௌனத்திற்குப் பின் ஆனால் அது அவனுடைய வாழ்க்கையை எந்த விதத்திலும் மாற்றவில்லை. ஏனெனில் அவனுடைய முகம். அதை அவனால் மாற்ற முடியவில்லை என்றாள்.

பிரெஞ்சு - அல்ஜீரிய திருமணத்தில் பிறந்த மலேக் என்ற குழந்தை நான் இனவாதத்திற்கு பகிடி மூலம் முகம் கொடுக்கப் பழகிக்கொண்டுவிட்டேன். என்னுடைய தங்கை அப்படியல்ல. ஒரு மனோநிலை மருத்துவரிடம் சிகிச்சை பெறுமளவிற்கு அவள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டாள்' என்று கூறியது.

ஒரு இனவாதத் தாக்குதலுக்கு எப்படி முகம் கொடுப்பது என்ற கேள்வியே அநேகமான குழந்தைகளால் கேட்கப்பட்டது.

ஐந்தாம் வகுப்பில் படிக்கும் ஓதிரே என்ற சிறுமி 'நான் இனவாதியல்ல ஆனால் சில வட ஆபிரிக்கர்கள் பிரெஞ்சுச் சட்டங்களை மதிக்கின்றார்களில்லை. அவர்கள்தான் பிரெஞ்சுக்காரர்களைப் பார்த்து இனவாதிகள் என்கிறார்கள்.' என்றாள்.

அவளது வகுப்பில் படிக்கும் லோறோன் என்ற சிறுவன் இதே அர்த்தத்தில் பேசினான். 'முக்கியமாக இனவாதம் கறுப்பர்களாலும், மகிரேபியர்களாலும் வெள்ளையர்களை நோக்கி மேற்கொள்ளப்படுகிறது. ஒரு பிரெஞ்சுக்காரன் ஒரு அரேபியனைக் கொன்றுவிட்டால் அது பற்றி இரண்டு கிழமையாகக் கதைப்பார்கள். ஆனால் அரேபியன் ஒரு பிரெஞ்சுக்காரனைக் கொன்றுவிட்டால் இரண்டு மூன்று நாட்களுக்குத்தான் கதைப்பார்கள்' என்றான்.

நான் பிரான்சில் இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள முன் 11-15 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்கள் தேசிய முன்னணி (FN) மீது கவனம் செலுத்துவார்கள் என்று நினைக்கவில்லை. இது ஒரு இனவாதக் கட்சி என்று விளங்கிக்கொண்டவர்களால் இக் கட்சியை பிரெஞ்சு ஜனநாயகம் ஏன் வளரவிடுகின்றது என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. தேசிய முன்னணி குடியரசை இல்லாமல் செய்துவிடும் குடியரசு இல்லாமல்போனால் வெளிநாட்டவர்களை வெளியேற்றும் சர்வாதிகாரம்தான் இருக்கும் என்று அநேகமான சிறுவர்கள் நம்புகிறார்கள்.

அநேகமாக மகிரேபிய குழந்தைகள் பயம் காரணமாக நிறையப் பேசினார்கள். இது இனவாதத் தாக்குதல் சம்பந்தப்பட்ட பயம் அல்ல. பிரெஞ்சு சமுதாயத்தில் தங்களுக்கு ஓர் இடம் கிடைக்குமா? என்ற பயமே. அனான் என்ற 14 வயதுச் சிறுவன் இதை என்னிடம் நேரடியாகவே கேட்டான். 'அல்ஜீரியப் பெற்றோருக்கு பிரான்சில் பிறந்து வீட்டில் அரேபிய மொழிபேசும் நான் பிரெஞ்சு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவேனா?' என்ற இந்தக்கேள்வி அரேபியப் பெற்றோர்களால் அரேபியக் குழந்தைகளிடம் இருந்து தனிமைப் படுத்தப்படும் அரேபியக் குழந்தைகள் பற்றி சாரா கேட்ட கேள்வியை ஒத்ததாக இருந்தது. பிரெஞ்சு சமூகத்துடன் ஒன்றிப்போவதற்காக தன்னுடைய பெயரை மாற்றிய மரியத்தின் அண்ணனுடைய செயலை ஞாபகப்படுத்தியது.

புலம்பெயர்ந்து வந்து பிரெஞ்சு சூழலில் வாழும் பெரும்பாலான குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடைய நாட்டில் தங்கள் எதிர்காலம் கஷ்டமானதாக இருக்கும் என்றே நினைக்கிறார்கள். அதற்காகப் பிரான்சில் இருந்தும் அதன் வரலாற்றில் இருந்தும் தாங்கள் அன்னியப்பட்டுப் போய்விடக் கூடாது என்கின்ற பயத்தில் நிறையக் கேள்விகள் கேட்டார்கள்.

***- தமிழாக்கம் சிவா - வசந்தன்***

**ஆசிரியர் குறிப்பு:**

**புலம்பெயர்ந்த சூழலில் தங்களுடைய சுய அடையாளத்தை தேட நினைக்கும் பெற்றோர்களுடைய மனோ நிலையையும் தாங்கள் வாழும் கல்வி கற்கும் பிரெஞ்சுச் சூழலில் பிரெஞ்சுச் சமூகத்தில் தங்களுக்கு ஒரு அங்கீகாரம் வேண்டும் என்று நினைக்கும் பிள்ளைகளுடைய இருத்தலுக்கான போராட்டத்தையும் குழந்தைகளது வாய்மொழிமூலம் இந்தக் கட்டுரையாளர் வெளிப்படுத்தியுள்ளார். அரேபிய மாணவர்களுடன் தன்னுடைய பிள்ளை சேர்ந்து படித்தால் கெட்டுப்போய்விடும் என்று நினைக்கும் அரேபியப் பெற்றோரும், தங்களுடைய பிள்ளை வேறு தமிழ் பிள்ளைகளுடன் கூட்டுச் சேரும் போது சாதியை முதன்மைப்படுத்திப் பார்க்கும் தமிழ் பெற்றோரும் அடிப்படையில் ஒரே குணாம்சத்தைக் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். பிரெஞ்சுச் சமூகத்தில் ஒன்றிப் போக நினைக்கும் மகிரேபிய பிள்ளைகளுடைய மனோநிலைதான் பெரும்பாலான புலம்பெயர்ந்த தமிழ்ப் பிள்ளைகளிடம் இருக்கின்றது. புலம்பெயர்ந்த சூழலில் 'தமிழர்' என்ற சுய அடையாளத்தை காத்துக்கொள்ள நினைக்கும் தமிழ்ப் பெற்றோர்கள் இந்தக் கட்டுரையை அடிப்படையாக வைத்துத் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள் நிறைய உண்டு.**


**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**
Organisation pour la Reinsertion des Tarnouls
**சேர்ஜி பொந்துவாஸ் கிளை நடாத்தும்**

**மாபெரும் ஒளிவிழா - 98**

**Fête de la lumière**

**காலம்: 09.05.98 சனிக்கிழமை பிற்பகல் 5 மணி**
**Le 09 Mai 1998 à 17 heures**

**இடம்: Maison de Quartier des Linandes - Cergy**

செங்குருதியில் நனைந்திட்ட தமிழீழ மண்ணில்
துயருறும் எம் உறவுகளுக்கு உதவிட அனைவரும்
கரம் கொடுப்போம் வாருங்கள்.

*உங்கள் சிறார்களின் கலைத்திறனைக் காண்பதற்கு*
*இதுவோர் அரிய சந்தர்ப்பம்.*

**மேலதிக தொடர்புகளுக்கு: 01 30 73 19 65**

# இந்திய அணியின் வெற்றிக்கான இரகசியம்

1997ம் ஆண்டில் எந்தவொரு டெஸ்ட் போட்டியிலும் வெற்றி கொள்ள முடியாது திண்டாடிய இந்திய அணி பலம்பொருந்திய அவுஸ்திரேலியாவை எவ்வாறு தோற்கடித்தது என்பது பற்றி பல்வேறு ஊகங்கள் எழுந்தாலும், அதன் பின்னணி, 'சுழல்பந்து வீச்சு' என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்திய மைதானங்கள் சுழல்பந்து வீச்சுக்கு உகந்தவை என்று கூறிவாக ஆராய்ந்து பார்த்தால் புரியும். ஏற்கனவே கூறியபடி பலம் பொருந்திய அவுஸ்திரேலிய சுழல்பந்து வீச்சுக்கு இந்திய துடுப்பாட்ட வீரர்கள் ஆடிய விதம் அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதிலும் குறிப்பாக, வோர்னின் பந்து வீச்சை கச்சிதமாகக் கையாண்டு ஓட்டங்களைக் குவித்த டெண்டுல்கரின் ஆட்டம். அதேபோல எதிரணியினர் பலம் என்று எதனைக் கருதினார்களோ, அதையே அவர்கள் மேல் பிரயோகிப்பதால், தங்கள் பலம் எது என்று நினைத்தார்களோ அதுதான் தங்கள் பலவீனம் என்பதனையும் நினைத்திருக்கமாட்டார்கள். இதனைத்தான் இந்திய அணி தனக்குச் சாதகமாக்கி, சுழல்பந்து வீச்சையே எதிரணிக்கு எதிராகப் பிரயோகித்தது.



பயிற்சியாளர் பொப் சிம்சனுடன் அனில் கும்பிளே

...னாலும் அவுஸ்திரேலியாவில் தான் தலைசிறந்த சுழல்பந்து வீச்சாளர் 'வோர்ன்' இருக்கிறார். அவருடன் கூடவே மார்க் வோ, றொபேட்சன் துணை இருந்தும் ஏன் அவர்களால் வெற்றிக்கனியை பறிக்க முடியவில்லை?

'முள்ளை முள்ளால்தான் எடுக்கலாம்' என்ற முன்னோரின் வாக்கு எவ்வளவு தூரம் உண்மை என்பதை சற்று விரி...

இந்திய சுழல்பந்து வீச்சாளர்களே எதிரணியில் இழந்த விக்கட்டுக்களின் அரைவாசிக்கு மேல் பெற்றனர். குறிப்பாக அனில் கும்பிளே மட்டும் 23 விக்கட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். இவர் வோர்ன் மாதிரியே 'லெக்ஸ்பின்' முறையில் பந்து வீசுபவர். இதே கும்பிளே சென்ற வருடம் விளையாடிய போது, சிறீலங்கா அணியினர் இந்திய அணிக்கெதிராக உலக சாதனையாக 952 ஓட்டங்களையும் பாகிஸ்தான் வீரர் சயிட் அன்வர் ஒருநாள் போட்டியொன்றில் உலக சாதனையாக 194 ஓட்டங்களையும் பெற்றனர். அப்படிப்பட்ட கும்பிளேயின் திடீர் திறமைக்கு ஏது காரணம் என்று சிந்திப்பவர்கள் பலர் உண்டு. இந்திய அணியின் வளர்ச்சிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்ட அவுஸ்திரேலிய முன்னாள் தலைவர் சிம்சன் அவுஸ்திரேலிய வீரர்களின் பலவீனங்களையும் அறியாமல் இருந்திருக்கமாட்டார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிகளை சந்திக்க முன் அனில் கும்பிளேயை பயிற்றுவித்தவரும் அவுஸ்திரேலியரான சிம்சன்தான். இருவரும் கடுமையான பயிற்சியில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

# டெனிஸ்

# உலக முதல் தரத்தில் சிலிநாட்டு வீரர் றியோஸ்

29.03.98 முடிவுற்ற 'Key Biscayne' டென்னிஸ் இறுதி ஆட்டத்தில் அகஸியை வெற்றி கொண்ட சிலி நாட்டு வீரர் றியோஸ் 3645 புள்ளிகளுடன் புதிதாக உலதர முதலாமிடத்திற்கு வந்துள்ளார். தொடர்ச்சியாக 102 வாரங்கள் முதலாம் இடத்தில் இருந்து வந்த அமெரிக்க வீரர் சாம்பிரஸ் 3600 புள்ளிகளுடன் 2ம் இடத்திற்கு இறங்கியுள்ளார். இம்மாற்றம் டென்னிஸ் உலகிற்கு ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கிறது. முன்னேறம் அடைந்த நாட்டு வீரர்களே அதிகமாக முதலாம் தரத்தில் இருந்துவந்த நிலை மாறி சிலி போன்ற சிறிய வளர்முக நாடுகளிலும் திறமையான வீரர்கள் உருவாகலாம் என்பதைக் காட்டுவதாக இது உள்ளது.



இதே சுற்றுப்போட்டியில் பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் வெற்றி பெற்றுள்ளார். இவரே மாட்டீனா ஹிங்கிசை தோற்கடித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தலைவரின் அபார ஆட்டம் தென்னாபிரிக்காவை வெற்றிக்கு இட்டுச்சென்றது

தென்னாபிரிக்காவுக்கும் சிறீலங்காவுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நான்காவது நாளான 30.03.98 தென்னாபிரிக்காவிற்கு சாதகமாக முற்றுப் பெற்றது. உலக சம்பியன் சிறீலங்கா தனது முதல் இனிங்சில் 303 ஓட்டங்களை பெற்றது. அணித் தலைவர் ரணதுங்க, மகாநாம, திலகரட்ணா ஆகியோர் அரைச் சதங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்காவால் 200 ஓட்டங்களையே பெறமுடிந்தது. ஆனாலும் 'குலினன்' 103 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.



சிறீலங்கா அணி தனது இரண்டாவது இனிங்சில், தென்னாபிரிக்க வீரர்களின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சகல விக்கட்டுக்கள் இழப்புக்கு 122 ஓட்டங்களையே பெற்றனர். அணித் தலைவர் ரணத்துங்க உட்பட 5 வீரர்கள் ஓட்டமேதும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முதலாவது இனிங்சை கோட்டைவிட்ட தென்னாபிரிக்கா அணி இரண்டாவது இனங்சை தக்கமுறையில் பயன்படுத்தி நான்கு விக்கட்டுக்களை மட்டும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்று, போட்டியை 6 விக்கட்டுக்களால் வெற்றிகொண்டது மட்டுமன்றி தொடரையும் 2:1 என்ற கணக்கில் வெற்றிகொண்டது. தென்னாபிரிக்க அணித் தலைவர் 'கொஞ்சே' இறுதிநாளை ஒரு ஒருநாள் பந்தயமாக்கிவிட்டு 63 பந்துகளில் 82 ஓட்டங்களைப் பெற்றார். 50 ஓட்டங்களை பெறுவதற்கு அவருக்கு 31 பந்துகளே தேவைப்பட்டது. இதனால் கபில்தேவுக்கு அடுத்தபடியாக விரைவான அரைச்சதம் குவித்தவராக புதிய சாதனையை ஏற்படுத்திவிட்டார்.

# டெஸ்ட் பந்தயங்களில் நாடுகளின் நிலைமை

இறுதியாக 31.03.98 கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், டெஸ்ட் போட்டிகளில் பங்குகொள்ளும் நாடுகள் கொண்டுள்ள தரத்தினை 'Wisden World Championship Ranking' பட்டியலினூடாக அவதானித்த போது, இந்திய மண்ணில் தோல்வியைத் தழுவிக்கொண்டாலும் தொடர்ந்தும் அவுஸ்திரேலியாவே முன்னணியில் உள்ளது.

| நாடு | பந்தயங்கள் | புள்ளிகள் | சாராசரி |
|---|---|---|---|
| 1. அவுஸ்திலேலியா | 14 | 23 | +9 |
| 2. தென்னாபிரிக்கா | 14 | 18 | +4 |
| மேற்கிந்திய தீவுகள் | 13 | 17 | +4 |
| 4. பாகிஸ்தான் | 13 | 15 | +2 |
| 5. இந்தியா | 14 | 15 | +1 |
| 6. சிறீலங்கா | 16 | 13 | -3 |
| இங்கிலாந்து | 14 | 11 | -3 |
| 8. சிம்பாவே | 10 | 4 | -6 |
| 9. நியூசிலாந்து | 16 | 8 | -8 |



அவுஸ்திரேலிய அணி

# அசாருதீன் புதிய உலக சாதனை



01.04.98 நடைபெற்ற இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டிகளில் கலந்துகொண்ட இந்திய அணியின் தலைவர் அசாருதீன் 247 ஒருநாள் பந்தயங்களில் கலந்துகொண்டு, புதிய உலக சாதனை படைத்தார் இதற்கு முன்னர் அலன் போர்டர் 273 போட்டிகளில் விளையாடியுள்ளார். இப்போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றது.

இந்தியா அணி 5 விக்கட்டுக்கள் இழப்பிற்கு 309 ஓட்டங்கள். (அசாருதீன் 82, ஜடஜா 105, கனிட்கர் 57).

அவுஸ்திரேலிய அணி சகல விக்கட்டுக்கள் இழப்பிற்கு 268 ஓட்டங்கள். (பிவேன் 65, கிளிக்றிஸ் 61)

டெண்டுல்கர் 32 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுக்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: பொன். தாமோதரம்



விற்பனைக்கு

முடிதிருத்தும் இடம்

Nena Salon

சூரிச் கிரைஸ் 5–ல் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு: 01/2715872




## ஆயுத வணிகர்களின் தேடல்

அமெரிக்க இராணுவ தளபாட உற்பத்தியாளர்கள் அமெரிக்க, ஐரோப்பிய கூட்டு இராணுவ அமைப்பான நேட்டோவினை விரிவாக்கும் முயற்சிகளுக்காக பலமான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். மேற்கு ஐரோப்பாவுடன் மட்டுப்பட்டிருந்த நேட்டோவை போலந்து, ஹங்கேரி, செக்கோசிலவாக்கியா ஊடாக ருஸ்யாவின் எல்லைவரை விரிவாக்கும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் திட்டத்திற்கு ஏன் இந்த இராணுவ தளபாட உற்பத்தியாளர்கள் உதவுகின்றனர்?

நேட்டோ விதிகளின் பிரகாரம், புதிதாக இவ்வமைப்பில் சேரும் உறுப்பினர் நாடுகளைத் தமது இராணுவத்தை நேட்டோ தராதரத்திற்கு கொண்டுவர வேண்டும். அவ்வாறு கொண்டுவருவதானது பல பில்லியன் டொலர்களை அமெரிக்க இராணுவ தளவாட உற்பத்தியார்களுக்குச் செல்வமாகத் திரட்டித் தரும். இதுவே இவ் ஆயுத வியாபாரிகள் பல மில்லியன்களை கொட்டி கிளின்டனின் திட்டத்தை அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரிக்க வேண்டும் எனப் பிரச்சாரம் செய்வதற்கான காரணமாகும்.

லொக்கீற் எனும் அமெரிக்க நிறுவனத்தின் யுத்த விமானங்களான F-16 ன் விலை 20 மில்லியன் டொலர்கள் ஆகும்.

F-18 ன் விலை 40 - 60 மில்லியன் டொலர்கள் ஆகும்.


நேட்டோ விரிவாக்கத்திட்டத்தின்படி 100-150 வரையிலான யுத்த விமானங்களை வாங்கவேண்டியுள்ளது.

தமது ஆயுத வியாபாரத்திற்கான பிரச்சாரத்திற்கு 6 பிரதான ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் 51 மில்லியன் டொலர்களை 2 வருடங்களில் செலவழித்துள்ளன.

❀ ❀ ❀

## ஜப்பானின் பேரிழப்பு

1980 களில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பல பில்லியன்களை அமெரிக்க வங்கிகள் முதலிட்டிருந்தன. துரிதமாக வளர்ச்சியடையும் நாடுகளில் முதலீடு துரிதமாக செல்வம் திரட்டும் பொருளாதார பேராசையுடன்தான் இம் முதலீடுகள் அமைந்திருந்தன.




ஆனால் அங்கு ஏற்பட்ட நாணயமாற்று குழப்பம் அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு பெரும் நட்டத்தை கொடுத்தது.

இந்த அனுபவத்துடன் கிழக்காசிய நாடுகளில் முதலிட்ட அமெரிக்க நிறுவனங்கள் அவதானத்தை கடைப்பிடித்தன. தென்கொரியாவிலும், மலேசியாவிலும், இந்தோனேசியாவிலும், தாய்லாந்திலும் ஜப்பானிய, ஐரோப்பிய வங்கிகள் பில்லியன்கள் முதலிடும்போது அமெரிக்கா சற்றுப் பின்வாங்கியது.

இன்று ஜப்பான் 97.2 பில்லியன் டொலர்களை இன்று இழந்து நிற்கும்போது 23.8 பில்லியன்களே அமெரிக்காவின் இழப்பாகும். 75% ஜப்பானிய வங்கிகள் கிழக்காசிய நாடுகளின் தோல்வியினால் மூடப்படவேண்டிய ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இவ் ஆபத்து ஜப்பானிய பொருளாதாரத்தையே அச்சுறுத்த ஆரம்பித்துள்ளது.

❀ ❀ ❀

## தங்கம் - வெள்ளி எதிர் எதிர் திசையில்

உலகின் தங்க விலை தொடர்ச்சியாக வீழ்ச்சி அடையும் அதேவேளை வெள்ளி உலக சந்தையில் விலை உயர்வை அடைந்து வருகின்றது.

36.5% கைத்தொழில் பாவனையையும், 28% புகைப்படத்திற்கான பாவனையும் கொண்டுள்ள வெள்ளிக்கான தேவை அதிகரித்து வருகின்றது. ஆனால் தங்கம் 85.3% வெறும் ஆபரண பாவனையையே கொண்டுள்ளது. உலக தங்க கையிருப்பு விலைவீழ்ச்சியை தடுக்கும் அளவிற்கு அதிகமாக இருப்பதால் இதன் விலை தொடர்ந்து வீழ்ந்து வருகின்றது.

❀ ❀ ❀

## கோக்கின் சர்வதேச வியாபாரம்

முதலாளித்துவ சந்தையின் செல்லப்பிள்ளை 'கொக்கோகோலா'. அனைத்து தேச எல்லைகளையும் தாண்டி உலகெங்கும் வியாபித்துள்ள கொக்கோ கோலா, உலக சந்தையின் செல்வம் திரட்டும் போட்டியில் ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் சராசரி மனிதனின் கோக் பாவனை அதிகஅளவு காணப்படுகிறது. சீனா இந்தியா மற்றும் பல ஆபிரிக்கநாடுகளில் கோக்கின் பாவனை குறைவாக உள்ளது.

உலகின் சராசரி கோக் பாவனை கூடிய நாடுகள் பொதுவாக செல்வந்த நாடுகள் ஆகும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டில் ஐ.நா. சமூக மேம்பாட்டு குறியீட்டுக்கும், கோலா பாவனைக்கும் இடையே உள்ள சமன்பாடு, கல்வி, சுகாதாரம், செல்வம் என்பன கூடிய நாட்டில் கோலா பாவனை கூடுதலாக உள்ளதாக கூறுகின்றது. இன்னுமொரு கணிப்பீடு, கோலா உபயோகம் ஜனநாயகம் நிலவும் இடம் எங்கும் அதிகரித்து வருவதாக கூறுகிறது.

ஆனால், அடிப்படையில் கோலா பாவனை அதிகரிப்புக்கும் செல்வத்திற்கும் இடையே உள்ள உறவு முதலாளித்துவ பொருளாதார சந்தை அமைப்பை சார்ந்ததே என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

❀ ❀ ❀

## நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்பேட் | 1.85 | 3.05 | — | 0.30 | 1.21 |
| சூரிச் | 1.52 | 2.53 | 0.83 | 0.25 | — |
| பாரிஸ் | 6.19 | 10.27 | 3.35 | — | 4.06 |
| லண்டன் | 0.60 | — | 0.32 | 0.09 | 0.39 |
| நியூயோர்க் | — | 1.66 | 0.54 | 0.16 | 0.66 |
| பம்பாய் | 39.46 | 65.33 | 2.37 | 6.37 | 25.88 |
| கொழும்பு | 63.30 | 103.15 | 33.73 | 10.05 | 40.86 |

## புத்தக வணிகம்

ஜேர்மனியின் Bertelsmann நிறுவனம் கடந்த வாரம் அமெரிக்காவை ஆச்சரியத்தில் உறைய வைத்தது. 1.4 பில்லியன் டொலர்கள் செலவில் உலகின் புகழ்பெற்ற முதல்தர அமெரிக்க Random புத்தக நிறுவனத்தை இரகசிய பேச்சுவார்த்தைகள் மூலம் கொள்முதல் செய்து ஜேர்மனியர்கள் அமெரிக்க வணிக உலகை ஆச்சரியப்படவைத்தனர். இன்று இவ் ஜேர்மன் நிறுவனமே அமெரிக்காவின் 1-வது தலைசிறந்த பதிப்பகமாகத் தரமுயர்ந்துள்ளது.

### விலைப் பங்கீடு

சில்லறை வியாபாரங்களே புத்தக விற்பனையின் பெரும்பகுதி இலாபத்தை சம்பாதிக்கின்றார்கள் என்கிறது சமீபத்தைய கணிப்பு. Time சஞ்சிகை வெளியிட்ட விலை பங்கீடு பின்வருமாறு அமைகிறது


| | |
|---|---|
| உதாரண விலை | – 25 டொலர்கள். |
| சில்லறை வியாபாரம் | – 12 டொலர்கள் |
| எழுத்தாளர் | – 5 டொலர்கள் |
| உற்பத்தியாளர் செலவு (அச்சகம்) | – 2 டொலர்கள் |
| சந்தைப்படுத்துபவர்கள் | – 1 டொலர் |
| விற்கப்படாதது | – .50 டொலர்கள் |
| பதிப்பகம் | – 1 டொலர் |
| பிற | – 3.5 டொலர்கள் |

❀ ❀ ❀


## இலத்திரனியல் வர்த்தகம்

இந் நூற்றாண்டில் இறுதியில் 300 மில்லியன் பாவனையாளர்கள் இன்ரர்நெட் ஊடாக வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்கிறது 'அக்டிங்மீடியா' எனும் நிறுவனம்.

அ. இன்ரர்நெட் ஊடான பாவனையை அதிகரிக்கும் விதத்தில் நிகழ்ச்சிக்கோவை ஊக்குவிப்பு அதிகரிப்பு (கண்டங்கள் வாரியாக)




ஆ. இன்ரர்நெட் பாவனையாளர் அதிகரிப்பு




❀ ❀ ❀


ஈழமுரசு ஜேர்மனி நடாத்தும் ஐரோப்பா தழுவிய நாடகப்போட்டி

ஐரோப்பா வாழ் தமிழ் கலைஞர்களிடையே நாடகக் கலையை ஊக்குவிக்கும் வகையில் ஐரோப்பா தழுவிய நாடகப்போட்டியொன்றினை ஈழமுரசு பத்திரிகையின் ஜேர்மனிப் பணியகம் நடாத்தவுள்ளது. இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் தனிக்குழுக்கள் அல்லது கழகங்கள் எதிர்வரும் 01.05.98-ற்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள். நாடகப்போட்டி பற்றிய மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொள்வதற்கு கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

N. Kathirgamanathan - Branden Burger Str -13, 40880-Ratingen, Germany.

தொலைபேசி எண்: 02102–475633

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

40




40

| | |
|---|---|
| இந்தியா | 36 நிமிடம் |
| கனடா | 100 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் |
| ஹொங்கொங் | 45 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை | 40 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 நிமிடம் |
| அல்ஜீரியா | 55 நிமிடம் |
| மொரோக் | 55 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) 80 நிமிடம் | |

## இலங்கைக்கு 40 நிமிடங்கள்

(10 ஏப்ரல் 1998 வரை)

**GANANAM**
TELECOM CENTERS
195, Rue du Fg.Saint Denis
75010 PARIS, FRANCE
Tel: 01 46 07 09 36
Fax: 01 46 07 00 14
Mo : La Chapelle / Gare du Nord

TELECOM CENTERS
13, Rue de Suez
75018 PARIS
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
Mo: Chateau Rouge

TELECOM CENTERS
175, Rue de St.Maur
75011 PARIS
Tel: 01 43 38 22 98
Mo: Belleville

TELECOM CENTERS
38, Rue de Belleville
75020 PARIS
Tel: 01 40 33 36 72
Mo:Concourt

TELECOM CENTERS
83, Rue du Fg.St.Denis
75010 PARIS
Mo: Chateau d'eau

TELECOM CENTERS
107 Av de Clichy
75017 PARIS
Tel : 01 42 63 63 25
Mo: La Fourche ou Brochant

TELECOM CENTERS
120 Bd de la Chapelle
75018 PARIS
Tel: 01 44 92 83 32
Mo: Barbes Roche chouart

TELECOM CENTERS
261 Rue de Paris
93100 MONTREUIL
Tel: 01 43 60 86 62
Fax: 01 43 60 86 65
Mo: Mairie de Montreuil

TELECOM CENTERS
78 Bd Bd Barbes
75018 PARIS
Tel: 01 55 79 75 11
Mo: Marcadet Poissonier

TELECOM CENTERS
33, Rue de Menilmontant
75020 PARIS
Tel: 01 40 33 41 74
Mo: Menilmontant

வெகு விரைவில்

சுவிஸ், லண்டனில்
எமது சேவை ஆரம்பமாகின்றது!

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

# பிரித்தானியாவில் வெடிக்க இருந்த குண்டு வட அயர்லாந்தில் கண்டு பிடிக்கப்பட்டது

(டுப்ளின் - ஏப்ரல் 1)

பிரித்தானியாவிலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த இடம் ஒன்றில் வெடிக்க வைக்கப்பட இருந்த கார் குண்டு ஒன்று பிரித்தானிய நிர்வாகத்திலுள்ள வட அயர்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வட அயர்லாந்தின் தலைநகரான டுப்ளினுக்கு அருகிலுள்ள துறைமுக நகரான Dun laoghaire-ல் வீதிச் சோதனையில் ஈடுபட்ட அயர்லாந்துப் பொலிசார், கார் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்ட இந்தக்குண்டுகளை கண்டுபிடித்தனர்.

அந்தக் காரில் இருந்தவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் அந்தக்குண்டு பொருத்திய கார் பிரித்தானியாவுக்குச் செல்ல இருந்ததாகத் தெரியவந்தது. 2 ஆண்களும் 3 பெண்களுமாக ஐவரை வட அயர்லாந்துப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரித்தானிய....

விடாத பறப்புத் திறனையும் உடைய இவ் விமானங்கள் குறைந்த நீள ஓடுபாதையிலும் இயங்கக்கூடியன.

அண்மையில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது மூழ்கடிக்கப்பட்ட கலங்களுக்கு ஈடுசெய்யுமுகமாகவே, கூவர் கலங்களின் கொள்வனவு முயற்சி நடைபெற்று வருகிறது. M-10 கூவர் கடற்கலங்கள் பத்துத் தொன் வரையான பொருட்களை ஏற்றமுடியுமென்று, தற்போதுள்ளவற்றை விட அதிவேகமாக செல்லக் கூடியதெனவும், ஆழம் குறைந்த கடற்பரப்பினூடாகச் சென்று இவை தரையிறங்கக்கூடியன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இராணுவ....

இதேவேளை சிறீலங்காப் படையினர் நாகர்கோயில் பகுதியை நோக்கி மேற்கொண்ட எறிகணைவீச்சில் மூன்றுவயது குழந்தை உட்பட இருவர் படுகாயப்படுத்தப் பட்டுள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### வாரிக்குத்தியூரில்....

பார நிரப்புவண்டி (லோடர்), பார இழுவை வண்டி (ரிப்பர்) ஆகிய வாகனங்களில் குண்டுகளைப்பொருத்தி அவற்றை வெடிக்கவைத்து வாகனங்களை அழித்துவிட்டு திரும்பிச் சென்றுவிட்டனர்.

தாங்கள் சிங்களவர்களாக இருந்தபோதும் தொழிலாளர்களான தம்மை இவ் ஆயுதபாணிகள் எதுவித தீங்குமிழைக்காது சென்றமை, தமக்குப் பெரிய கொடையாக அமைந்துவிட்டதெனவும் இத் தொழிலாளர்கள் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கொழும்பு வரும்....

கொழும்பு பயணத்திற்கு புதிய கட்டுப்பாட்டினை ஏற்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சிடம் வற்புறுத்தி வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாகவே தினமும் மூன்றுதடவை இடம்பெற்ற லயன் விமானச் சேவை இரண்டு தடவையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, கொழும்பு விடுதிகளில் தங்க அனுமதி கேட்கும் தமிழர்களிடம் கிராம சேவகர் அத்தாட்சிக் கடிதம் ஒன்று இருந்தால் மட்டுமே அனுமதிக்க வேண்டும் என புதிய நடைமுறை உத்தரவு விடுதி உரிமையாளர்களுக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மனைவியைக்....

மனைவியை மீண்டும் கொலை செய்ய தலைமறைவாக இருந்த வேளையே அவரது குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது. கொல்லப்பட்ட இவரது உடல் தற்போது மட்டு. வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### தென்னாபிரிக்காவில்....

களை சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. காலை 9 மணியில் இருந்து 11 மணிவரை நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தின் பின், நான்கு அமைப்புக்களும் ஒன்றிணைந்து சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை கண்டித்து, தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபையின் தலைமை இயக்குநர் அலிபக்கரிடம் மனு ஒன்றினையும கையளித்தனர்.


லாச்சப்பலில்
சலவை
இயந்திரங்களுடன்
கூடிய கடை
குத்தகை
விற்பனைக்கு

59 Rue Louis Blanc
(மக்கள்கடைக்கு
அருகமையில்) உள்ள
சலவை இயந்திரங்களுடன்
கூடியகடை குத்தகை/
வாடகைக்கு உடனடியாக
உள்ளது.
மேலதிக விபரங்களுக்கு
01 48 05 81 73.


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**ரமணி ஜெயக்குமார்**
(கனடா)

மலர்வு: 08.02.69
உதிர்வு: 03.04.97
திதி: 23.04.98




ஊரோடு வெறுத்திருந்தேன்!
உறவென்று வாழ்ந்திருந்தேன்!
ஆரோடு கோபம் அருமைத் தங்கையே?
அம்மா அப்பாவை விட்ட கன்றாய்!
ஆராரோ பாடவேண்டிய உந்தன்
அருமைக் குழந்தைகளும் தவித்தார்!
பாரோடு ஏன் இந்த வெறுப்பு?
பரிதவிக்க விட்டுச் சென்றாயே!

கண்ணோடு கண்ணாக வைத்திருந்தேன்!
களிப்பான வாழ்வு கண்டு மகிழ்ந்திருந்தேன்!
பொன்னோடு பூவாகப் பார்த்திருந்தேன்!
உன்னோடு மகிழ்ந்திருந்த கணவரும்
உற்றார் உறவினரும் கலங்கி நின்றார்!
என்னோடு கோபம் என்ன தங்கையே?
எதற்காக விட்டுப் பிரிந்தாய் என்னையே?

– உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, கணவன், பிள்ளைகள், சகோதரர்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

தகவல்: கரன் (பிரான்ஸ்)
Tel: 0142809428 / 0614661539

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஆழ்வார் சின்னையா**
புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

மலர்வு: 16.02.1931 உதிர்வு: 07.04.1996

அன்புத் தெய்வமே!
மாதங்களானாலும் பல
வருடங்களானாலும், மறையுமா
உம் நினைவு
தெய்வத்தை கோவிலிலோ
தேடுவது கிடையாது
உம்மைவிட தெய்வமொன்றை
உள்ளமிது அறியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும் மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சி. சந்தியா (முன்றானி) - தொலைபேசி: 079-40 70 532


நித்தி
வாகன சேவை


வீட்டுத் தளபாடங்களை
ஏற்றி இறக்கவும்,
ஐரோப்பிய
நாடுகளுக்குமான சகல
போக்குவரத்துக்கான
வாகன வசதிகளுக்கும்
இன்றே நாடுங்கள்



உங்கள் தொடர்புகட்கு-
நித்தி
Tel: 01 48 05 02 14 /
01 43 03 07 08,
(Répondeur) 01 49 23 97 32
அவசரத்தொடர்புகளுக்கு.
06 07 34 89 51

ரவி வாகனசேவை

உங்கள் அனைத்து வாகனத்
தேவைகளுக்கும் நீங்கள்
தொடர்புகொள்ளவேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689



AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும்
மொத்த விலையில் கொடுக்கப்படும்,
மரக்கறி வகைகளும் மலிவான
விலையில் மொத்தமாகப்
பெற்றுக்கொள்ளலாம். Rungis
மரக்கறி வகைகளும் மொத்த
விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

லண்டனில் புதுப் பொலிவுடன்
கணபதி தமிழ்க்கடை

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள் +
மளிகைப்பொருட்களுக்கு
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே
இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

# தென்னாபிரிக்காவில் சிறீலங்கா கிரிக்கெட் அணி
# விளையாட்டு மைதானத்தில் சிறீலங்கா அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(06.04.98)

தென்னாபிரிக்கா ஜோகன் னெர்ஸ்பேர்க்கில் நகரில் சிறீ லங்கா கிரிக்கெட் அணிக்கும், தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிக்கும் இடையில் நடைபெற இருந்த கிரிக்கெட் போட்டியில் பல அடக்குமுறைக்கான எதிர்ப்பு அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமாக இருந்தவேளை, தென்னாபிரிக்க தமிழர் அமைப்புகளான தமிழீழ ஆதரவாளர் அமைப்பு, சிறீலங்கா அடக்குமுறைக்கு எதிரான மக்கள் இயக்கம், நீதிக்கும் சமாதானத்திற்குமான திராவிடர் அமைப்பு, ஆகிய நான்கு அமைப்புக்களும் ஒன்றிணைந்து போட்டி நடைபெற ஏற்பாடாகியிருந்த விளையாட்டு மைதானத்தின் முன்றலில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தி இருந்தார்கள்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரித்து பதாகைகளை தாங்கியவாறு கோசங்கள் எழுப்பப்பட்டதுடன், பல்லாயிரக் கணக்கான ஆங்கில மொழியில் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

போட்டியினைப் பார்வையிட வந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் கவனத்தை இவ் ஆர்ப்பாட்டம் ஈர்ந்து கொண்டது மட்டுமல்லாது, பல பத்திரிகை நிருபர்களும் தொலைக்காட்சிச் சேவையினரும் செய்தி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பிரித்தானிய போர் விமானங்கள்-கப்பல்களை வாங்குவதற்கு சிறீலங்கா பெருமுயற்சி

சிறீலங்கா வான்படையில் பிரித்தானியத் தயாரிப்பான ஹெர்குலிஸ் C-130 ரக சரக்கு விமானங்களையும், கடற்படைக்கென M-10 கூவர் வேகக் கலங்களையும் இணைப்பதற்காக சிறீலங்கா அரசு பெரும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது.

ஹெர்குலிஸ் விமானங்களுக்கான பேச்சுவார்த்தைகளை பிரித்தானியாவின் விமானப் படையுடன் மேற்கொண்ட சிறீலங்காத் தரப்பு, பயன்படுத்தப்பட்ட மூன்று ஹெர்குலிஸ் விமானங்களையாவது தந்துதவுமாறு 'வலியுறுத்தி' வருகிறது. இதே நேரம் கடற்படைக்கென M - 10 கூவர்கலங்களை கொள்வனவு செய்வதற்காக பிரித்தானிய றொம்சேயிலுள்ள ஏ.வி.எஸ். கூவர் தயாரிப்பு நிறுவனத்துடன் பேச்சுக்களை நடத்தியுள்ளது. ஹெர்குலிஸ் வகை விமானம், 100 பயணிகளுடன், 22 தொன் சரக்கினையும், தொடர்ச்சியாக பத்துமணிநேர இடை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## வாரிக்குத்தியூரில் 3 வாகனங்கள் தகர்ப்பு

சிறீலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சாலைகளில் செப்பனிடல் பணிகளை மேற்கொள்ளவென அரசால் அனுப்பிவைக்கப்பட்ட கனரக வாகனங்கள் மூன்று, ஆயுதம்தாங்கிய இளைஞர்களால் வவுனியா - மன்னார் வீதியிலுள்ள வாரிக்குத்தியூர் பகுதியில் வைத்து குண்டுவைத்துத் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளன.

வவுனியா - கிளிநொச்சி ஏ-9 நெடுஞ்சாலையில் திருத்தப் பணிகளுக்கென இவ் வாகனங்கள் வந்தபோது பிற்பகல் இரண்டுமணியளவில் அப் பகுதிக்கு வந்த ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் அணியொன்று, அங்கிருந்த சிங்களத் தொழிலாளர்களிடம் அவர்களது காதுகளை இறுகத் துணியினால் பொத்தியபடி வீதியின் ஓரத்தே படுத்து பாதுகாப்பு தேடும்படி பணித்துவிட்டு, அங்கு தரித்து நின்ற மட்டூர்தி (புல்டோசர்)

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கொழும்பு வரும் குடாநாட்டு மக்களுக்கு புதிய தடை முயற்சி

இராணுவ ஆக்கிரமிப்பிற்குட்பட்ட யாழ் குடாவிலிருந்து கொழும்புவர மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியுடன் விமானம் மூலம் அனுமதிக்கப்படும் மக்களுக்கும் மேலும் தடையை ஏற்படுத்த பாதுகாப்புத் தரப்பினர் புதிய கதை ஒன்றினை திரித்து வெளியிட்டு வருகின்றனர்.

அண்மைக் காலங்களில் கொழும்பில் ஊடுருவியுள்ள புலிகள் யாழ் குடாநாட்டிலிருந்தே வருகின்றனர் எனவும், இவர்கள் யாழிலிருந்து விமான மூலம் வரும் மக்களுடன் வருவதாகவும் தெரிவித்த பாதுகாப்பு தரப்பினர், யாழ் -

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## இராணுவ வாகனம் வெடித்துச் சிதறியது

(04.04.98)

வடமராட்சி கிழக்கில் தமது நிலைகளை பலப்படுத்தி, விஸ்தரித்துவரும் விடுதலைப் புலிகள் இன்று முற்பகல் வெற்றிலைக் கேணிப் பகுதியில் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

காலை 11.30 மணியளவில் மருதங்கேணிப் பகுதியிலிருந்து வெற்றிலைக்கேணியை நோக்கி உழவு இயந்திரம் ஒன்றில் பயணம் செய்த சிறீலங்காப் படையினர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டு, இராணுவ வாகனம் முற்றாக சிதறடிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குலில் இரண்டு படையினர் அவ்விடத்திலே கொல்லப்பட்டு பலர் படுகாயப் படுத்தப்பட்டுள்ளதாக நாகர் கோவில் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மனைவியைக் கொல்ல முயன்ற ராசிக் குழு உறுப்பினர் கொலை

மட்டு - ஏறாவூர் தளவாய் பகுதியில் கடந்த மாதம் 6-ம் திகதி தனது வீட்டினுள் புகுந்து இருவரை கொலைசெய்து இருவரை படுகாயமடைய வைத்த சிறீலங்கா இராணுவத்துடன் இயங்கும் ராசிக் குழுவின் உறுப்பினர் ஒருவர், அவரது குழுவைச் சேர்ந்தவர்களால் கடந்தவாரம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சிங்கராசா மோகன் (20) எனும் இவ் இளைஞர் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது ஆயுதத்துடன் வீட்டினுள் நுழைந்து கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார். அதன் போது இவரது மனைவியும் எட்டுமாதக் குழந்தையும் படுகாயமடைய, மனைவியின் தாயாரும் அவரது சகோதரியும் அவ்விடத்திலேயே துடிதுடித்து இறந்துள்ளனர். காயமடைந்த

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில்
ஆச்சீஸ்

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும்
பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய,
புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள்,
சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள
Archie'S Tel: 0181-2053652
205, Edgware Road, Colindale-Nw 9.